# கல்கி

ஸ்வீ[illegible]ா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



வங்கத்து மீனாட்சி!

KALKI • 13.09.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



## பாசன நீரா... பாய்ஸன் நீரா?

– நோயில் நொய்யலாறு

## எனர்ஜி எஸ்.எம்.எஸ்.

– இயக்குநர் ராஜா

# உதயமாகும் விஜய் காங்கிரஸ்?





# கல்கி

13.09.2009

கல்கி

தரம் நிரந்தரம்

# மனசுக்குள்

துள்ளி எழும் காங்கிரஸ்,
தூண்டில் போடும் விஜயகாந்த்,
திணறி நிற்கும் தி.மு.க.,
- ஆஹா அரசியலைக் கவிதையா லேயே கலக்கறீங்களே தலைவா!

**- ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி**

டால்மியாபுரம் கணேசன் எழுதும் 'சங்கராபுரம்' அனுபவ முதிர்ச்சி பெற்ற வார்த்தைகளினால் அகத்தையும் புறத்தையும் சுத்திகரிக்கிறது!

**- சாந்தி சுந்தர், நெய்வேலி**

பாண்டிச்சேரி சிறப்பிதழ்களைச் சிறப்பாகத் தயாரிக்க உதவிய வாசகர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட்டு அவர்களைப் பெருமைபடுத்தி உள்ளீர்கள். இதான் கல்கியின் பெருந்தன்மை!

**-எஸ்.ராமசாமி, ஈரோடு**

'பிங்க் பியூட்டி' என்ற கட்டுரை மனத்துக்குள் பட்டாம்பூச்சியைப் பறக்க விட்டது!

**- ஆர்.பிருந்தா ரமணி, மதுரை**

முஸ்லிம் கட்டிய முருகன் கோயில் கட்டுரை பாண்டியில் நிலவும் மதநல்லிணக்கத்தை எடுத்துக்காட்டியது.

**- லதா ராஜகோபால், சென்னை - 24**

மாங்கனி திருவிழா செய்தி, வெகு தித்திப்பு!

**- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், நாகர்கோயில்**

சாயபு - சரோஜினி காதல், பணி, கல்யாணம் சுவையான ஒரு திரைப்படம்.

**- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்**

இடைத்தேர்தல் பாடங்களை நன்கு அனுபவித்து எழுதியிருக்கிறீர்கள்! புறக்கணித்த கட்சிகளுக்குச் சரியான சாட்டையடி!

**- வே.முருகேசன், ஆதம்பாக்கம்**

'வேட்டைக்காரன்' கார்ட்டூன், கருத்தைக் கவர்ந்ததுடன் சிரிப்பையும் வரவழைத்தது.

**- என்.சித்தாலட்சுமி, சென்னை - 40**

> **துப்பறிய வாங்க**
> **போட்டி - 9 முடிவு**
> **சரியான விடையை எழுதியவர்களுள் குலுக்கல் முறையில் தலா ரூ.200/- பரிசு பெறுபவர்கள்:**
> 1. கே.ஆனந்தன், தர்மபுரி
> 2. வ.பழனி, புதுச்சேரி
> 3. சி.பூங்கோதை, சென்னை
> 4. என்.ஏ.லதா, பழநி
> 5. உமாதேவி ஜனார்த்தனன், கோயம்புத்தூர்

'சுடச்சுட நியூஸ் தந்த 'சினி சிப்ஸ்' வெரி யூஸ்! பாராட்டுக்கள் பல பல!''

**- ஜெ.ரெஜினாபானு, பழனி**

கமலின் ஐம்பதாண்டு திரைச் சாதனையை வாழ்த்தி, 'கம...கமவென இலக்கிய மணம் வீசும் வெண்பா ஊதுவத்தியை ஏற்றியிருக்கிறார் கிரேஸி!

**- ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி**

## வட்டமேஜை

மூளையைக் கழற்றி வைத்துவிட்டுச் சிந்திக்காமல் ரசித்து வரவேண்டிய படம் என்பதை 'கந்தசாமி' விமர்சனத்தில் சொல்லாமல் சொல்லியிருந்தீர்கள். சபாஷ்!

**- எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்**





**கல்கி**

**பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்**
அச்சிட்டு வெளியிடுபவர்:
**லக்ஷ்மி நடராஜன்**

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
**கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா**

வடிவமைப்பு :
**எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்**

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**

**ஆசிரியர் குழு :**
**044 - 4343 8822**
kalki@kalkiweekly.com

**விளம்பரப் பிரிவு :**
**044 - 4343 8811**
marketing@kalkiweekly.com

**சந்தா பிரிவு :**
**044 - 4343 8833**
subscription@kalkiweekly.com

**விற்பனை பிரிவு :**
**044 - 4343 8844**
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
**www.kalkionline.com**

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
**www.sangapalagai.com**

**சந்தா விவரம் (ஒரு வருடம்) :**
உள்நாடு : **ரூ.500/-**
வெளிநாடு : **ரூ.3,800/-**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

# உதயமாகும்

''நான் பிறந்த இந்தத் தமிழ் மண்ணுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்ற வெறி - வேகம் - தாகம் - துடிப்பு எனக்கு இருக்கிறது. ஆனால், நிச்சயம் உங்கள் தலைவனாக அல்ல; மக்கள் இயக்கத்தின் ஒரு தொண்டனாக, உங்களோடு இருந்து பாடுபடுவேன். அரசியல் ஓர் ஆபத்தான கடல். அதில் எந்த இடத்தில் நம்மைத் தூக்கிப்போட்டாலும் நீந்திக் கரையேற வேண்டும். எனவே, ஆழ்கடலில் நீந்துவது எப்படி என்ற நுணுக்கத்தைக் கற்றுக்கொண்டு கடலில் குதிப்பதுதான் புத்திசாலித்தனம்''.

- இது வேறொன்றுமில்லை. கடந்த மாதம் பத்தாம் தேதி 'இளைய தளபதி விஜய் மக்கள் இயக்கத்'தின் சார்பில் இலவச கம்ப்யூட்டர் மையத்தைத் திறந்து வைத்து புதுக்கோட்டையில் நடிகர் விஜய் பேசியது. ராகுலைச் சந்தித்து, தமிழக அரசியலில் பரபரப்பு தூசியைக் கிளப்பியதன் மூலம் அரசியல் கடலில் நீச்சலடிக்கக் கற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டார் விஜய். காங்கிரஸில் இணையப் போகிறார் என்று மீடியா டமாரமடித்துக் கொண்டிருக்க... 'இல்லையில்லை, அவர் கச்சேரி இனி தனிக்கச்சேரி' என்றும் குரல்கள் கேட்கின்றன. விஜய் என்ன திட்டம்தான் வைத்திருக்கிறார்?

பிறந்த நாளன்று எப்போதும் நலத்திட்ட உதவிகளைச் செய்துவிட்டு, ரசிகர்களுக்கு, ''ஒழுங்காக இருக்கணும்; அம்மா அப்பாவை மதிக்கணும்'' என்று சொல்லி விட்டு, சமர்த்தாகத் தம் தொழிலைப் பார்க்கக் கிளம்பிவிடுவார். ஆனால், இந்த வருடம் பிறந்த நாளைக்கு முன்னர் அவரைச் சந்தித்த மாவட்ட நற்பணி மன்றப் பொறுப்பாளர்கள், 'தலைவா, கட்டாயம் நீ அரசியலுக்கு வந்தே தீர வேண்டும்' என்று ரகளை செய்து உசுப்பி விட்டார்கள். அப்பா இயக்குநர் எஸ்.ஏ. சந்திர சேகரின் சுட்டுவிரல் கட்டளைக்குக் கட்டுப்படும் விஜய், அவரைக் கலந்து ஆலோசித்தார். அதன் முதல் கட்டம்தான் வெள்ளோட்டமாக விடப்பட்டிருக்கும் 'மக்கள் இயக்கம்'. ரசிகர் மன்றம் அடைந்திருக்கும் பரிணாம வளர்ச்சி இது.

இதற்கிடையில் புதுவையில் ஆனந்த்



என்ற சுயேச்சை சட்டமன்ற உறுப்பினர் நடத்திய நலத்திட்ட உதவிகள் விழாவில் கலந்துகொண்டார் விஜய். இந்த ஆனந்த், புதுவை விஜய் நற்பணி மன்றப் பொறுப்பாளர். அந்த விழாவில் புதுவை முதல்வரும் கலந்துகொண்டார். அரசியலில் குதிக்க தனக்கும் ஆசையிருப்பதாக விஜய் அவரிடம் சொல்ல, ராகுல் காந்தியைச் சந்திக்க உடனே ஏற்பாடு செய்யப்பட்டது. அப்பாவும், மகனும் தில்லிக்குப் பறந்து ராகுலைச் சந்தித்தது, விஜய் மக்கள் இயக்கத்தின் முக்கியப் பொறுப்பாளர்களுக்குக்கூடத் தெரியாதாம். ''சந்தித்ததை நான் மீடியாவில் சொல்லிவிட்டேன். என்ன பேசினோம் என்பதைச் சொல்ல முடியாது. கொஞ்சம் பொறுங்கள். விரைவில் ஒரு முடிவெடுத்து அறிவிப்போம்!'' என்கிறார் எஸ்.ஏ.சந்திரசேகர்.

**த**மிழகம் முழுக்க, ஆங்காங்கே இருக்கும் விஜய் மக்கள் இயக்கப்



# விஜய் காங்கிரஸ்?

பிரமுகர்களிடம் பேசினோம். 'எந்தக் கட்சியிலும் சேரக்கூடாது. தனித்தே தான் இயங்கணும்' என்று அடித்துச் சொல்கிறார்கள் அவர்கள். ''தளபதி, ராகுலைச் சந்தித்திருக்கிறார். நல்லது. ஆனால், காங்கிரஸில் சேர்ந்தால், தமிழ்நாட்டில், நம் காலைப் பிடித்திழுக்க நாற்பது கோஷ்டிகள் இருக்கின்றனவே... அந்தக் கோஷ்டிப் பூசலில் சிக்குண்டு காணாமல் போய் விடுவாரே... ஆனானப்பட்ட சிவாஜியையே விரட்டியதுதானே காங்கிரஸ்'' என்றார் ஒரு பிரமுகர். அதேசமயம், தனிக்கட்சி தொடங்கிய நடிகர்கள் தாக்குப்பிடிக்க முடியாமல் ஒதுங்கியதையும் அவர்கள் சொல்கிறார்கள்.

ஆனால், விஜய்யை மற்ற நடிகர்களோடு ஒப்பிடக் கூடாது. தமிழ்நாட்டில் ரஜினிக்கு அடுத்தபடியாக பிரபலமாகப் பேசப்படும் நடிகர் விஜய்தான் என்று லயோலா கல்லூரி கருத்துக்கணிப்புகூட சொல்லியிருக்கிறது. இதனால்தான் எங்கள் தளபதியை வளைத்துப்போட காங்கிரஸ் விரும்புகிறது'' என்கிறார் முக்கிய மக்கள் இயக்கப் பிரமுகர். ''தனிக்கட்சியா; காங்கிரஸில் இணைகிறாரா என்பதல்ல எங்கள் கவலை. தளபதி என்ன முடிவெடுத்தாலும் அவர் பின்னால் போவதற்கு நாங்கள் தயார் என்பது மட்டும் நிச்சயம்'' என்கிறார் 'ப்ரியமுடன் விஜய்' என்ற பத்திரிகை நடத்தும் பி.டி. செல்வகுமார்.

''தளபதி எந்த முடிவெடுத்தாலும் எங்களைக் கலந்து பேசித்தான் செய்வார். அவர் எடுக்கும் எந்த முடிவுக்கும் நாங்கள் கட்டுப்படுவோம்'' என்கிறார் விஜய் மக்கள் இயக்கத் தலைவர் ஜெயசீலன். தமிழ்நாட்டில் சுமார் 32,000 விஜய் ரசிகர் மன்றங்கள் இருக்கின்றனவாம். ஒவ்வொரு மன்றத்திலும் குறைந்தது இருபது உறுப்பினர்களாவது இருப்பார்களாம். கணக்கில் வராமல் இன்னும் 10,000 மன்றங்கள் இருக்கக்கூடும் என்கிறார்கள். 256 மாணவ - மாணவிகள் படிப்பதற்கு விஜய் உதவி செய்கிறார். இது தவிர, ஏழைப் பெண்களுக்குத் திருமணம், ஏழைக் குழந்தைகளுக்கு

## ''விரைவில் ஒரு முடிவெடுத்து அறிவிப்போம்''



• எஸ்.ஏ.சந்திரசேகர்

மோதிரம் என்று வருட, வருடம் பிறந்தநாளன்று கலக்குகிறார்.

'திரைப்படத் துறையில் விஜய்க்கு நேரம் சரியில்லை என்றுதான் சொல்ல வேண்டும். சென்ற வருடம் வந்த 'குருவி', 'வில்லு' போன்ற படங்கள் எதிர்பார்த்தபடி போகவில்லை. ராகுலைச் சந்தித்தது, 'அரசியலில் குதிப்பேன்' என்று சொன்னதுகூட, ஒரு பரபரப்பை உண்டாக்கி, இப்போது நடித்துக் கொண்டிருக்கும் 'வேட்டைக்காரன்' படத்துக்கு எதிர்பார்ப்பை உருவாக்கத்தான். அவர் அரசியலுக்கும் வர மாட்டார். தனிக் கட்சியும் தொடங்க மாட்டார்' என்று சொல்லும் திரைப் பிரமுகர்களும் இருக்கிறார்கள். மக்கள் இயக்கத்தின் செயலாளரான ரவிராஜா, ''இதுபோல ஸ்டண்ட் அடித்து படத்தை ஓட்ட வேண்டிய அவசியம் எங்கள் தளபதிக்கு இல்லை'' என்கிறார் .



**"காங்கிரஸ் இயக்கத்தில் நடிகர்கள் பங்கெடுத்துக் கொள்வது புதிய விஷயமல்ல"**

தமிழ்நாட்டு காங்கிரஸ் பிரமுகர்களுக்கும் ராகுல் - விஜய் சந்திப்பில் பேசப்பட்டது என்ன என்று தெரியாது. ''காங்கிரஸ் கவர்ச்சி அரசியலை விரும்புகிறதா?'' என்று தங்கபாலுவிடம் கேட்டோம். ''காங்கிரஸ் இயக்கத்தில் நடிகர் நடிகைகள் பங்கெடுத்துக் கொள்வது புதிய விஷயமல்ல; தமிழ்நாட்டில் நடிகர் திலகம் சிவாஜி உட்பட பல நடிகர்கள் காங்கிரஸுக்காக உழைத்திருக்கிறார்கள். மராட்டியத்தில் கோவிந்தா, கர்நாடகத்தில் அம்பரீஷ் போன்ற நடிகர்களும் காங்கிரஸ் இயக்கத்தில் இருக்கிறார்கள்!'' என்கிறார் தங்கபாலு.

2011 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னர், தம் பின்னால் அணிவகுக்க 50 லட்சம் இளைஞர்களைத் தயார் செய்யும் முக்கிய அஜண்டாவுடன் களத்தில் குதித்திருக்கிறார் விஜய். மாவட்டத்துக்குக் குறைந்தபட்சம் ஒரு லட்சம் இளைஞர்களை மக்கள் இயக்கத்தில் சேர்க்கப் போகிறார்களாம். இந்த இயக்கத்தில் போலி உறுப்பினர்கள் இருக்கக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். மனுவுடன் வாக்காளர் அடையாள அட்டை அல்லது ரேஷன் கார்டு நகல் வைக்க வேண்டுமாம். ''எதிர் வரும் இரண்டாண்டு காலத்தில் 50 லட்சம் இளைஞர்கள் இந்த இயக்கத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இதை என்றைக்கு உங்களால் சாதிக்க முடிகிறதோ அன்றைக்கு இந்த மக்கள் இயக்கம் முழு அரசியல் அமைப்பாக மாறும். இது முடியாத காரியமல்ல'' - இதுவும் விஜய் புதுக்கோட்டையில் பேசியதுதான்.

விஜய் அரசியலில் குதிக்கும் சூழலில் அவர் தனித்தியங்குவது தங்களுக்கு நல்லது என்று தி.மு.க. பிரமுகர்கள் கருதுகிறார்கள். காரணம் விஜயகாந்தின் வோட்டுகளை அவர் பிரித்தெடுப்பாராம். 'தனித்த தமது சக்தியைக் காண்பிக்க விரும்பும் விஜய், எந்தக் கட்டத்திலும் விஜயகாந்துடன் இணைந்து செயல்பட விரும்பவில்லையாம். வேட்டைக்காரன் விஜய் வோட்டுக்காரர் விஜய்யாக வெற்றி பெறும் 'ஸீன்' அவசரமாக எழுதப்பட்டு வருகிறது!

**- ப்ரியன்**

● கோடம்பாக்கத்து லேட்டஸ்ட் ஃபேஷன், படங்களை ரீ-மேக் பண்ணுவதுதான் ● ரஜினி நடித்த பில்லா படத்தை, அஜித்தை நடிக்க வைத்து ரீமேக் பண்ணியதில் கிடைத்த வெற்றி எல்லா இயக்குநர்களையும் யோசிக்க வைத்திருக்கிறது. ● அந்த வரிசையில் 27 வருடங்களுக்கு முன் வெளிவந்து வெள்ளிவிழா கொண்டாடிய 'பாலைவனச் சோலை' படம், ரீமேக் ஆகிறது ● 'ராபர்ட் - ராஜசேகர்' என்ற இரட்டையர்கள் இயக்கிய இப்படத்தை, தற்போது திரைக்கதை, வசனம், எழுதி எஸ்.தயாளன் இயக்குகிறார். ● பழைய 'பாலைவனச் சோலை'யில் சந்திரசேகர் செய்த கேரக்டரில் இப்போது நிதின் சத்யா நடிக்கிறார். ● வாணி ஜெயராம் பாடி சூப்பர் டூப்பர் ஹிட்டான 'மேகமே மேகமே' பாடல் ரீ கம்போஸ் ஆகிறது ● அப்போது படத்தின் இரண்டு பாடல்களை எழுதிய வைரமுத்து, இப்போது அனைத்துப் பாடல்களையும் எழுதுகிறார் ● 'சொல்லாமலே' படத்துக்குப் பிறகு காணாமல் போன இசையமைப்பாளர் பாபி, இந்தப் படத்துக்கு இசையமைக்கிறார் ● சுஹாசினி கேரக்டரில் நடிக்கிறார் கார்த்திகா.

(பாலைவனச்சோலை பார்வையில் குளிர்ச்சி சேர்க்குமா?)



★ பிரமாண்டத்துக்குப் பெயர் போன தயாரிப்பாளர் கே.டி.குஞ்சுமோன் முதன்முறையாக கதை-வசனம் எழுதித் தயாரிக்கும் படம் காதலுக்கு மரணமில்லை.



# காதலுக்கு மரணமில்லை...

★ இந்தப் படத்தின் மூலம் சி.பாலாஜி என்ற புதுமுகத்தை இயக்குநராக அறிமுகப்படுத்துகிறார். இவருடைய அறிமுகங்களில் யாரும் சோடைபோனது கிடையாது. உதாரணம், இயக்குநர் ஷங்கர், பவித்ரன், நடிகர்கள் அப்பாஸ், பிரபுதேவா.

★ 'விடாமல் போராடு; விழாமல் முன்னேறு; டீன் ஏஜ் தோற்காது; டேமேஜ் ஆகாது' என்ற பாடலில் குஞ்சுமோன் நடித்திருக்கிறார்.

★ ஒரு பாடல் காட்சிக்கு மட்டும் ஏவி.எம். ஸ்டுடியோவில் பிரமாண்ட செட் போடப்பட்டு படப்பிடிப்பு நடந்திருக்கிறது. செட்டின் மதிப்பு சுமார் 55 லட்சம்!




★ முதலில் நடிக்க மறுத்த சுஹாசினி, கதையைக் கேட்டதும், படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

★ ''என் 32 வருட சினிமா வாழ்வில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்திருக்கிறேன். வெற்றி பெற்றவனைவிட தோல்வியடைந்தவன் அடித்தால் அது வீரியமாக இருக்கும். பல தோல்விகளுக்குப் பிறகு நான் வந்திருக்கிறேன். என் அடி வீரியமாக இருக்கும்'' என்கிறார் குஞ்சுமோன்.

★ ''டைட்டானிக் படத்தின் கிளைமாக்ஸுக்கு நிகராக இருக்கும் 'காதலுக்கு மரணமில்லை' படத்தின் கிளைமாக்ஸ்'' என்கிறார் இயக்குநர் பாலாஜி.

**- மகிமைராஜன்**

# பாரதிக்குக் குல்லா!

அப்போது பாரதியாரிடம் 50, 60 ரூபாய் இருந்தது. வாசலில் துணி விற்போன் வந்தான். குழந்தைகள் எல்லோருக்கும் நிறையத் துணிகள் வாங்கிவிட்டுத் தமக்கும் கோட்டுக்கும் குல்லாய்க்குமாக ஐந்து கஜம் துணி வாங்கினார்.

பிறகு அவரது நண்பர் ஸ்ரீ சங்கர செட்டியார் வீடு சென்றார். அங்கு அந்த சமயம் அவரது தையற்காரன் வந்திருந்தான். ''இந்தத் தையற்காரன் நன்றாகத் தைப்பானா செட்டியார்வாள்?'' என்று கேட்டார். ''ஓ! மிகவும் கெட்டிக்காரன்'' என்றார் செட்டியார்.

வாங்கிய துணிகளையெல்லாம் அப்படியே தையற்காரன் கையில் தூக்கிக் கொடுத்து, ''தம்பி! கோட்டு ரொம்ப நன்றாகத் தைக்க வேண்டும். சரியான அளவு எடுத்துக்கொள். தலையில் வைத்துக்கொள்ள ஒரு குல்லா தைக்க வேண்டும். அது தலைப்பாகை போலவும் இருக்கக் கூடாது. ஹாட் மாதிரியும் இருக்கக் கூடாது. கிரீடம் மாதிரி தலையில் வைத்ததுமே முகத்துக்குப் புதுக் களை ஏற்படும் வண்ணம் புதிய முறையில் தைக்க வேண்டியது. கூலி நீ என்ன கேட்டாலும் கொடுத்துவிடுகிறேன்'' என்று கூறினார்.




நான்கு நாட்களில் தைத்துக் கொணர்ந்தான். கோட்டு ரொம்பப் பெரிய அளவில் இருந்தது. குல்லா கிட்டத்தட்ட கோமாளிக் குல்லா என்று சொல்லலாம்.

புதிய கோட்டை அணிந்து, குல்லாவையும் வைத்துக் கொண்டார். ''தம்பி, ரொம்ப நன்றாயிருக்கிறது!'' என்று கூறி, மும்மடங்கு கூலி கொடுத்து அவனை அனுப்பினார். அப்படியே சமுத்திரக் கரைக்குச் சென்று திரும்பினார். ஜனங்கள் இந்தப் புதிய வேஷத்தைக் கண்டு மிரள மிரள விழித்தனர். கோட்டும் குல்லாயும் சுத்தமாய் அவரது மனதுக்குப் பிடிக்கவில்லை.

''ஆனாலும் தையற்காரன் நல்லவன் தான். செட்டியாருக்கு எப்போதும் தைத்து வழக்கமுள்ளவனாகையால் நமக்கும் தொந்தி தொப்பை ஏற்பட வேண்டுமென்னும் நல்லெண்ணத்தோடுதான் தைத்திருக்கிறான். ஆனால் இந்தக் கோட்டுக்குச் சரியான தொந்தி இந்த ஜன்மத்தில் ஏற்படப் போவதில்லை'' என்று சொல்லிக் கொண்டே, தெருவிற் சென்ற பிச்சைக்காரனைக் கூப்பிட்டு, அவையிரண்டையும் கழற்றி அவனிடம் கொடுத்துவிட்டு, தமது கறுப்புக் கோட்டையும் சரிகை வேஷ்டி தலைப்பாகையும் அணிந்து சந்தோஷத்தோடு உலாவினார்.

**- செப்டெம்பர் 11 பாரதி நினைவு நாள்.**
**(மகாகவி பாரதியின் துணைவியார் செல்லம்மா பாரதி எழுதிய பாரதி சரித்திரம் நூலிலிருந்து...)**



# ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன் : 22760612, 22762299, 29710350
City Office No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

## ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| • காலை சிற்றுண்டி (200 பேருக்கு) | ரூ. 1,000/- |
| • மதிய உணவு | ரூ. 2,000/- |
| • இரவு சிற்றுண்டி | ரூ. 1,000/- |
| • இனிப்பு மற்றும் பால் வழங்குதல் | ரூ. 1,000/- |
| • ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை | ரூ. 1,000/- |
| • ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி) | ரூ. 12,000/- |
| • குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு | ரூ. 2,00,000/- |

**நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு**

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

மழை விடாமல் பெய்துகொண்டிருந்தது. வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த புயல் சென்னை நகரை மிதக்க வைத்தது.

மழை அதிகப்பட்டதால் 'மகா ஸ்டீல் கார்ப்பரேஷன்' மாலை நான்கு மணிக்கே இழுத்து மூடப்பட்டது.

அந்த அலுவலகத்தின் முன் நின்றிருந்த காண்டசா காரின் டிரைவர் சீட்டில் மகா அமர்ந்திருந்தாள். அலுவலகத்தின் முன் பகுதியில் மழைக்குப் பயந்த தொழிலாளர்கள் கூட்டம் ஒன்று நின்றிருந்தது.

மகா ஸ்டீல் கார்ப்பரேஷன்ஸ் எம்.டி. சக்கரவர்த்தி தன் பி.ஏ. ரகோத்தமன் குடை பிடிக்க, காரில் வந்து ஏறினார்.

''மகா... மழை ஓவரா பெய்யுதே... ரோடெல்லாம் என்ன பொசிஷன்ல இருக்கு?''


''ரோடெல்லாம் முழங்கால் அளவு தண்ணி ஓடுது. சினிமா தியேட்டரை எல்லாம் மூடிட்டாங்க. நம்ம பரத்தோட ஸ்கூலுக்கு நாளைக்கு லீவாம்.''

ரகோத்தமன் இன்னும் குடைபிடித்த நிலையில், கார் அருகிலேயே நின்றிருந்தான்.

சக்கரவர்த்தி கண்ணாடியை இறக்க, அவன் குனிந்தான்.

''எங்க ஏரியாவில இருந்து ரெண்டு பேரு வர்றாங்களே... அவங்க வீட்டுக்குப் போயிட்டாங்களா?''

# மனாசு!



''இல்ல சார்... மழை ஓவரா இருக்கே... இங்கதான் நிக்கறாங்க...''

''கார் அந்தப் பக்கம்தானே போகுது. அவங்களை வேணும்னா வரச் சொல்லு. டிராப் பண்ணிடறேன்!''

சக்கரவர்த்தி சொல்ல, மகா சட்டென உஷ்ணமானாள்.

'இவனுங்க எதுக்கு இந்தக் கார்ல?'

ரகோத்தமன் ஆச்சரியத்துடன் தகவல் சொல்ல, அந்த இரண்டு பேரும் தயக்கமாய் வந்து, காரை அணுகினார்கள்.

''ஏறிக்கங்கப்பா... மழையா இருக்குது இல்ல'' சக்கரவர்த்தி சொல்ல, எக்ஸ்ட்ரா தயக்கத்துடன் ஏறினார்கள்.

**தெ**ரு முனையிலேயே அவர்கள் இருவரும் இறங்கிக்கொண்டார்கள்.

''முதலாளின்னா முதலாளிதான்...

**போளூர் சி.ரகுபதி**

என்ன ஒரு மனிதாபிமானம் பார்த்தியா... மழையில் தொழிலாளி கஷ்டப்படுறானேன்னு கார்ல லிஃப்ட் கொடுத்துக் கூட்டிட்டு வந்தாரு பாரு...'' என்றான் ஒருவன்.

காருக்குள் மகா தன் கணவனிடம் கோபத்தில் வெடித்தாள்.

''இது என்ன கட்ட வண்டியா! கண்டவங்களையெல்லாம் ஏத்திக்கிட்டு வர்றதுக்கு? நீங்க பண்றது எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்கலை!''

''எனக்கு மட்டும் பிடிக்குதா என்ன? வண்டி வழியில் நின்னா நீயோ, நானோ இந்த மழையில் இறங்கித் தள்ள முடியுமா? நம்ம டிரெஸ் எல்லாம் அழுக்காயிடாதா? அதனால்தான் ரெண்டு பசங்களையும் வண்டி தள்ளறதுக்கு இருக்கட்டுமேன்னு ஏத்திட்டு வந்தேன்...'' என்றார் சக்கரவர்த்தி, அழுக்காகிப்போன மனத்துடன்!




# கல்கி





2009 செப்டெம்பர் 13
விரோதி ஆவணி 28
மலர் : 68
இதழ் : 7


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

## சேற்றை இறைக்கும் சேத்னா!


“பௌதிக (அணு) விஞ்ஞானம் பற்றி அப்துல் கலாமுக்கு என்ன தெரியும்?” என்று விஞ்ஞானி டாக்டர் சேத்னா பேசியிருப்பது இங்கிதமும் பண்பாடும் அற்ற செயல். இத்தகைய இழிசொற்களால் அப்துல்கலாமின் அறிவும் ஆற்றலும் அந்தஸ்தும் குறையாது என்றாலும், கலாமுக்கு இழைக்கப்படும் அவமதிப்பு நமது நாட்டுக்கு இழைக்கப்பட்டதாகவே கருதவேண்டியிருக்கிறது.

1974ல் இந்தியா முதன்முதலில் அணுகுண்டு பரிசோதனை நிகழ்த்தியபோது, அத்திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்தியவர் டாக்டர் சேத்னா. அவர் தமது துறையில் ஆழ்ந்த அறிவு படைத்தவர் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அறிவுடன் அடக்கமும் பொது நலநோக்கும் இணையாதபோது, சேத்னா பேசியது போன்ற விபரீத வார்த்தைகள்தான் வெளிவரும்.

போக்ரான் - II பரிசோதனையை 1998ல் அவசரஅவசரமாக நடத்தும்படி பா.ஜ.க. அரசு நிர்பந்தித்ததாகச் சொல்கிறார்கள் சந்தானம், பி.கே. அய்யங்கார் ஆகிய இரு விஞ்ஞானிகள். அதனால் அந்தப் பரிசோதனை பிசுபிசுத்துப்போனது என்றும், பா.ஜ.க. அரசுதான் அதை வெற்றியாகச் சித்திரித்து ஆதாயம் தேடிக்கொண்டது என்றும் கூறுகின்றனர். அவ்வாறாயின், இந்த இரு விஞ்ஞானிகளும் 1998லேயே அரசின் நிர்பந்தத்துக்குப் பணிய மறுத்திருக்கலாமே! அதை விடுத்து, இப்போது சேற்றை வாரி இறைப்பது ரசனைக் குறைவுமட்டுமல்ல; ஒரு வகையில் தேசத்துரோகமும் கூட.

இவர்கள் கூறுவது உண்மை என்று ஒரு வாதத்துக்கு ஒப்புக்






கொள்வதானால்கூட, பாதுகாப்புக் காரணங்களுக்காக எடுக்கப்படும் சில ரகசிய முடிவுகள் விஞ்ஞானிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறதுபோது, அவற்றைப் பிற்காலத்தில் போட்டுடைத்து நாட்டின் இறையாண்மைக்கும் ஒற்றுமையுணர்வுக்கும் பங்கம் விளைவிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

அரசுப் பணியில் உள்ள விஞ்ஞானிகளும் சரி, மற்ற மூத்த விஞ்ஞானிகளும் சரி, மிகுந்த மனித நேயத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் செயல்படவேண்டிய காலகட்டம் இது. அணு ஆராய்ச்சி மற்றும் அணுகுண்டு உற்பத்தியின் அபாயங்கள், மனித குலத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்க வல்லவை. அதுமட்டுமல்ல, இன்றைய வேறு பல விஞ்ஞான முன்னேற்றங்களினாலும் சுற்றுச்சூழல் மாசும் இயற்கைச் சமநிலை பாதிப்பும் ஏற்பட்டு வருகின்றன. இவற்றை மனத்தில்கொண்டு, எதிர்காலத் தலைமுறைகளைப் பாதுகாக்கும் வகையில் விஞ்ஞான ஆராய்ச்சியின் அடிப்படைகளையே மாற்றுவதுதான் அறிவுடைமை.

உதாரணமாக, சந்திராயன் திட்டம் என்பது, மேலை நாடுகளுக்கு இணையான விஞ்ஞான ஆற்றலை நாம் பெற்றுள்ளோம் என்பதை நிரூபிக்குமேயொழிய, உலக விஞ்ஞான முன்னேற்றத்தில் புதிதாக எதையும் சாதிக்காது. இத்திட்டம் இப்போது தோல்வியுற்றுள்ளது. திட்ட விஞ்ஞானிகள் அதனை வெளிப்படையாக ஒப்புக்கொண்டது வரவேற்கப்படவேண்டியது.

ஆட்சியில் இருக்கும் அரசுகள் அரசியல் ரீதியாகச் சிந்தித்தே திட்டங்களை வகுக்கும். விஞ்ஞானிகள்தான் தொலைநோக்குமிக்க விஞ்ஞானத் திட்டங்களை உருவாக்க முடியும். தூய்மையும் அமைதியும் சுபிட்சமும் மிக்கதொரு உலகம் எதிர்காலத்தில் அமையத்தான் விஞ்ஞான ஆராய்ச்சி முடுக்கிவிடப்படவேண்டுமேயொழிய, பராக்கிரமும் அச்சுறுத்தலும் அபாயமும் நிரம்பிய இன்றைய சூழலை மேலும் பலப்படுத்தலாகாது.

ஒட்டுமொத்த உலகமும் விஞ்ஞான முன்னேற்றத்தினால் நிகழ்ந்துள்ள அபாயகரமான பக்கவிளைவுகளை எதிர்த்து, ஒருங்கிணைந்து போராட வேண்டிய தருணம் இது. ●


சிரி... சிரி... சிரி...
பக்கத்து ஃபிளாட்!
மகனே...
சொல்லுங்க சுவாமி...
அண்ணாநகர்ல உனக்கு ஒரு ஃபிளாட் இருக்குதானே?
அட... உங்களுக்கு எப்படி தெரியும்...?
உன் பக்கத்து ஃபிளாட் என்னோடதுதான் மகனே...!
தென்றல் சண்முகசுந்தரம்
உங்களுக்கு என்ன செய்யுது...?
சுண்டு விரல்ல இலேசா வலி...
...ஸ்கேன் எடுத்துப் பார்க்கணுமா டாக்டர்?
எப்படி கரெக்டா சொல்றீங்க?
நீங்க பயங்கர பணக் கஷ்டத்துல இருக்கறதா வெளியில பேசிக்கிறாங்களே...
டி.முருகேசன்

# கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை



அன்புடன் அழைக்கிறது

# அமரர் கல்கி பிறந்தநாள் விழா

செப்டெம்பர் 9, 2009

(புதன் கிழமை)

அமரர் கல்கி நினைவு விருதும் பரிசும் பெறுபவர்:

நாதஸ்வர இசைக் கலைஞர்

**திரு இஞ்சிக்குடி சுப்ரமணியன்**

தலைமையுரை:

முன்னாள் தலைமைத் தேர்தல் அதிகாரி

**திரு என்.கோபாலஸ்வாமி**

நாதஸ்வர இன்னிசைக் கச்சேரி

**திரு இஞ்சிக்குடி சுப்ரமணியன் குழுவினர்**

பாரதிய வித்யாபவன் அரங்கம்,

மயிலாப்பூர், சென்னை - 600 004

மாலை 6.00 மணி

**அனைவரும் வருக!**



பங்களாவின் சிட் அவுட்டில் உட்கார்ந்து 'ஹிண்டு' நாளிதழைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த ரத்னசபாபதி, போர்டிகோவில் வந்து நின்ற போலீஸ் ஜீப்பைப் பார்த்து இலேசாய் முகம் மாறி எழுந்தார்.

ஜீப்பிலிருந்து அந்த இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் இறங்கினார்கள். அவர்களுக்குப் பின்னால் மருண்ட பார்வையோடு ஓர் அழகான பெண்.

இன்ஸ்பெக்டர் கேட்டார்: ''ஸார்...! நீங்க மிஸ்டர் ரத்னசபாபதி?''

''எஸ்...''

''ரிடையர்ட் சேர்மன் ஆஃப் துங்கபத்ரா க்ரூப்ஸ்?''

''ஆமா...''

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்!''

**10**

**க்ரைம்.காம்**



ரத்னசபாபதி அவர்களோடு ஹாலுக்குள் நுழைய, அவருடைய மனைவி மங்கையர்க்கரசி கலவரமாய் எதிர்ப்பட்டாள்.

''என்னங்க...! போலீஸ்?''

''அதான் எனக்கும் புரியலை... என்கிட்டே ஏதோ

## ராஜேஷ்குமார்

# பணம் பேசியது



பேசணுமாம்...''

இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''மிஸ்டர் ரத்னசபாபதி...! இந்தப் பெண் யார்ன்னு உங்களுக்குத் தெரியுதா...?''

''தெரியலையே!''

''ஏம்மா... உங்களுக்குத் தெரியுதா?''

மங்கையர்க்கரசியும் உதட்டைப் பிதுக்கினாள். ''தெரியலையே!''

''இந்தப் பெண் உங்க ரெண்டு பேரையும் பெரியப்பா, பெரியம்மான்னு சொல்லுதே...''

ரத்னசபாபதியின் முகம் கோபத்துக்குப் போயிற்று.

''என்ன சொன்னீங்க... நாங்க இந்தப் பொண்ணுக்கு பெரியப்பா பெரியம்மாவா...?''

''அப்படித்தான் ஒரு மணி நேரமாய்ச் சொல்லிட்டிருக்கா.''

''இன்ஸ்பெக்டர்! அவ சொல்றது அப்பட்டமான பொய். அவளை அரஸ்ட் பண்ணி உள்ளே தள்ளுங்க...'' என்றாள் மங்கையர்க்கரசி.

''அப்படியெல்லாம் அரஸ்ட் பண்ண முடியாதம்மா....''

''ஏன்...?''

''ஏன்னா... நாங்க உண்மையான போலீஸ் கிடையாது... இந்த காக்கி யூனிஃபார்ம் வாடகைக்கு வாங்கினது... போர்டிகோவில் நிக்கறதும் போலீஸ் ஜீப் கிடையாது. ஒரு சாதாரண ஜீப்பை போலீஸ் ஜீப்பாய் மாத்தியிருக்கோம்.''

அதிர்ந்து போனவர்களாய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள் ரத்னசபாபதியும் மங்கையர்க்கரசியும்.

இன்ஸ்பெக்டர் யூனிஃபார்

# சாதுர்யா சக்ஸஸ் - 9

**சா**துர்யா பேசறேன்... நிழல் பத்திரிகை ஆசிரியர் கந்தர்வனை விசாரிக்கப் போன போது, கடிகாரம் சரிசெய்யற விஷயமா அவருக்கு ஒரு ஃபோன் வந்தது. அப்போ கந்தர்வன் அந்தப் புது மாடல் 'குக்கூ' கடிகாரம் பத்தி என்கிட்டே பேசினார். சுடர்விழியோட பதிவுசெய்யப் பட்ட டேப்ரிகார்டர் பேச்சு அப்போ எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. மறுபடி ஒரு தடவை அதைப் போட்டுக் கேட்டபோது, பின்னணியில் கேட்ட குயில் சத்தம் இயற்கையா இல்லாத மாதிரி தோணுச்சு. புது மாடல் 'வால் க்ளாக்' வாங்கினவங்க பத்தி டீடெய்ல்ஸ் விசாரிச்சபோது, அதைத் தன் பண்ணை வீட்டுல மாட்டி வைச்சிருந்த கந்தர்வன் மாட்டிக்கிட்டார். சரியான விடையை யூகித்து குலுக்கலில் தேர்வான வாசகர்களின் விவரம் 'வட்டமேஜை' பக்கத்தில்...



மில் இருந்தவன் உதடு பிரியாமல் சிரித்துவிட்டுச் சொன்னான்.

''கடந்த ரெண்டுமாச காலமாய்ப் போட்ட திட்டம் இது. இன்னிக்கு அரங்கேற்றம் நடக்குது. மிஸ்டர் ரத்னசபாபதி...! இவ்வளவு பெரிய வீட்டில் நீங்களும் உங்க மனைவியும் மட்டுமே தனியாய் இருக்கிங்கங்கற விஷயம்தான் எங்களுக்கு ப்ளஸ் பாயிண்ட். இந்த வீட்ல வேலை பார்த்துட்டிருந்த மூணு வேலைக்காரங்கள்ல ரெண்டு பேர் போன வாரம் வேலையை விட்டு நின்னுட்டாங்க. இருந்த ஒருத்தனும் உடம்புக்கு முடியாமே லீவ்ல இருக்கான். இப்படியொரு சந்தர்ப்பம் இனியொரு தடவை வாய்க்காதுன்னு நினைச்சு இன்னிக்குச் செயல்படுத்திட்டோம். இப்படியொரு கெட்டப்பில் வந்தாத்தான் யார்க்கும் எந்தச் சந்தேகம் வராதுன்னு போலீஸ் யூனிஃபார்மை மாட்டிக்கிட்டோம்...'' சொல்லிக் கொண்டே தன் இடுப்புப் பகுதிக்குக் கையைக் கொண்டு போய் ரிவால்வரை எடுத்தான்.

ரத்னசபாபதி கைகளைக் குவித்துக் குரல் தழுதழுத்தார்.

''எ...எங்களை... ஒ...ஒண்ணும் பண்ணிடாதிங்க... உ... உ.... உங்களுக்குப் ப...பணம் தானே வேணும்... தர்றோம்.''

''வீட்ல எவ்வளவு பணம் இருக்கு?''

''ஒ...ஒ... ஒரு லட்சம்...''

''அந்த ஒரு லட்சத்தை வெச்சுக்கிட்டு என்ன பண்றது...? பக்கத்துத் தெருவில் இருக்கிற பேங்க்லதானே உனக்கு லாக்கர் இருக்கு?''

''ஆ...ஆமா...''

''அந்த லாக்கர்ல எவ்வளவு பணம் இருக்கு?''

''அது... அது... வந்து...''

''இதோ பார் பெரிசு... எனக்கு எல்லாமே தெரியும். ஃபாரின்ல வேலை பார்க்கிற உன்னோட ரெண்டு பசங்களும் டாலர் டாலராய்ச் சம்பாதிச்சு

உனக்கு அனுப்பிட்டிருக்காங்க... அதையெல்லாம் நீ இந்திய ரூபாயா மாத்தி லாக்கர்ல தூங்க வெச்சிட்டிருக்கே. அந்த பேங்க்ல உனக்கு ரெண்டு பெரிய லாக்கர் இருக்கு. எங்களோட கணிப்புப்படி அந்த லாக்கர்ல இருபது லட்சம் ரூபாய் வரைக்கும் இருக்கலாம். நீ இப்போ என்ன பண்றே! இந்தப் பொண்ணைக் கூட்டிக்கிட்டு லாக்கர் சாவியோடு பேங்குக்குப் போறே...! லாக்கரைத் திறந்து மொத்தப் பணத்தையும் எடுத்து ஒரு சூட்கேஸ்ல போட்டு எங்ககிட்டே கொண்டு வந்து தர்றே! பணம் எங்க கைக்கு வந்துதும் நல்ல பிள்ளைகளா போயிடுவோம். பணம் எங்க கைக்கு வரலைன்னா 'கொலைகாரப்பாவிங்க' என்கிற பேரோடு போவோம்.''

''வே...வேண்டாம்... ஒ...ஒண்ணும் பண்ணிடாதே! பேங்க் லாக்கர்ல இருக்கிற பணத்தை எடுத்துக் குடுத்துடறேன்...!''

''இப்ப சொன்னியே... இது பெரிய மனுஷன் சொல்ற வார்த்தை. இந்தப் பொண்ணையும் கூட்டிட்டுப் போ... லாக்கரைத் திறக்கும்போது இவளும் பக்கத்துல இருப்பா. இந்தப் பொண்ணு யார்ன்னு மானேஜர் கேட்டா என் தம்பியோட பொண்ணு ஸ்வாதின்னு சொல்லணும். ஸ்வாதியும் பேங்க்ல உன்னைப் பெரியப்பான்னு கூப்பிடுவா. நீ அவளுக்கு ஒத்துழைப்பு கொடுக்கணும். ஸ்வாதிகிட்டே இருக்கிற செல்ஃபோன் ஆன்லயே இருக்கும். நீ பேசற ஒவ்வொரு வார்த்தையும் என்னோட செல்ஃபோனுக்கு வந்துட்டு இருக்கும். நீ அவளைக் காட்டிக்கொடுக்க முயற்சி பண்ணினாலோ அல்லது பணம் கொடுக்காம எங்களை ஏமாத்த நினைச்சாலே அதே விநாடி உன்னோட அறுபது வயது பொண்டாட்டி மங்கையர்க்கரசி தீர்க்கசுமங்கலியாய்ப் போய்ச் சேர்ந்துடுவா.''

**அ**ந்த பதினொருமணி வேளையில் பேங்க் சுறுசுறுப்பாய்ச் செயல்பட்டுக் கொண்டு இருந்தது. கைகளில் டோக்கன்களை வைத்துக்கொண்டு ஒரு கும்பல் கேஷ் கௌண்டர் முன்பாய் நின்றிருந்தது.

ரத்னசபாபதி வியர்த்துக் கறுத்துப்போன முகத்தோடு பேங்க் மானேஜரின் கேபினுக்குள் நுழைந்தார். பின்னாலேயே ஸ்வாதி.

**''அவருக்குத் தமிழ் நல்லாவே தெரியும். இன்னும் சொல்லப்போனா அவருடைய தாய்மொழியே தமிழ்தான்''**

மானேஜர் திருவேங்கடம், பார்த்துக்கொண்டிருந்த 'லாப்-டாப்' பினின்று நிமிர்ந்தார். மலர்ந்தார்.

''குட் மார்னிங் மிஸ்டர் ரத்னசபாபதி.''

''கு...கு...குட்மார்னிங்.''

''எங்கே பேங்க் பக்கமே ஆளைக் காணோம்? பசங்களைப் பார்க்க ஃபாரின் போயிட்டீங்களா...?''

''நோ...நோ... சென்னையில்தான் இருக்கேன்.''

''பை த பை... உங்க கூட வந்து இருக்கிறது யாரு?''

'எ... என்னோட தம்பி பொண்ணு... பேரு ஸ்வாதி... கோயமுத்தூர்ல இருக்கா...''

ஸ்வாதி பேங்க் மானேஜரைப் பார்த்து கை குவித்தாள்.

''வணக்கம் ஸார்...''

''படிக்கறியாம்மா...?''

''ஆமா... ஸார்... பாரதியார் யுனிவர்ஸிடியில் எம்.பி.ஏ. பண்ணிட்டிருக்கேன்.''

''தட்ஸ் குட்'' என்றவர் ரத்னசபாபதியிடம் நிமிர்ந்தார். ''கேஷ் ஏதாவது ட்ரா பண்ணணுமா?''

''இல்ல லாக்கர் பார்க்கணும்''

''லாக்கர் இன்சார்ஜ் இந்த மாசம்

அஸிஸ்டென்ட் மானேஜர் வாத்வா. அதோ! அந்த டேபிளுக்குப் போயிருங்க. அவர் உங்களுக்கு ஹெல்ப் பண்ணுவார்... நான் இண்டர்காம்ல சொல்லிடறேன்.''

''தேங்க்யூ'' சொல்லிக் கொண்டே நகர முயன்ற ரத்னசபாபதியை ''ஒரு நிமிஷம்!'' என்று சொல்லி நிறுத்தினார் மானேஜர்.

''ஏன்... ஒரு மாதிரி டல்லாயிருக்கீங்க... உடம்புக்கு ஏதாவது?''

''நோ... நோ... அயாம் ஆல்ரைட்... வெயில்ல வந்தது கொஞ்சம் டயர்டா ஃபீல் பண்றேன்... அவ்வளவுதான்!''




''கூல்ட்ரிங்க் ஏதாவது வரவழைக்கட்டுமா?''

''நோ... தேங்க்ஸ்... லாக்கர் பார்த்துட்டு உடனே கிளம்பணும்...''

ரத்னசபாபதி அஸிஸ்டண்ட் மானேஜர் வாத்வாவின் டேபிளை நோக்கிப் போனார்.

ஸ்வாதி சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டே பின்தொடர்ந்தாள்.

**அ**ரைமணி நேரம் கழித்து -

பேங்க் மானேஜரின் அறைக்குள் அஸிஸ்டண்ட் மானேஜர் வாத்வா முகத்தில் பதற்றத்தோடும், கையில் லாக்கர் லெட்ஜரோடும் நுழைந்தார். கூடவே ஒரு கஸ்டமர்.

வாத்வா ஆங்கிலத்தில் படபடத்தார்.

''ஸார்... ஒரு விபரீதம் நடந்து இருக்கிறது.''

''என்ன?''

''முப்பது நிமிடங்களுக்கு முன்னால் மிஸ்டர் ரத்னசபாபதி லாக்கர் சேவைக்காக வந்து இருந்தார். அதற்குப் பிறகு அரை மணி நேரம் கழித்து ராகவன் என்கிற இந்த கஸ்டமர் லாக்கர் பார்க்க வந்தார். லாக்கர் லெட்ஜரில் கையெழுத்துப் போடும்படி சொன்னேன். லாக்கர் லெட்ஜரைப் புரட்டிய ராகவனுக்கு ஓர் அதிர்ச்சி. ரத்னசபாபதி லாக்கர் நெம்பரை எழுதிவிட்டுக் கையெழுத்துப் போடும் இடத்தில் 'ஆபத்தில் இருக்கிறேன். போலீஸ் உதவி தேவை' என்று தமிழில் எழுதியிருக்கிறார். இதோ பாருங்கள்.''

மானேஜர் வாங்கிப் பார்த்துவிட்டுக் கலவரமானார்.

''மை குட்னஸ்...! முதலில் போலீஸுக்குத் தகவல் கொடுங்க.''

வாத்வா தன் செல்ஃபோனில் போலீஸ் கண்ட்ரோல் ரூமைத் தொடர்பு கொண்டார்.

**ம**த்தியானம் மூன்று மணி.

பேங்க் மேனேஜர் திருவேங்கடத்துக்கு முன்பாய் சாதுர்யா உட்கார்ந்திருந்தாள்.

''ஸார் அந்தப் பெண்ணை மறுபடியும் பார்த்தா உங்களால அடையாளம் கண்டு பிடிக்க முடியுமா?''

''கண்டிப்பா முடியும்...! அஸிஸ்டெண்ட் மானேஜர் வாத்வாவும் அந்தப் பெண்ணைப் பார்த்திருக்கார்.''

பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்திருந்த வாத்வா பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டு ஆங்கிலத்தில் பேசினார். ''மேடம், நான் மும்பையிலிருந்து சென்னைக்கு

மாற்றலாகி வந்து ஒரு மாதமே ஆகியிருப்பதால் எனக்குத் தமிழ் தெரியாது. ரத்னசபாபதி லாக்கர் லெட்ஜரில் கையெழுத்து போட்டபோது அந்தத் தருணத்தைச் சமயோசிதமாய்ப் பயன்படுத்தி, தான் ஆபத்தில் இருப்பதைத் தெரியப்படுத்தியிருக்கிறார். ஆனால் அதை ஆங்கிலத்தில் எழுதாமல் தமிழில் எழுதிவிட்டார்.''

''வாத்வாவுக்குத் தமிழ் தெரியாது என்பது ரத்னசபாபதிக்குத் தெரியாமல் போனதுதான் ஹைலிஅன்ஃபார்ச்சுனேட்''

''உங்க பேங்க்கில் மொத்தம் எத்தனை ஸ்டாஃப்?''

''முப்பத்திரண்டு பேர். இதில் பதினான்கு பேர் பெண்கள்.''

''நான் அவங்களை விசாரிக்கணும்.''

''விசாரணை நடத்துங்க சாதுர்யா... ஆனால், பேங்கில் இருக்கும் கஸ்டமர்களுக்குத் தெரியாதபடி விசாரணை நடத்துங்க.''

''அதை நான் பார்த்துக்கொள்கிறேன். நானும் ஒரு கஸ்டமர் போலவே அவர்களுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து, குரல் பிறர்க்குக் கேட்காத வகையில் விசாரணை செஞ்சுக்கறேன். தேங்க் யூ''

சாதுர்யா எழுந்து கொண்டாள்.

**அ**ன்று இரவு பத்துமணி.

பேங்க் மானேஜர் திருவேங்கடத்தை, அவருடைய செல்ஃபோன் அழைத்தது.

''யெஸ்...''

''ஸார்... நான் சாதுர்யா...''

''சொல்லுங்க சாதுர்யா... கேஸ்ல ஏதாவது ப்ராக்ரஸ்?''

''கேஸ் ஓவர்''

''என்ன சொல்றீங்க?''

''யெஸ்... ரத்னசபாபதியின் லாக்கரில் இருந்த இருபது லட்ச ரூபாய் பணத்தைக் கொள்ளையடிக்கும் திட்டத்துக்கு மூளையாய் இருந்து செயல்பட்டது வேறு யாருமில்லை. உங்க பேங்கின் அஸிஸ்டெண்ட் மானேஜர் வாத்வாதான்.''

''என்னது வாத்வாவா? எப்படி...?''

''அவர் தனக்குத் தமிழ் தெரியாதுன்னு சொன்னார்?''

''ஆமா...''

''பட்... அவருக்குத் தமிழ் நல்லாவே தெரியும். இன்னும் சொல்லப்போனா அவருடைய தாய்மொழியே தமிழ்தான்.''

''மை குட்னஸ்...! இது எல்லாம் உங்களுக்கு எப்படி...?''

''தெரியும்ன்னு கேக்கறீங்களா...? இன்னிக்குக் காலையில் பேங்கில் நான் ஒவ்வொரு ஸ்டாஃபா பார்த்து விசாரணை பண்ணிட்டு இருந்தபோது வாத்வா பண்ணின ஒரு காரியம் அவர் யார்ங்கிறதை எனக்குக் காட்டிக் கொடுத்துடுச்சு...''

''அவர் அப்படி என்ன பண்ணினார்?''

''அது ஒரு பேங்க் வேலைதான்... கெஸ் பண்ணுங்க பார்க்கலாம்!''

திருவேங்கடம் யோசிக்க ஆரம்பித்தார்.

## துப்பறியும் போட்டி-10

*வாசகர்களே!*

*நீங்களும் யோசியுங்க! வாத்வா போலீஸில் மாட்டிக் கொள்வதற்குக் காரணமாய் இருந்த அந்தச் செயல் எது...? அந்தச் செயலை வைத்து வாத்வாவுக்குத் தமிழ் தெரியும் என்பதை சாதுர்யா எப்படி கண்டுபிடித்தாள்?*

*க்ளூ கொடுத்தால் விடை உரித்த வாழைப்பழமாகிவிடும். ஸாரி... நோ... க்ளூ...!*

**சரியான பதிலை போஸ்ட் கார்டில் எழுதி, துப்பறியும் போட்டி - 10 என்று குறிப்பிட்டு கல்கி முகவரிக்கு அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.**

**கடைசித் தேதி : 09.09.09**



# அனிமேஷனிலிருந்து ஆன்மிகத்துக்கு...

ஆன்மிகத் தேடலின் விளைவாக, இளைஞர் ஒருவர் தன் இருப்பிடத்தில் பிரமிடு அமைத்து, அதனுள் அமர்ந்து தியானம் செய்து வருகிறார். போன வருடம் விநாயகர் சதுர்த்திக்கு பிரமிடுக்குள் தன்னை உட்படுத்திக் கொண்டவர், இன்னமும் வெளியே வரவில்லை.

திருப்பூர் மாவட்டம், முத்தூர் அருகே உள்ளது வேலம்பாளையம் கிராமம். பெரியசாமி - கமலம் தம்பதியினரின் இரண்டாவது மகன்தான், வெங்கடேஷ் குமார். முதல் மகன் சதீஷ் வெள்ளியங்கிரி, வியாபார நிமித்தமாக மும்பை சென்றிருந்தபோது பேருந்து விபத்தொன்றில் மரணமடைந்து போனார். முதல் பையனை இழந்து ஏழு ஆண்டுகள் ஆகின்றன. பிரமிடுக்குள் தியானத்தில் ஆழ்ந்திருக்கும் வெங்கடேஷ் குமாருக்கு வயது இருபத்தைந்து.



* வெங்கடேஷ் குமார்



* பெரியசாமி...
* கமலம்...

''சென்னிமலையில் பத்தாவது வரைக்கும் படிச்சாருங்கோ. அப்புறமா வேலம்பாளையம் வந்தாரு. நாலு வருஷம் ஊருக்குள்ளார தவணை முறையில பொருட்கள்னு தொழில் செஞ்சார். என்ன நெனைச்சாரோ தெரியலை. வியாபாரத்தை ஏறக் கட்டிப் போட்டுட்டு, அப்படியே சென்னைக்குப் போய்ட்டார். அங்க ஒரு வருஷம், ஆஸ்கார் ஃபிலிம்ஸ் இன்ஸ்டிட்யூட்ல ஏதோ படிச்சார். அப்ப அவருக்கு சினிமா டைரக்டர் ஜெகன் நட்பு கிடைச்சது. வடபழனி இமேஜ் கம்ப்யூட்டர்ல அனிமேஷன் படிப்பு. பிறகு என்ன நடந்துச்சுன்னு தெரியலை. அனிமேஷன்லேருந்து ஆன்மிகத்துக்குப் போய்ட்டார். தியான அனுபவங்களும், ஆன்மிக நாட்டமும் நம்மை மாதிரி இயல்பான வாழ்க்கையிலேருந்து அவரைத் தனிமைப் படுத்திடுச்சு!'' என்கிறார் வெங்கடேஷ்குமாரின் அம்மா கமலம்.

''எண்பது நாட்கள்ல தமிழ்நாடு, கேரளா, கர்நாடகான்னு சுமார் இரு நூற்றைம்பது திருத்தலங்களுக்குப் போய்ட்டு

வந்த பிறகு இமயமலையில தியானம் செய்யப் போறதா சொன்னார். எங்களுக்கு மனசு என்னவோ போல ஆயிடுச்சு. தியானத்துல ஈடுபட நம்ம இருப்பிடத்துலயே தனிமை ஏற்படுத்திக் கொடுத்துட்டா என்னன்னு தோணிச்சு.

உள்ளே ஆறடி உயரத்துல தியான மேடை. தியானம் பண்ணவும், படுத்து உறங்கவும் மாதிலிங்க மரப் பலகைகள் ரெண்டு. பிரமிடுக்குள்ளே காற்று வேணும்னு, பதினான்கு எடங்கள்ல பிவிசி பைப் துவாரங்கள். மத்தபடி உள்ள எதுவும் இல்ல. அங்கே வெளிச்சமும் ஒண்ணுதான். இருட்டும் ஒண்ணுதான்.

குளியலறைப் பகுதியில மர ஜன்னல் பெட்டி. அது வழியாதான் உணவு தரப்படுது. காலைல ஆறு மணிக்கு ஒரு தம்ளர் பால். மதியம் பன்னிரண்டு மணிக்கு மேல பருப்பு அரிசி சாதம். மாலை ஆறு மணிக்குப் பால். இரவு எட்டு மணிக்கு சத்து மாவு கஞ்சி ஒரு தம்ளர். இதெல்லாம் அவங்க அம்மாதான் கொண்டு போய்த் தருவாங்க.



**"தியான அனுபவங்களும் ஆன்மிக நாட்டமும் இயல்பான வாழ்க்கையிலிருந்து அவரைத் தனிமைப்படுத்திடுச்சு!"**

அம்மாவைத் தவிர வேற யாரையும் அவரு பார்க்கறது இல்ல. நான் பார்த்து ஒரு வருஷத்துக்கும் மேல ஆகுது.

அப்பப்ப ஆன்மிகப் புத்தகங்கள் படிக்கக் கேப்பார். இப்ப அவர் படிச்சிட்டு இருக்கற புத்தகம் ஓஷோ எழுதின The Book of Secret. அந்தப் புத்தகம் புனேயிலேருந்து வரவழைச்சுக் கொடுத்தேன்!'' என்கிறார் வெங்கடேஷ் குமாரின் அப்பா பெரியசாமி.

பிரமிடை ரொம்பவும் திட்ட மிட்டுக் கட்டினோம். கட்டி முடிக்க ஒரு வருஷமும், மூணு லட்ச ரூபாயும் செலவாச்சு. பிரமிடை ஒட்டியே குளியலறை, கழிவறை. போன வருஷம் 2008ல செப்டெம்பர் 3, விநாயகர் சதுர்த்தி அன்னைக்கு பிரமிடுக்குள் போனார்.

செய்திச் சித்தரம்: **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**



வந்தியே? எங்கேடா?' என்று கேட்கிறான். சிவா 'பே! பே!' என்று குரல் எழுப்பி ஜாடையில் ஏதோ சொல்கிறான். 'என்னடா சொல்றே? ஒரு எழவும் புரியல. நீயே வந்து எடுத்துக் குடுடா!' என்று நண்பன் சொல்ல, சிவா எழுந்து வந்து, தன் பேக்கை எடுத்து, அதிலிருந்து நோட்டை எடுத்துக் கொடுக்கிறான். நண்பன் போனதும் அப்படியே தலையில் கை வைத்தபடி உட்காருகிறான்.

# வெற்று

**குறும்படத்தைப் பற்றி இயக்குநர் தமிழ் சாமி அய்யன் என்ன சொல்கிறார்?**

''இந்தப் படத்தைப் பாத்த எல்லாருமே 'ஊமை கனவு காண்றதைப் பத்தி படம் எடுத்திருக்காங்க'ன்னு நினைப்பாங்க. அப்படி இல்ல. நாம எல்லாருமே கனவு காண முடியும். ஒரு கட்டத்துல நாம நினைக்கிற விஷயத்தை அடையக்கூட முடியும். ஆனா இந்தக் கதையில வர்ற சிவா அப்படி இல்ல. அந்த மாதிரி கற்பனை பண்றதுதான் அவனுடைய சந்தோஷமே. அவனை மாதிரியே அவனோட கனவும் ஊமையாப் போயிடுது. தமிழ்ல 'வெற்று வாக்கியங்கள்'னு சொல்லுவோம். இதுவும் அப்படித்தான். வெளியே சொல்ல முடியாத வெறுமையாப் போயிடுது.

**கதை...**

சிவா கல்லூரியில் படிக்கும் இளைஞன். சளசளவென்று பேசுகிற கேரக்டர். காலையில் அம்மாவிடம் சொல்லிக்கொண்டு வெளியே போகிறான். ஊரில் இருக்கும் அவனுடைய அப்பாவிடம் செல்ஃபோனில் பேசுகிறான். தெருவோரமாக இருக்கும் பெட்டிக் கடையில் நண்பர்களோடு நின்று அரட்டை அடிக்கிறான். கூடப் படிக்கும் மாணவிகளுடன் ஜாலியாகப் பேசியபடி தெருவில் நடந்து வருகிறான். ஒரு பகல் பொழுதில் அயர்ந்து உறங்கும் அவனை உதைத்து எழுப்புகிறான் இன்னொரு மாணவன். 'டேய்! என் நோட்டை வாங்கிட்டு

ஊனமுற்றவங்களை பல சமயங்கள்ல நம்மை அறியாமலேயே நாம புண்படுத்திடறோம். அப்படி செய்யக்கூடாதுன்னு ஒவ்வொருத்தருக்கும் உணர்த்துறதுக்குத்தான் இதை எடுத்தேன்.

'கார்ட் ஸ்டுடியோ'ன்னு ஒரு நிறுவனம், நல்ல குறும்படங்களைத் தயாரிக்கறதுக்காகக் கதைகள் கேட்டாங்க. நான் போய்ச் சொன்னேன். அவங்களுக்குப் பிடிச்சிருந்தது. தயாரிப்புச் செலவை ஏத்துக்கிட்டாங்க. நான் 'ஊமைக் கனவுகள்' எடுத்தேன். சென்னையில நடந்த உலகத் திரைப்பட விழாவுல திரையிட்டாங்க. அதுக்கப்புறம் திராவிடர் கழகத்துக்காக 'மன நோய்' எடுத்தேன். இதுவரைக்கும் நான் எடுத்த நாலு படத்துக்கும் தயாரிப்பாளர்கள் கிடைச்சாங்க. அதனால இதை எடுக்கறதுல இருக்கிற பணக்கஷ்டம் எனக்குத் தெரியல.''

**விமர்சனமாக சில வரிகள்:**

என்ன நடக்கப் போகிறது, கதை என்ன என்று நாம யோசிப்பதற்குள்ளேயே படம் முடிந்து போகிறது. கதையின் நாயகன் சிவா 'பே! பே!' என்று சொல்லும்போதுதான் அதுவரை நடந்ததெல்லாம் கனவு என்று தெரிகிறது. இன்னும் கொஞ்சம் நிறுத்தி, நிதானமாகக் கதையை விவரித்திருந்தால் மனத்தில் ஆழமாகப் பதிந்து, காலகாலத்துக்கும் நிற்கிற படமாக இருந்திருக்கும். 'ஊமைக் கனவுகள்'-ன் பிரதான பாத்திரமான சிவாவாக நடித்திருக்கும் சக்தி அருமையாக நடித்திருக்கிறார். வழக்கமான காட்சிப் பதிவை கவனமாகத் தவிர்த்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் கோகுல். அதுதான் நம்மைப் படத்துடன் ஒன்றிப் போக வைத்துவிடுகிறது. மூன்றரை நிமிடத்தில் 'நச்' சென்று நல்ல விஷயத்தைச் சொல்ல முடியும் என்ற முயற்சிக்கு, இயக்குநர் தமிழ்சாமி அய்யனைப் பாராட்டியே தீரவேண்டும்.

– பாலு சத்யா

# வாக்கியங்கள்

இக் குறும்படத்தின் இயக்குநர் தமிழ்சாமி அய்யன் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், பள்ளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர். எம்.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயன்ஸும், எம்.ஏ. தமிழ் இலக்கியமும் படித்திருக்கிறார். விவசாயக் குடும்பம். அப்பா ராஜேந்திரன் இறந்துவிட்டார். உறவு என்று சொல்லிக் கொள்ள அம்மா மட்டும்தான். 'ஒரு குடை நிழல்', 'சிட்டுக்குருவிகள் அழகிப் போட்டி' என்று இரண்டு கவிதைத் தொகுதிகளை எழுதியிருக்கிறார். இந்தக் குறும்படம் தவிர, 'மனநோய்', 'ஒரு எழுத்தாளனின் சமையல் குறிப்புகள்', உட்பட மூன்று குறும்படங்களை இயக்கியிருக்கிறார். கைபேசி எண்: 99446 25866.

■ தமிழ்சாமி அய்யன்





கருப்பசாமி குத்தகைதாரரில் அறிமுகமான வங்கத்து மீனாட்சி. தமக்குப் பிடித்தமான விஷயங்களை இங்கே பட்டியலிடுகிறார்.

- **பொழுதுபோக்கு?**

''டிரைவிங், இனிமையான இசையை மெல்லிய ஒலியில் கேட்பது, சமையல் செய்வது.''

- **மனிதர்கள்?**

''புத்திசாலிகளைத்தான் எனக்குப் பிடிக்கும். முட்டாள்தனமாகப் பேசுபவர்களையும், அது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்களையும் பிடிக்காது.''

- **காதல்?**

''காதல் செய்ய ரொம்பப் பிடிக்கும். எனக்கு ஏற்ற நபரை நான் இன்னும் சந்திக்கவில்லை. எதிர் காலத்தில் சந்தித்தால் உங்களுக்குக் கண்டிப்பா சொல்றேன்.''



# வங்கத்து மீனாட்சி!

- **வருங்காலக் கணவர்?**

''புத்திசாலியாக இருக்க வேண்டும். என் பெற்றோர் என்னை நேசிப்பதைவிட பல மடங்கு என்னை நேசிக்க வேண்டும்.''

- **மொழி?**

''எனது தாய்மொழி பெங்காலியாக இருந்தாலும், ஹிந்தியை மிகவும் நேசிக்கிறேன்.''

- **கவிதை?**

''ரபீந்திரநாத் தாகூர் பெங்காலியில் எழுதிய கவிதைகள் அனைத்தும் என்னைக் கவர்ந்தவை.''

- **நடிகர்கள்?**

''எப்போதுமே சூப்பர் ஸ்டார் ரஜினியும், சூப்பர் ஆக்டர் கமல்ஹாசனும்தான் என் ஃபேவரிட்.''

- **ஊர்?**

''மதுரை. முதல் படமான கருப்பசாமி குத்தகைதாரர் படத்துக்காக மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றபோது அந்தக் கோயிலும், ஊரும் பிடித்துப் போய்விட்டன.''

- **ஆடை?**

''சேலைதான். ஆனால் ஃபங்ஷன் சமயங்களில்தான் சேலை! மற்ற நேரங்களில் டி-ஷர்ட், பேண்ட்தான்!''

- **நகரம்?**

''நான் பிறந்து வளர்ந்தது கல்கத்தா என்றாலும், நான் செட்டிலான மும்பைதான் எனக்குப் பிடித்த நகரம். அங்கேதான் திறமையை வெளிப்படுத்த வாய்ப்புகள் அதிகம்.''

- **ஸ்வீட்?**

''ரசகுல்லாவும், அனைத்து பெங்காலி ஸ்வீட்ஸும் என் ஃபேவரிட்.''

- **மீனாட்சியிடம்?**

''மீனாட்சி கொஞ்சம் ரிசர்வ்ட் டைப். ஆனால், தலைக்கனம் கிடையாது. சினிமாவில் கிளாமர், ஹோம்லி இரண்டும் செய்தாலும், நிஜ வாழ்க்கையில் ஹோம்லியோ... ஹோம்லி!

**-ராகவ்குமார்**

# அருணன் சரண்யா

காவலர்கள் அழைப்பதையும் தடுப்பதையும் அலட்சியப்படுத்திவிட்டு அரண்மனைக்குள் நுழைந்தான் அந்த இளைஞன். அவன் தலைக்குமேல் ஒரு சிறு மூட்டை.

நுழைந்துவிட்டானே தவிர அடுத்து என்ன செய்வது என்று அறியாமல் விழித்துக்கொண்டிருந்தான்.

''நீ யார்? எதற்காக இங்கு வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான் மன்னன்.

''என்னை தாமாஜி அனுப்பினார். அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய தானியங்களை நல்ல விலைக்கு விற்றிருக்கிறார். அதன் மூலம் பெற்ற தங்கக் காசுகளை என்னிடம் கொடுத்து அனுப்பியிருக்கிறார். வாங்கிக்கொண்டு ரசீதைக் கொடுங்கள்'' என்றான்.

அரசனுக்குத் திகைப்பு.

''எவ்வளவு வராகன்?'' என்று சந்தேகத்துடன் கேட்டான் மன்னன்.

''நான்கு லட்சம் வராகன்'' என்ற பதிலைக் கேட்டதும் மன்னனுக்குக் கோபம் வந்தது. அதிகபட்சம் நூறு வராகன்கள் மட்டுமே சுமக்கக்கூடிய அந்தச் சிறு மூட்டையில் நான்கு லட்சம் வராகனா!

மன்னனின் முகக்குறிப்பை உணர்ந்துகொண்டான் அந்த இளைஞன். ''சந்தேகம் எதற்கு? நீங்களே எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்றபடி தலையில் இருந்த மூட்டையை எடுத்துப் பிரித்தான்.



அதிகாரிகளை விட்டு எண்ணச் சொன்னான் மன்னன். விரைவிலேயே அவனது அலட்சியம் அதிசயமாக மாறியது. அமுத சுரபியிலிருந்து அள்ள

அள்ள உணவு வருவதைப் போல, அந்தச் சிறு மூட்டையிலிருந்து தங்கக் காசுகள் வந்துகொண்டே இருந்தன. நான்கு லட்சம் வராகன்களை எண்ணிக் களைத்தனர் அதிகாரிகள்.

மன்னன் அந்த இளைஞனை உற்றுப் பார்த்தான். அறிமுகமான முகம் போலத் தோன்றியது. ''யார் நீ? உன் ஊர் எது?'' என்று கேட்டான்.

''அதையெல்லாம் விளக்க இப்போது நேரமில்லை. சீக்கிரமாக ரசீதைக் கொடுங்கள். தாமாஜியிடம் கொடுக்க வேண்டும்'' என்றான் இளைஞன். குழப்பம் தீராமலேயே தங்கக் காசுகளைப் பெற்றுக்

# தாமாஜி எனும் தங்கக் குவியல்!

கொண்டதற்கான ஒப்புதலில் கையெழுத்திட்டுக் கொடுத்தான் மன்னன்.

சற்று நேரத்தில் தாமாஜியை கையில் விலங்கிட்டு அரண்மனைக்குள் அழைத்து வந்தனர் காவலர்கள்.

''மன்னா, மக்களின் பசியைப் பொறுக்க முடியவில்லை. மழைபெய்து விளைச்சல் கண்டவுடன் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையில்தான் நான் அரசு தானியங்களை வினியோகித்துவிட்டேன். முன் அனுமதி பெறாதது தப்புதான்'' என்றார் தாமாஜி கண்கள் கலங்க.

தாமாஜியையும் தங்கக் குவியலையும் பார்த்த அரசனுக்கு உண்மை விளங்கியது. ''ஐயா தவறு செய்தது நீங்கள் இல்லை. உங்கள் அருமையைப் புரிந்துகொள்ளாத நான்தான்'' என்றபடி தாமாஜியின் கால்களில் விழுந்தான் மன்னன்.

விவரம் புரியாத தாமாஜி தவிக்க, ''விட்டலனே இங்கு வந்து உங்கள் சார்பாகத் தங்கக் காசுகளைக் கொடுத்து ரசீதைப் பெற்றுச் சென்றார். இவ்வளவு சிறந்த பக்தரான உங்களைக் கைது செய்ய உத்தரவிட்டேனே'' என்று மன்னன் உருகினான்.

தாமாஜிக்கு மெய்சிலிர்த்தது. விட்டலனின் திருநாமத்தைக் கண்ணீர் வழியக் கூறினார். அங்கேயே அமர்ந்து தம்மிடமிருந்த பகவத் கீதை நூலைப் படிக்கத் தொடங்கினார். அந்த நூலுக்குள் பத்திரமாகக் காட்சி அளித்தது மன்னன் அளித்த ரசீது! அனைவருக்குமே மெய்சிலிர்ப்பு உண்டானது.

''தாமாஜி, இனி நீங்கள் மங்கள வடே செல்லவேண்டாம். என்னுடனேயே தங்கிவிடுங்கள்'' என்றான் மன்னன். மறுத்தார் தாமாஜி. இனி அவர் இருக்கவேண்டியது இந்த இரண்டு இடங்களும் அல்லவே! பண்டரிபுரத்தில் தம் மிகுதி வாழ்நாளை மனநிறைவுடன் கழித்தார் தாமாஜி.

**கோ**பால்புரியிலிருந்து தாமாஜி நிர்வாக அதிகாரியாக விளங்கிய மங்கள வடே நோக்கிச் சென்றோம். நடுவில் சுமார் இருபது நிமிடங்களுக்கு ஆட்டோ குலுங்கிய குலுக்கல் கொஞ்சநஞ்சமல்ல. சாலை அப்படி. பண்டரிபுரத்திலிருந்து

மங்களவடே சென்றாலும் இந்தக் குலுக்கல் பாதையைக் கடந்தாக வேண்டும். மற்றபடி பாதை நெடுஞ்சாலை கணக்காகச் சீராக இருந்ததையும் குறிப்பிடுவது தான் நியாயம்.

மங்களவடே ஒரு சிற்றூருக்கும் நகரத்துக்கும் இடைப்பட்டதாக உள்ளது. அங்குள்ள முக்கிய நாற்சந்தியில் தாமாஜியின் ஒரு பெரிய சிலை காட்சி அளித்தது. நகராட்சி எழுப்பியதாம்.

தாமாஜிக்காக எழுப்பப்பட்டிருக்கும் நினைவாலயத்துக்குச் சென்றோம். சிற்பச் சிறப்பு என்றெல்லாம் குறிப்பிட முடியாத அளவுக்கு எளிமையான கோபுரம்.



## "விட்டலனே இங்கு வந்து தங்கக் காசுகளைக் கொடுத்து ரசீதைப் பெற்றுச் சென்றார்"

ஆலயத்துக்குள் விட்டலனும் ருக்மணியும் நின்றபடி அருள்புரிய, கொஞ்சம் தள்ளி தாமாஜியின் திருவுருவமும் இருந்தது.

சன்னிதியின் உள்ளே செல்லவும், திருவுருவங்களின் பாதங்களில் தலையைப் பதித்து எடுக்கவும் அனுமதி உண்டு.

சன்னிதிக்கு எதிராகப் பெரிய மண்டபம். திரை விலகியதும் தொடக்கத்தில் அங்கும் இங்குமாக நின்றிருந்தவர்கள், மெல்ல மெல்ல சன்னிதியை நோக்கிக் குவியத் தொடங்கினர். ஒவ்வொருவர் கையிலும் ஏக்தார் (ஒரே தந்தி அமைந்த தம்புரா எனலாம்) மற்றும் சிப்ளாக் கட்டைகள். சற்று நேரத்தில் இனிய பஜனை நாமாவளிகள் கேட்கத் தொடங்கின. பின்னர் ஆரத்தி காட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து அனைவருக்கும் எளிய மதிய உணவு வழங்கப்பட்டது.

### அபங்க அமுதம்

ஆகல்ப ஆயுஷ்ய வ்ஹாவே
தயா குளா
மாஜியா ஸகளா ஹரிச்யா தாஸா
கல்பனேசீ பாதா ந ஹோ கோண காளீ
ஹே ஸந்த-மண்டளீ ஸுகீ அஸோ
அஹங்காராசா வாரா ந லாகோ ராஜஸா
மாஜ்யா விஷ்ணுதாஸா பாவிகாஸீ
நாமா ம்ஹணே தயா அஸாவே
கல்யாண
ஜ்யா முகீ நிதான பாண்டுரங்க
- நாமதேவர்

'பாண்டுரங்கா, இந்தச் சகல ஹரி தாசர்களும் அவர்களுடைய குலத்தினரும் மிக நீண்ட ஆயுளோடு இருக்கட்டும். உன் புகழ் கூறும் மகான்களுக்கு எந்தப் பாதகமும் வராதிருக்கட்டும். விஷ்ணு பக்தர்கள் மீது அகங்காரம் எனும் காற்று வீசாதிருக்கட்டும். பாண்டுரங்கனின் திருநாமம் எனும் பெரும் செல்வத்தை வாக்கில் கொண்ட இவர்கள் என்றென்றும் சிறப்புடன் வாழட்டும்.'

வண்ணப்படம்: வேதா
படங்கள்: ஸ்ரீஹரி


NOW ON SALE
Rs.10/- Only
Harry Potter
- Film Review
Food is Fun!
Enter into Sci-Galaxy
September 2009
GOKULAM
THE Magazine for Children



# அனுபவி ராஜா அனுபவி!

''எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதுல ஒரு பலன் இருக்கணும்'' - நான் என் நண்பர் வீட்டுக்குள் நுழைந்தபோது, கோபமாக ஒலித்துக்கொண்டிருந்த அவரின் குரல் கேட்டு, அப்படியே சற்று நேரம் தயங்கி நின்றேன்.

''அடடே நீங்க எப்ப வந்தீங்க? உள்ள வாங்க...'' நண்பர் என்னை அழைத்தபடி வாசலுக்கே வந்துவிட்டார்.

''நீங்க ஏதோ முக்கியமாய்ப் பேசிக்கிட்டு இருந்த மாதிரி இருந்தது'' என்று நான் சொல்ல, ''ஒண்ணும் முக்கியமான விஷயம் இல்லீங்க. இதோ இருக்கானே இவன் என் தூரத்துச் சொந்தக்காரப் பையன். இவனுக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுக்கச் சொல்லி, எங்கிட்டே அனுப்பியிருக்காங்க. எந்த வேலைக்குப் போனாலும் ரெண்டு நாள்ல ஓடி வந்திடுறான்'' என்று என் நண்பர் சொன்னவுடன், அவர் எதிரில் நின்றுகொண்டிருந்த இளைஞனைப் பார்த்தேன்.

நல்ல துடிப்பான பையனாகத்தான் இருந்தான்.


''ஐயாகிட்ட பேசு. அப்பத்தான் உனக்குத் தைரியம் வரும்'' என்றார் நண்பர்.

''எங்க பெரியப்பா சொல்றதில எனக்கும் உடன்பாடுதான் ஸார். ஆனா கொஞ்சம் ஓடியாடி வேலையைத் தேடிப் பார்த்து, அலைஞ்சு, அனுபவப்பட்டாத்தானே நல்லதுன்னு நான் நினைக்கிறேன்'' என்று அவன் சொல்லச் சொல்ல, வியப்பாய் இருந்தது.

''நல்ல மாடுன்னா உள்ளூர்லேயே விலைபோயிடும்னு எங்க அப்பத்தா அடிக்கடி சொல்லுவா'' என்றார் நண்பர்.

''ஆமா, வீட்டுப் பக்கத்திலேயே பள்ளிக்கூடம், அடுத்த தெருவில காலேஜ், எதிர்த்த தெருவில எம்ப்ளாய்மெண்ட் ஆஃபீஸ், மூணாவது தெருவில வேலை, பக்கத்துத் தெருவில் பொண்ணு, வீட்டு மாடியில கல்யாணம், வாழ்ந்து முடிச்சா ஆத்தோரத்தில் சுடுகாடு... இவ்வளவுதானா வாழ்க்கை?'' என்று அந்தப் பையன் பேசப் பேச, எனக்கு ஆச்சரியமோ ஆச்சர்யம்!

''சபாஷ்...! ஒரே வேலையிலே பல ஆண்டுகள் இருந்தால் அனுபவம் வராதா?'' என்று கேட்டேன்.




சிரிப்போம் ஜெயிப்போம்!

''அந்த அனுபவம் ஒருதுறை சார்ந்த அனுபவம் ஸார். அதில் சோர்வும், அலுப்பும், சில நேரங்கள்ல நோயும்தான் ஏற்படும். நம்ம மகாகவி பாரதியாரைப் பற்றி நேத்துப் படிச்சுப் பார்த்தேன். மதுரை, ராஜா சேதுபதி பள்ளியில் தமிழ் வாத்தியார் வேலை கிடைச்சப்ப, நாலே மாசம்தான் அங்க இருந்தாராம். பிறகு சென்னை - பாண்டிச்சேரின்னு பயணப்பட்டதாலே தான் அவர் மகாகவியானாராம்'' என்று மூச்சுவிடாமல் பேசிய அந்த இளைஞன், சற்று நிறுத்திவிட்டு,

''ஸார்... வரலாற்றில் இடம் பெறுபவர் பெரியவரா? இல்லை வரலாற்றை உருவாக்குபவர் பெரியவரா?'' என்று என்னைக் கேட்டபோது, நான் சற்று அதிர்ந்து போய்விட்டேன்.

''உங்ககிட்ட அறிவுரை கேளுடான்னு நான் சொன்னா, இவன் உங்களுக்கே அறிவுரை சொல்றான் பாருங்க'' என்று நண்பர் குறுக்கே பாய்ந்தார்.

''தம்பி சொல்றதும் சரியாத்தான் தோணுது எனக்கு'' என்று நான் சொல்ல, நண்பர் உடனே, ''நீங்க என்ன தெனாலிராமன் தீர்ப்பு சொன்ன மாதிரி சொல்றீங்க'' என்று கேட்டார்.

''அதென்ன தெனாலிராமன் தீர்ப்பு?''- இது நான்.

''ஒரு வழக்கில் நீதிபதியாய்த் தெனாலிராமனை உட்கார வைத்தார்களாம். முதலில் வாதி எழுந்து தன் வழக்கைச் சொன்னவுடன், 'நீ சொல்றதுதான் சரி' என்றானாம் தெனாலி.

பிறகு பிரதிவாதி எழுந்து தன் பக்கத்து நியாயத்தைச் சொல்ல, 'நீ சொல்றதுதான் சரி' என்று தெனாலிராமன் சொல்ல, வழக்கு மன்றத்தில் இருந்த ஒருவன் கோபத்தோடு எழுந்து, 'ரெண்டுபேர் சொல்றதும் எப்படி ஐயா, சரியா இருக்க முடியும்?' என்று கேட்க, தெனாலிராமன் தயங்காமல், 'நீ சொல்றதுதான் சரி' என்று சொன்னதுபோல இருக்கு நீங்க சொல்றது'' என்றார்.



நண்பரைப் பார்த்து என் பங்குக்கு

நானும் ஒரு கதை சொல்லத் தொடங்கினேன்.

''ஒரு கிராமத்துப் பெருமாள் கோயிலில் இராமாயணச் சொற்பொழிவு நிகழ்ந்ததாம். ஊரே சென்று அதனைக் கேட்டு மகிழ்ந்தார்களாம். அதே ஊரில் படிப்பறிவு இல்லாத, மாடு மேய்க்கும் தொழிலைச் செய்யும் ஒரு குடும்பத்தானும் தினசரி இராமாயணம் கேட்கச் செல்வானாம். ஒவ்வொரு நாளும் அவன் மனைவி, 'இன்னைக்கு இராமாயணம் கேட்கப் போனியே என்ன கதை சொன்னாங்க?' என்று கேட்பாளாம்.

அந்தக் கணவனும், 'எனக்குக் கதையெல்லாம் தெரியாது. ஆனா மனசு நிம்மதியாய் இருந்தது' என்று சொல்வானாம்.



> நாம் முப்பது வருடங்களில் பெற்ற அனுபவங்களை இந்தக் கால இளைஞர்கள் ஐந்தே வருடங்களில் பெற்றுவிடுகிறார்கள்

பத்து நாட்களில் இராமாயணச் சொற்பொழிவு முடிந்தது. 'இராமாயணம் முடிஞ்சு போச்சே... இப்பவாவது அங்க சொன்னது ஏதாவது புரிஞ்சுதா?' என்று கேட்க, கணவன் மௌனமாக இருக்க, 'இதோ இந்தச் சாணம் அள்ளுகிற மூங்கில் கூடையில், அந்தத் தண்ணீர்த் தொட்டியில போய் தண்ணீர் மோந்து கொண்டு வா' என்று கட்டளை இட்டாளாம்.

அவனும் பேசாமல் போய், மூங்கில் கூடையில் தண்ணீரை அள்ள, அதிலிருந்த சிறு ஓட்டைகள் வழி தண்ணீர் முழுவதும் ஒழுகிப்போக, அவள் மீண்டும் சொல்ல, அவன் மீண்டும் அள்ள, இப்படியே பத்து முறை நடந்தது.

'இதுதான் நீ இராமாயணம் கேட்ட லட்சணம்... ஓட்டக் கூடையில் தண்ணீர் எடுத்தாற்போல' என்று சொல்லி ஏளனமாகச் சிரித்தாளாம்.

கணவன் சற்று நேரம் கூடையையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டுச் சொன்னானாம். 'நிஜம்தான்...' ஓட்டைக்கூடையில் என்னால தண்ணி அள்ள முடியல. ஆனா நான் பத்துத் தடவை போய் தண்ணீர் எடுத்ததாலே இந்தச் சாணக் கூடையில் இருந்த அழுக்கெல்லாம் போய் சுத்தமாயிருச்சு. எனக்கு இராமாயணத்தைத் திருப்பிச் சொல்லத் தெரியாது. ஆனா என் மனமும் இந்தக் கூடை மாதிரி தான்' என்றானாம்.

'நாம் முப்பது வருடங்களில் பெற்ற அனுபவங்களை இந்தக் கால இளைஞர்கள் ஐந்தே வருடங்களில் பெற்று விடுகிறார்கள். கவலைப்பட வேண்டாம். இந்த இளைஞரும் துடிப்போடு இருக்கிறார். எல்லாக் கதவுகளையும் தட்டிப் பார்க்கட்டும்... வெற்றி நிச்சயம்..'' என்றேன்.

வீட்டுக்குள் இருந்த வானொலியின் எஃப்.எம். அலைவரிசையிலிருந்து

'கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு
காரியம் நடக்கட்டும் துணிந்துவிடு'

என்ற பழைய பாடலும் இளைஞரின் முகத்தில் புன்னகையும் தவழ்ந்து வந்தன.

(தொடரும்)

# எழுதப்படாத குறிப்புகள்...

காலச்சக்கரங்களைக் கட்டிக்கொண்டு
ஒருவழிப்பாதையில்
விரைகிறது வாழ்க்கை

திசைமரமோ வழிகாட்டியோ
இல்லாத கணங்கள்
பயம்நிறைந்ததாய் இருக்கின்றன
வேறு சாத்தியக்கூறுகளற்று
பாதையின் போக்கிலேயே போவதைத்
துணிவென்று அறிவிக்கிறேன்

வளப்புமிகுந்த
சோலைகளைத் தாண்டித்தான்
செல்கிறேனென்ற போதிலும்
எதற்காகவும் நிற்பதாயில்லை

மீண்டும் அவற்றைக்
கடக்க நேரிடுமென்றும்
நிதானிக்க நேரமில்லையென்றும்
சொல்லிக்கொள்ளலாம்

நினைவிலிருத்திக்
கொள்ள முடிந்தவற்றை,
பயணத்தின் முடிவில் கட்டாயம்
குறித்து வைப்பதாய் முடிவு

இக்கணம் வரை - சேரப்போகும் முகவரி
இதென்பதை மட்டுந்தான்
சர்வ நிச்சயமாய்ச்
சொல்ல முடியவில்லை

**ச. பிரேம்குமார்**



**"நூற்றாண்டுகளை மீட்டெடுப்பது தான் எங்கள் முக்கியப் பணி. ஆனால், அது அவ்வளவு எளிமையானது கிடையாது" என்கிறார் R E A C H அமைப்பின் பி.ஆர்.ஓ. சந்திரசேகரன்.**

**நூற்றாண்டுகளை மீட்டெடுப்பதா...? கொஞ்சம் தெளிவா சொல்லுங்க...**

''புராதனச் சின்னங்களைப் பற்றி மக்கள்கிட்ட விழிப்புணர்வு குறைஞ்சுட்டு வருது. நம்ம கலாசார அடையாளங்களே கோயில்கள்தான். அவற்றைப் பழைமை மாறாம புதுப்பித்து, வரும் சந்ததியினருக்குக் கொடுக்கணும். அப்படிப்பட்ட மரபுச் சின்னங்கள் பற்றி ஒரு தகவல் களஞ்சியத்தை உருவாக்கிக்கிட்டிருக்கோம். மக்களுக்கும் இதுல ஆர்வம் வரணும்னு கல்வெட்டு, ஏடுகள் படிக்கிறதுக்குப் பயிற்சிகள் கொடுக்கிறோம். மொத்தத்துலே இந்தியாவின் பண்பாட்டுக் கருவூலங்களை வருங்காலத்துக்குக் காப்பாத்திக் கொடுக்கறதுதான் இந்த R E A C H அமைப்போட நோக்கம்!''

**அது என்ன R E A C H?**

"Rural Education and Conservation of Heritage - இதோட சுருக்கம்தான் REACH.


எங்க அமைப்போட தலைவர் சத்யமூர்த்தி, தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத் தலைவரா இருந்து ஓய்வு பெற்றவர். அவரோட ஈடுபாடும், பங்களிப்பும்தான் R E A C Hக்குப் பக்க பலம்.''

**கேட்க நல்லாயிருக்கு... ஆனா மக்களோட ஒத்துழைப்பு...?**


''வெப்சைட்டுகள், கையேடுகள் மூலமா மக்கள் மத்தியில செய்தி பரப்புறோம்... கோயில்கள்ல உழவாரப் பணி செய்யறவங்க ரொம்ப ஆர்வமா எங்ககூட பங்கெடுத்துக்கறாங்க.''

**நீங்க இதுவரை செய்திருக்கிற பணிகள்ல குறிப்பிட்டுச் சொல்ற மாதிரி...**


''காஞ்சிபுரம் பக்கத்துல 'தாங்கி'ங்கற ஊர்ல இருக்கிற சிந்தாமணி விநாயகர் கோயிலையும், மயிலாடுதுறை - குழையூர் சிவன் கோயிலையும் மரபு வழி மறுசீரமைப்பு செய்திருக்கிறோம். காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் கிருஷ்ண தேவராயர் காலத்தைச் சேர்ந்தது. அங்கே நூறுகால் மண்டபத்துல சிற்ப நுட்பங்கள்


* கைலாசநாதர் கோயில் புனரமைப்புப் பணிகளுக்கு முன்...

# "கோயிலும் மசூதியும்



சத்யமூர்த்தி



சந்திரசேகரன்

கண்ணாம்புப் பூச்சால மறைஞ்சு போயிருந்தது. விஞ்ஞான முறையில அந்த மேற்பூச்சுகளை நீக்கி சிற்பங்களைப் பழைய பொலிவுக்குக் கொண்டு வந்தோம்.

இதைவிடப் பெரிய பணியா, கி.பி.742-ம் ஆண்டைச் சேர்ந்த உத்திரமேரூர் கைலாசநாதர் கோயிலை சுமார் இருபத்துமூன்று லட்ச ரூபாய் செலவில் புராதன அடையாளம் மாறாம புதுப்பிச்சுக்கிட்டு இருக்கோம்.''

**நிறைய சுவாரஸ்யமான அனுபவங்கள் கிடைச்சிருக்குமே...?**

''உத்திரமேரூர் கோயில் பணிகள் நடக்கும்போது முன் மண்டபத்தைப் பிரிக்கையில் ராஜேந்திர சோழன் காலத்து மெய்கீர்த்தி ஒண்ணு கிடைச்சது. கிருஷ்ண தேவராயர் காலத்துக் கல்வெட்டுகள்கூட கிடைச்சது. அப்புறம் நந்தி மண்டபத்துல பூமிக்கு அடியிலிருந்து அப்பர், சுந்தரர், ஞான சம்பந்தர் - மூவர் சிலைகளை மீட்டெடுத்தோம். கால மாற்றத்துல இது போன்ற பொக்கிஷங்களைத் தவற விட்டிருப்போமேன்னு நினைச்சப்போ அதிர்ச்சியா இருந்தது.''

**அரசிடம் எதிர்பார்ப்பது...?**

''கோயில்களை எல்லாம் மதக் கோட்பாட்டுச் சின்னங்களா இல்லாம, வரலாற்றுச் சின்னங்களா அரசு அங்கீகரிக்கணும். கலாசார சின்னங்களைச் சேதப்படுத்துவோரைத் தண்டிக்க, கடுமையான சட்டங்களைக் கொண்டு வரணும்.''

**புராதனச் சின்னங்கள்னு சொன்னாலும், கோயில்கள் என்கிற எல்லைக்கு உட்பட்டுத்தானே உங்க பணியெல்லாம்...?**

''அப்படிச் சொல்ல முடியாது. கோயிலும் மசூதியும் எங்களுக்கு ஒண்ணுதான். புராதனச் சின்னங்கள்னு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மசூதிகள், தேவாலயங்கள் இருப்பது தெரியவந்தால், அங்கேயும் எங்க பணிகளையும் ஆய்வுகளையும் செய்ய நாங்க தயார்!''

**- கார்த்திகா ரஞ்சன்**




...புனரமைப்புப் பணிகள்...

# எங்களுக்கு ஒண்ணுதான்!"







புதுக்கோட்டையைச் சேர்ந்த ஓவியர் நன்னை, வண்ணக்கலைத் துறையில் (நான்காவது வருடம்) இறுதியாண்டு மாணவி. கல்வெட்டு ஆய்வாளரான தமது தந்தை கொடுத்த ஊக்கம்தான் ஓவியராகத் தம்மை உருமாற்றியது என்கிறார். அறியப்படாத காட்டுப் பூக்களின் நுட்பங்களை வண்ணத்தில் கைப்பற்றுவதுதான் தமக்குப் பிடித்தமான ருசி என்று சொல்லும் நன்னை, இவ்வாண்டு சென்னை கவின்கலைக் கல்லூரியின் சிறந்த ஓவிய மாணவியாகத் தேர்வாகியுள்ளார்.

''எனது வாசம் ரியலிசம்தான். யதார்த்தத்தைத்





# காட்டுப் பூ ருசி!



தாண்டிப் போகும் உத்தேசம் எனக்கு இல்லை. மக்களிடம் போய்ப் புழங்காத ஓவியத்தால் என்ன பயன் என்பதை, புரியா நவீன ஓவியர்கள் புரியும்படி விளக்க வேண்டும் மக்களுக்கு. கலை, வானில் ஒளிரும் கோளாக இருக்க வேண்டுமே அல்லாது குடத்திலிட்ட விளக்காக இருக்கக் கூடாது'' என்று காட்டம் காட்டும் நன்னை, கலையை முன்னிட்டு இந்தியா முழுக்கச் சுற்றியவர். ''நான் படித்த கல்லூரியிலேயே ஓவிய விரிவுரையாளராக வேலை பார்ப்பது காலத்திடம் நான் கோரியிருக்கும் வரம்'' என்கிறார் நன்னை. நன்னை என்றால் நல்ல பெண் என்று பொருளாம்.

**- அமிர்தா**

'இன்னும் சிறிது நேரத்தில் விமானம் சிக்காகோ விமான நிலையத்தில் தரை இறங்கும்' - மிகவும் கிசுகிசுப்பான குரல் அறிவிப்பு.


சிவகடாட்சம் கஸ்டம்ஸ் மற்றும் இமிக்ரேஷன் படிவங்களைப் பூர்த்தி செய்து, தன் கையொப்பம், மனைவி கையொப்பம் என்று எல்லாம் தயார் நிலையில் வைத்திருந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் அறுவை சிகிச்சை செய்துகொண்ட அவர் உடல், பயணக் களைப்பைக் குறையாமல் காட்டுகிறது. மருத்துவர் வருடாந்திர செக்-அப், பரிசோதனை முடித்து, 'Bon Voyage' என்று வாழ்த்திக் கூறிய அறிவுரையைப் பெற்ற பின்னரே அவர் புறப்பட்டிருந்தார்.

உண்மையில் சேலத்தை விட்டு அவர் எங்குமே போக விழைந்ததில்லை. உடலைப் பற்றி, உயிரைப் பற்றி பயம் வந்துவிட்டால் அமெரிக்காவாவது, ஆப்ரிக்காவாவது? இதோ இங்குள்ள மேட்டூருக்குப் போகவே யோசிப்பவர் அவர்.

ஆனால், சிக்காகோவில் இருந்து மாப்பிள்ளை சொன்னது, எல்லாவற்றையும் மாற்றியது.

**அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை-4**



''இப்பவே சொல்லிப் புட்டேன் தையலு. மலங்க மலங்க நிக்காத, கூடவே வா. பாஸ்போர்ட்டு, இந்தப் படிவம் எல்லாம் அவங்க அவங்கதான் வச்சுக்கணும். வரிசையாத்தான் போகணும். சாப்பாட்டுப் பொருள் எதனாச்சும் இருக்கான்னு கஸ்டம்ஸுல கேப்பாங்க. இல்லைன்னு சொல்லணும்னு பூர்ணியும், மாப்பிள்ளையும் படிச்சு, படிச்சுச் சொல்லியிருக்காங்க... சந்தேகம் வர்றா மாதிரி ஏதாவது உளறாதே... பத்திரம்...''

# சிக்காகோ மாம்பழம்

**ஈஸ்வர்**

''மாமா... பூர்ணிக்கு வளை காப்பு, சீமந்தம், பிள்ளைப் பேறு எல்லாமே சிக்காகோவுல தான். எந்த மாற்றமும் இல்லே. உங்களுக்கும் அத்தைக்கும் டிக் கெட் வீடு தேடி வரும். ப்ளீஸ் வந்துருங்க...'' பிறக்கப் போகும் மகனுக்கு அமெரிக்க குடியுரி மையை நிச்சயம் செய்து கொள்ள விரும்பிய மாப் பிள்ளை ராம் உறுதியாக இருந்துவிட்டார்.



பூர்ணிமா ஒரே பெண். வளைகாப்பும் சீமந்தமும் நன் றாக நடந்தேற வேண்டாமா? தையலுடன், சிவகடாட்சம் சென்னையிலிருந்து ஒரு பின் இரவு விமானம் ஏறி விட்டார். அவரும், டில்லி, மும்பை என்று இந்தியா வையே சுற்றி வரும் நல்ல வேலையில் இருந்து, வேளச்சேரி வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டுத்தான், இளம்வயது நினைவுகளுடன் சேலம் வீட்டில், வாழ்வின் கடைசிக் காலத்தைக் கழிக்க, குடியேறினார்.

வீட்டைச் சுற்றி மரங்கள். குறிப்பா மா மரங்கள், சீஸன்போது தாழ்வாரம், பின்கட்டு என்று எங்கும் மாம்பழங்கள் காலை இடறும். மஞ்சளும், சிவப்பும் பச்சையுமாக.

பூர்ணிமாவுக்குத் தன் வீட்டுத் தோட்டத்து மாம் பழத்தின் மீது கொள்ளை ஆசை. எப்பவோ ஒருமுறை தொலைபேசி உரையாடல் நடுவே அதைக் குறிப் பிட்டிருந்தாள்.

''என்னவோ, அமெரிக்கான்னு இங்கே வந் துட்டேம்மா... இருந்தாலும் தம்பி சந்திரன்கூட போட்ட சண்டை, நாக்குலயே நிக்குற நம்ம சேலம் மாம்பழம் ருசி... அதெல் லாம் இங்கே மிஸ்ஸிங்தாம்மா...''

அம்மா சொல்லியிருந்த இந்த வார்த்தைகள் போதாதா சந்திரனுக்கு? பிள்ளைத்தாய்ச்சியான அக்கா வுக்கு என்று ருசி மிகுந்த ஆறு மாம்பழங்களை மிக நேர்த்தியாக பேக் செய்து, அப்பாவுக்குத் தெரியாமல் செக்-இன் லக்கேஜாகப் போகும் பெரிய சைஸ் சூட் பேகில், துணிகளுக்கு இடையே மறைத்து, பத்திரப் படுத்தியிருந்தான். ''அம்மா... உன் வீட்டுக்காரர்கிட்ட உளறிடாதே.''

''ராசா...உனக்குத்தான் அக்கா மேல எம்புட்டு ஆசை?'' - சந்திரனுக்குத் திருஷ்டி சுத்திப் புறப்பட் டவள்தான் தையல்நாயகி.

இமிக்ரேஷன் முடிந்துவிட்டது. கணவருடன்

ஒட்டினாற்போலவேதான் நடந்தாள் தையல்நாயகி. கஸ்டம்ஸ் செக்கிங்தான் மீதம். நகரும் பட்டையில் இரண்டு பெரிய சூட்கேசுகளும், இரண்டு சிறிய பெட்டிகளும் ஏற்றி வைக்கப்பட, அவை ஊர்ந்து, ஸ்கேன் செய்யும் மையத்துக்கு நகர்கின்றன. அருகே ஒரு சின்னத் திரையில் கருடப் பார்வையாக, கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு கஸ்டம்ஸ் அதிகாரி மென்மையாகச் சிரித்தவாறே ஒரு பெரிய சூட்கேசைத் தன் பக்கம் இழுத்து வைத்துக் கொள்கின்றார்.

''பாஸ்போர்ட் ப்ளீஸ்...'' - சிரித்தவாறே அவன் கேட்க, சிவகடாட்சம் தன் பாஸ்போர்ட்டை அவனிடம் கொடுக்கிறார். அவருடைய கண்கள் அவன் மார்பில், சட்டையுடன் இணைந்திருந்த சிறிய பெயர் அட்டையைப் பதிவு செய்து கொள்கின்றன.

பால் நிக்சன். வெடவெடவென்று உயரமாக, கஸ்டம்ஸ் அதிகாரியின் நீல உடைக்குள் கனகச்சிதமாகப் பொருந்திய அந்த உடலுக்குச் சொந்தக்காரன் நாற்பதுக்குள்தான் இருப்பான். சந்தனச் சிவப்பும் இந்தக் கூர்மையான கண்களும் எப்படித்தான் இவர்களுக்குக் கூடி வருகின்றனவோ...?

''உள்ளே ஏதாவது உணவுப் பொருட்கள் உள்ளனவா?'' - அவன் ஆங்கில உச்சரிப்பு இவருக்குச் சட்டென்று புரியவில்லை. அவன் மீண்டும் வினவ, ''இல்லையே'' என்று சிவகடாட்சம் தலையை ஆட்டுகிறார்.

''அப்படியானால் வேறு ஏதாவது கடத்துகிறீர்களா...?''

''இந்த வயதில் என்னைப் பார்த்தால் ஒரு கடத்தல்காரனைப் போலவா தோன்றுகிறது?''

''கடத்தலுக்கு வயது தடையில்லையே... இந்தப் பெட்டியின் சாவியைக் கொடுக்கிறீர்களா? திறந்து பரிசோதனை செய்யவேண்டும்...''



மளமளவென்று அந்தப் பெட்டியைத் திறந்து, உள்ளிருக்கும் பொருட்களை, உடைகளை, மிக நேர்த்தியாக அலசி, மாம்பழங்கள் இருந்த அந்தக் குறிப்பிட்ட பொட்டலத்தை எடுத்துப் பிரித்துப் பார்க்கிறான் பால் நிக்சன்.

''என்ன இவை? ஒன்றுமில்லை என்றீர்கள். இதுவும் ஒரு வகைக் கடத்தல் என்று தெரியுமா உங்களுக்கு...? தெரிந்தே...''

அவன் முடிக்கும்முன், பின்னால் இருந்த தையல்நாயகி அதிர்ச்சி அடைந்து பதறுகிறாள்.

''என்னங்க... புள்ளத்தாச்சி பூர்ணிமா எப்பவோ ஆசையா சொன்னதை நெனைக்க, தம்பி சந்துரு பாசமா எடுத்து வச்ச தோட்டத்துப் பழங்க இதெல்லாம்... இந்த ஆளுக்குப் புத்திகித்தி பெசகிப் போச்சா...? ஸ்மக்லிங் அது இதுன்னு



ஏதேதோ பேசறான்...?''

வீடு செய்த தவறு. சிவகடாட்சம் நிலை குலைந்து போகிறார்.

''மாட்டிவிட்டுட்டியே தையலு. மொதல்லயே எங்கிட்ட சொல்லியிருக்கக் கூடாது? ஸாரி மிஸ்டர் பால், நான் மன்னிப்பு கேக்கறேன். என் பொண்ணு இப்போ ப்ரக்னண்ட். எட்டாவது மாசம். சிக்காகோவுல இருக்கா. அவ ஆசைப்பட்டான்னு அவ தம்பி, என் மகன், எனக்கே தெரியாம இதை எடுத்து வைச்சிருக்கான்.''

''நம்பறா மாதிரி இல்லியே... உங்க பெட்டிலே என்ன இருக்குன்னு உங்களுக்கே எப்படித் தெரியாம போகும்? கடத்தறவங்க எல்லாரும் சொல்ற வசனம் இது.''

ஜிவ்வென்று ஏறுகிறது சிவகடாட்சத்துக்கு.

''என் மகன்தான் எனக்கு எல்லாம் பேக் செஞ்சு உதவினான். பிரியமான ஒரு பிள்ளைத்தாய்ச்சி சகோதரிக்கு, பாசமா ஒரு தம்பி அனுப்பிய இந்தப் பழங்களை, நீங்க கடத்தல்னு சொன்னீங்கன்னா நான் என்ன செய்ய...? உங்க நாட்டு சட்டப்படி இது ஒரு குற்றமா இருக்கலாம். அக்கா- தம்பிங்கற பாச உணர்வு, இதைத் தப்புன்னு எங்க நாட்டுல சொல்லாது...'' - அவ்வளவு கோபத்திலும் மகனை விட்டுக் கொடுக்க முடியவில்லை அவரால்.

''நான் கேட்டப்போ நீங்க உண்மையை மறைச்சுட்டீங்க... அபராதம் முன்னூறு டாலர். கட்டிட்டு உங்க பெட்டியைத் தூக்கிட்டுப் போகலாம்...'' பழங்களை எடுத்து, ஒரு குப்பைப் பைக்குள் அடைத்துத் தூக்கி ஓரமாக இருந்த குப்பைப் பெட்டிக்குள் போட்டவாறே சொல்கிறான் பால். பக்கத்திலிருந்த கம்ப்யூட்டரில் ரசீது தயார் செய்தவாறே, அவர் தங்கப் போகும் விலாசத்தைக் கேட்கிறான். மாப்பிள்ளை அனுப்பியிருந்த விலாசத்தை எடுத்து நீட்ட, அதைக் குறித்தவாறே ஆச்சரியமாக அவரிடம் கேட்கிறான்...

''ஓ... ராம் உங்களுக்குச் சொந்தமா?''

''**கா**லங்களை கதைகளில் அவ்வளவு எளிதில் சொல்லி விட முடியாது. எனினும் 'பேசு' படம் ஒரு மழைக்காலத்தில் தொடங்கி, பனிக் காலத்தில் நிறைவடையும் கதை. மேலும், இந்தப் படத்தின் பின்னணிக்காக இரண்டு வண்ணங்களைத் தேர்வு செய்திருக்கிறோம். முதல் பாதி முழுக்க பச்சை நிறமும் ஈரப்பதமும் இருக்கும். இதற்காக ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை போன்ற இடங்களில் படப்பிடிப்பு நிகழ்த்தினோம். இரண்டாவது பாதி பனி சூழ்ந்த வெண் நிறம். குலுமணாலி, காஷ்மீர் போன்ற இடங்களில் காட்சிகள் நகரும். குலுமணாலி, குலாபா என்னும் இடத்தில் ஒரு ரயில்வே ஸ்டேஷன் செட் போட்டு படத்தை எடுத்திருக்கிறோம். இதற்காக 100 பேர் 20 நாட்கள் உழைத்திருக்கிறார்கள்!'' என்கிறார் படத்தின் இயக்குநர் ரா.சிரில். இவர் ஏற்கெனவே இயக்குநர்கள் கதிர், துரை, கலா பிரபு ஆகியோரிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர்.

**- அமுதா**

''என் மாப்பிள்ளை...''

''குட்... கன்வே மை விஷஸ் டு மிஸஸ் அண்ட் மிஸ்டர் ராம்.'' - அந்த விலாசத்தையே நோக்கியவாறு சொல்கிறான் அவன்.

அபராதம் செலுத்தி வெளியே வரும் அவர், இது குறித்து மாப்பிள்ளையிடமோ பூர்ணிமா

**சீஸன்போது தாழ்வாரம், பின்கட்டு என்று எங்கும் மாம்பழங்கள் காலை இடறும். மஞ்சளும், சிவப்பும், பச்சையுமாக.**



விடமோ எதுவும் சொல்ல வேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்கிறார்.

மாப்பிள்ளை ராம் சிரித்தவாறு அவர்களை வரவேற்கிறான்.

''நாளைக்கு வளைகாப்புக்கு எல்லாம் ஏற்பாடு பண்ணிட்டேன். தடபுடலா நடத்திடலாம். தமிழ்நாடே நாளைக்கு நம்ம வீட்டுக்கு வந்துரும் பாருங்க... சிக்காகோ தமிழ்ச்சங்கம் அவ்வளவு பிரபலம் இங்கே...'' - ராம் பேசிக்கொண்டே வண்டி ஓட்ட, வீடு வருகிறது.

பூர்ணிமாவின் சீமந்த தினம். ராம் கூறியவாறே சிக்காகோ தமிழ்ச்சங்க உறவின் காரணமாக, உறவுகளை விட அதிகமான நண்பர்கள் கூட்டம், இடத்தையே கலகலக்க வைத்துக்கொண்டு இருக்கிறது.

மிக நிதானமாக வரும் ஒரு கார் நிற்க, அதிலிருந்து அமைதியாக இறங்கும் அமெரிக்கரைப் பார்த்துத் திடுக்கிறாள் தையல்நாயகி. கெகிகெப்பாக சிவகடாட்சத்தை அழைத்துச் சுட்டிக்காட்டுகிறாள். அவருக்கும் ஒன்றும் புரியவில்லை.

''பால்'' - மாப்பிள்ளை ராம், வெகுவாகச் சிரித்தவாறே வரவேற்க ஓடுகிறான்.

பால் நிக்சன் கையில் ஒரு பெரிய கூடை.

''வா பால், ப்ளீஸ் மீட் மை பேரன்ட்ஸ்'' - பூர்ணிமா, பெற்றோருக்கு வந்தவனை அறிமுகப்படுத்தும் ஆவலில்

## தூறல் கவிதை

அவசர கதியில்
அத்தனைக் கால்களும்
ஓட்ட நடையா நடை ஓட்டமா

மழைதனில் நனைந்தால்
முகம் அது கரைந்து
உண்மை முகந்தான்
வெளிப்பட்டு விடுமோ

ஓடி ஒளிய ஒவ்வொரு மனசும்
கறுத்து விரிந்த
காளான்களுக்குள்ளே

வெயிலில் காய்கையில்
வெறுமையாய்ப் போகையில்
விழுந்தால் மழைத்துளி
நன்றாயிருக்குமே
எண்ணிய எண்ணங்கள்
விழுந்த துளியில்
போட்ட கோலமாய்க்
கரைந்து போனது.

கப்பல் விட்ட காலமெல்லாம்
கண்ணில் வந்து வந்து சென்றது
பள்ளிக்கூடம் விட்டதும் மழையில்
பையப் பைய நடந்து வந்தது
ஞாபக மேகமாய்த்
தூறல் பெய்தது!

**- மா.கண்ணன்**

இருக்க, ராம் முந்துகிறான்.

''பூர்ணி... நீ அலட்டிக்காதே... வேகமா நடக்காதே... நான் பாத்துக்க மாட்டேனா? மாமா... இது பால் நிக்சன். மூணு வருஷமா என்னோட டென்னிஸ் பார்ட்னர். யு.எஸ்ல எனக்கு பெஸ்ட் ஃப்ரெண்ட். ஒரு மிகச் சிறந்த அமெரிக்கக் குடிமகன். கஸ்டம்ஸ் அதிகாரியா இருக்கான்.''

பால், இருவருக்கும் வந்தனம் செலுத்தி, 'ஹாய்' என்கிறான்.

''இந்தக் கட்டல போறவன் இங்கே ஏன் வந்தான்?'' - தையலின் கோபத்தை முகம் மறைக்கவில்லை.

''ஆனா ஒண்ணு சொல்லணும். நட்பை வைச்சுகூட இவன்கிட்ட எந்த அஃபிஷியல் காரியத்தையும் சாதிச்சுக்க முடியாது. நீங்க இங்க சிக்காகோ வந்த அன்னைக்கு இவன் தான் ட்யூட்டில இருந்தானாம். உங்க பாஸ் போர்ட்டைப் பார்த்ததா அடுத்தநாள் டென்னிஸ் விளையாடும்போது சொன் னான்.''

''வேற ஒண்ணும் சொல்லலையா?''

''சீமந்தத்துக்கு இன்வைட் பண்ணி யிருந்தேன். நான் சிஸ்டர் பூர்ணிமாவுக்கு எந்த ப்ரெசன்ட் கொடுத்தாலும் வாங்கிப் பியா, அது சீப்பா இருந்தாலும்னு கேட் டான்...''

''சிஸ்டரா?''

''ஆமாம் மாமா. சிக்காகோவுல நூற்றுப் பத்து வருஷங்களுக்கு முன்னாடி வந்து, சர்வசமய மகாநாட்டுல டியர் சிஸ்டர்ஸ் அண்ட் ப்ரதர்ஸ்ன்னு முழங்கின காவி உடை தரிச்ச நம்ம ஊர் சந்நியாசி விவே கானந்தர்தான் இவனோட ஆதர்ச குரு. அவர் மூலமாவே இந்தியாவோட ஆன்மா வைத் தெரிஞ்சுக்கிட்டவன் இவன்...''

ஆச்சரியமாக இருக்கிறது சிவகடாட் சத்துக்கு!

''பூர்ணிமா... கம் ஹியர்... ப்ளீஸ் அக்ஸெப்ட் மை லிட்டில் கிஃப்ட்.''

பூர்ணிமா அவனுக்கு நன்றி கூறி, கூடையை வாங்கிக் கொள்கிறாள்.

கூடையைத் திறந்து, பரிசு பிடித்திருக்கிறதா என்று பார்க்கும்படி பால் வினயமாக வினவ, அவள் வெட்கத்துடன் அதைத் திறந்து பார்க்கிறாள்.

கூடையில் சிரித்துக்கொண்டிருந்தன சிக்காகோ மாம்பழங்கள்! ○



# 21ம் நூற்றாண்டு மைனஸ் என்ஜினீயர்ஸ் - ஒரு கற்பனை




சிவில் என்ஜினீயர்ஸ் பாலம் கட்டலைன்னா பரவாயில்ல... எல்லோரும் லாங் ஜம்ப், ஹை ஜம்ப் சாம்பியன்ஸ் ஆகியிருப்போம்... ஒலிம்பிக்ஸ் தாங்காது!

ஏரோநாட்டிக்ஸ் இல்லேன்னா என்ன... நம்ம மக்கள் பாக்காத புஷ்பக விமானங்களா?



# இப்படி இருந்தா எப்படி இருக்கும்?

கம்யூனிகேஷன் இல்லேன்னா ப்ளூ டூத்ல
பேசி, எதிர்ல இருக்கறவங்களையும் எங்கேயோ
இருக்கறவங்களையும் குழப்பமாட்டாங்க







கம்ப்யூட்டர் மட்டும் இல்லேன்னா,
லே ஆஃப், ரெசெஷன் எதுவும் இல்லாம ஹாயா
இருந்திருக்கலாம்

மெக்கானிக்கல் என்ஜினியர்ஸ் நானோ. ீ10 லாம் கண்டுபிடிக்காம இருந்திருந்தா சத்தமில்லாத உலகத்தைப் பார்த்திருக்கலாம். ஜஸ்ட் மிஸ்!




## எலெக்ட்ரிகல் என்ஜினியர்ஸ் இல்லாத உலகம்

75-ம் பக்கம் பாருங்க...




எலக்ட்ரானிக் என்ஜினியர்ஸ் இல்லைன்னா சீரியல்ஸ் பார்க்காம, வாழ்க்கை 'சிரி'யஸ் லைஃபா இருந்திருக்கும்.




உ

# நாடக மூலவர்கள் துணை!

● முரா.லிங்கம்

'ஸ்ரீ ராமஜெயம்', 'முருகன் துணை', இவைபோன்ற வாசகங்களைத்தான், பொதுவாக, கல்யாண அழைப்பிதழ்களின் தொடக்கமாக அச்சிடுவர்.

கொஞ்சம் வித்தியாசமாக, 'நாடக உலக மூலவர்களே எங்கள் துணை' என அச்சிடப்பட்டு, அவர்கள் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன, ஒரு திருமண அழைப்பிதழில். கவிஞர் முரா.லிங்கம் - பத்மராணி தம்பதியின் மூன்றாவது மகள் ஷோர்பனா - சிவகுமார் திருமண அழைப்பிதழ்தான் இப்படி வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாடகத் துறையில் இயங்கி வருபவர், கவிஞர் முரா.லிங்கம். ஸ்ரீரங்கத்துக்காரர். அறுபதுக்கும் மேற்பட்ட இவரது நாடகங்கள், இதுவரை சுமார் எழுநூறு முறை அரங்கேற்றம் கண்டுள்ளன.

சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், நவாப் டி.எஸ்.ராஜமாணிக்கம், அவ்வை டி.கே.சண்முகம் மற்றும் ஆர்.எஸ்.மனோகர் ஆகியோரின் படங்களை அழைப்பிதழில் இடம்பெறச் செய்தது குறித்துக் கேட்டோம்.

''இந்த ஐந்து மாமனிதர்களும்தான், தமிழ் நாடக உலகின் பிதாமகன்கள். அந்தந்தக் காலகட்டங்களில் தமிழ் நாடகங்களைச் செம்மையுற அமைத்து, நாடகக் கலை வளர்ச்சிக்கு தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர்கள். இல்வாழ்க்கை மணவிழா அழைப்பிதழில் அவர்களை நினைவுகூர்வதை என் பாக்கியமாகக் கருதுகிறேன்!'' என்கிறார் முரா.லிங்கம்.

இளைப்பாற நிழல் கொடுத்த முன்னோரை நினைவு கூர்கையில், இளம் தம்பதியின் வாழ்க்கைப் பயணத்தில் பாதைகள் கொஞ்சம் இலகுவாக, சுகமாகத் தோன்றத்தான் செய்யும்!

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



''மெகா தொடர்ல ஒரு வாரத்துக்கு வேண்டிய காட்சிகளை நடிச்சுக் கொடுத்துட்டு வந்தியா... என்ன காட்சி...?''

''மாடியிலே நின்னு அழறது... படியிலே நின்னு அழறது... கிச்சன்ல அழுதுட்டு... பெட்ரூம்ல அழணும்... அவ்ளோதான்...''

- திருத்துறைப்பூண்டி சேகர்



''ரீமிக்ஸ் கதையை எப்படி எழுதினீங்க?''

''பழைய பத்திரிகைக் கடையில் உட்கார்ந்துதான்.''

- செல்வராஜா

# ரீமிக்ஸ்



''நம்ம நாடகத்துல ரவுடிக்கு ராஜா வேஷம் தந்தது தப்பாப் போச்சு!''

''ஏன்? என்ன ஆச்சு?''

''வாளை இடுப்பில் செருகாமல், முதுகில் செருகியிருக்கறானே!''

- சம்பத் குமாரி



''நல்ல நூல்கள்தான் ஒருவருக்குச் சிறந்த நண்பன்...''

''காட்டன் நூலா... பாலியஸ்டர் நூலா ஸார்?''

- சொக்கம்பட்டி தேவதாசன்



''தலைவரே நம்ம தொகுதியில ரோட்டுல சாக்கடை ஓடுது. என்ன செய்யப் போறீங்க?''

''தாண்டிப் போகப் போறேன்.''

- பி. பாலாஜி கணேஷ்

# ராட்டர்!



''தலைவருக்கு பிராட் மைண்டாமே?''

''நீ வேற... அவருக்குச் சரியான ஃப்ராடு மைண்டு!''

- வீ.விஷ்ணுகுமார்

**பா**கிரதி அம்மாமியின் தாய் தந்தையர்கள் திருமங்கலத்துக்கு வந்து அவளைத் தங்களுடன் கிராமத்துக்கு அழைத்துப் போனார்கள். அவர்கள் சொற்பக் குடித்தனக் காரர்கள். பாகிரதியைத் தவிர அவர்களுக்கு வேறு பிள்ளை குட்டி கிடையாது. கிராமத்தில் ஐந்தாறு வருஷம் இருந்தார்கள். அப்புறம் கேதாரியைப் படிக்க வைப்பதற்காகத் திருச்சிராப்பள்ளிக்குக் குடி வந்தார்கள்.

**நே**ற்று நடந்தது போல் தோன்றுகிறது. அப்போது திருச்சிராப்பள்ளியில் மாத்ருபூதம் ஸ்டோரில் நானும் என் பெற்றோர்களும் குடியிருந்தோம். நான் முதலாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். ஸ்டோரில் எங்களுக்கு எதிர் வீடு சில நாளாகப் பூட்டிக் கிடந்தது. அன்றைக்கு யாரோ புதிதாகக் குடிவரப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டு ஆவலுடன் அவர்களுடைய வரவை எதிர்பார்த்தேன். ஒரு தாத்தா, ஒரு பாட்டி, ஒரு அம்மாமி, ஒரு பையன் - இவர்கள் பழைய தகரப் பெட்டிகளுடனும் மூட்டை முடிச்சுகளுடனும் வந்து சேர்ந்தார்கள். அந்தப் பையன் கையில் தங்கக் காப்புப் போட்டுக் கொண்டும், தலை பின்னிக் கொண்டும், குல்லா வைத்துக் கொண்டும் இருந்ததை



**வண்ணத் தூரிகை**

**அமரர் கல்கி**

நான் வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றது நன்றாய் ஞாபகம் இருக்கிறது.

அந்தப் பையன்தான் கேதாரி. அவனுடன் முதல் தடவை பேசின உடனேயே எனக்குப் பிடித்துப் போயிற்று. பட்டிக்காட்டிலிருந்து வந்தவனாதலால் எதைப் பார்த்தாலும் அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. குழாயிலிருந்து தண்ணீர் கொட்டுவதைக் கண்டு இடியிடியென்று சிரித்தான். காலையில் தாயுமான ஸ்வாமிக்குத் திருமஞ்சனம் கொண்டு வருவதற்காகப் போன யானையை அவன் பார்த்த பார்வையில் விழி பிதுங்கி விடும்போல் இருந்தது. ஓயாமல் அது என்ன, இது என்ன என்று கேட்டுக் கொண்டே யிருப்பான். நானும் சலிக்காமல் பதில் சொல்லி வந்தேன்.

('கேதாரியின் தாயார்' கதையிலிருந்து...)

# கேள்வியின் நாயகன்



# சங்கராபுரம்

புத்தியின் சஞ்சலத்தைப் புரிந்து கொண்ட மாதிரி பேசினா பெரியவா:

"தெக்குப் பார்த்த ராஜாக்களைப் பாத்தி ருக்கியோ? ஒருத்தர் அரங்கத்துல படுத் திண்டிருக்கார்; இன்னொருத்தர் கல்லால மரத்தின் கீழே உட்கார்ந்திருக்கார். அங்கே யோக நித்திரை; இங்கே ஞான முத்திரை. ரெண்டு பேருமே அமைதியா இருக்கா... லோகத்தோட கனபாரங்கள் பாதிக்காத அமைதி அது. அந்த மாதிரி மனசை அமைதியா வெச்சுக்கணும்" என்ற பெரியவா மந்திரியைப் பார்த்தார்.

"ஒண்ணும் கவலைப்படாதேங்கோ. எல்லாம் நல்லபடியா நடக்கும்."


"தங்கள் கருணை ஸ்வாமிஜி. கிருஷ்ண மூர்த்திக்கு ஏதாவது பண்ணணும்னு நெனைக்கிறேன். ஸ்வாமிஜி உத்தரவு கொடுக்கணும்."

"அவனுக்கு சுயதேவைன்னு ஏதும் இப்ப இல்லை. யோகக்ஷேமத்துக்கு அவனை ஒரு கருவியா பயன்படுத்தி ஏதாவது செய்யணும்னு ஒரு எண்ணம் இருக்கு. அதைச் சொல்றதுக்கு முன்னாலே நீங்க என்ன பண்ணணும்னு நெனைச்சிண்டு இருக்கேள்? போன தடவை உங்களோடு வந்த மந்திரியும் ஏதாவது செய்யப் போறாரா?"

"நான் புறப்படும்போது அவரோட பேசிட்டுத்தான் வந்தேன். அவரும் ஏதாவது பண்ணணும்னு ஆர்வமாயிருக்கார்."

"மறுபடியும் சொல்றேன். கிருஷ்ணமூர்த்திக்கு ஏதும் தேவையில்லை" என்ற பெரியவா, பேச்சை மாற்றினார்.

"அது இருக்கட்டும். எலெக்ஷன் எல்லாம் எப்ப



முடியும்?''

''இன்னும் ஒரு மாசத்திலே எல்லாம் முடியும். மந்திரி சபை பதவி ஏத்துக்கும். எனக்கு வாய்ப்பு கெடைக்குமான்னு தெரியலே.''

''தைரியமா, நம்பிக்கையோட போய்ட்டு வாங்கோ. நல்ல மனுஷாளுக்கு அம்பாள் எப்போதும் துணையிருப்பாள். சாவகாசமா சௌத்ரியையும் கூட்டிண்டு ஒரு தடவை வாங்கோ. அப்ப எல்லாம் பேசிக்கலாம்.''

பேசுவதற்குக்கூட, பெரியவாளிடம் கற்றுக்கொள்ளவேண்டும். எங்கே நீட்டுவது, எப்படி நிறுத்துவது, எதை உணர்த்துவது என்று தனி வகுப்பெடுப்பதுபோல அமைகின்ற பேச்சு அது. எதுதான் அவருக்கு வசப்படவில்லை - இது வசப்படாமல் போக?!

நீண்ட எண்ணங்களை நிறுத்தியது பெரியவாளின் குரல்:

''கிருஷ்ணமூர்த்தி, நீயும் கிளம்பு. டெல்லியிலே ஒன்னோட கடையைக் கட்டிண்டு வந்து சேர். நீ செய்ய வேண்டியது நெறைய இருக்குடா!''

ஒரு பக்கம் சந்தோஷம்; மறு பக்கம் கேள்வி! 'அடுத்து என்ன செய்யப் போகிறோம்?' என்ற கேள்வியுடன் இருவரும் திரும்ப டெல்லி புறப்பட்டோம்.

கடும் போட்டி, எதிர்ப்புக்களிடையே ரெட்டியும், சௌத்ரியும் தேர்தலில் ஜெயித்தனர். அவர்கள் கட்சி ஆட்சியைப் பிடித்தது. ரெட்டி காட்டிலாக்கா மந்திரியானார். சௌத்ரிக்கும் பதவி கிடைத்தது.

இருவரும் பதவி ஏற்றுக்கொண்டதும் முதல் வேலையாக காஞ்சிபுரம் புறப்பட்டனர். அதற்குள் நானும் என்னுடைய தொழில் எல்லாவற்றையும் பங்கிடு செய்தேன். என்னிடம் வேலை செய்தவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துவிட்டு மந்திரிகள் இருவருடன் புறப்பட்டேன்.

பெரியவாளை இருவரும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, ''தங்கள் அனுக்ரஹத்தால் ரெண்டு பேரும் எலெக்‌ஷன்லே ஜெயிச்சுட்டோம். மந்திரிப் பதவியும் கிடைச்சுடுத்து ஸ்வாமிஜி'' என்றனர்.

''இதிலே என்னோட கருணையும் ஆசீர்வாதமும் எங்கேருந்து வந்தது? ஜனங்களுக்கு நீங்கள்லாம் சேவகர்கள். உங்க வேலையைப் பார்த்து திருப்திப்பட்டு மறுபடியும் ஒரு அஞ்சு வருஷத்துக்கு வேலை போட்டுக் குடுத்திருக்கா. அவாள்ளாம் தான் உங்க எஜமானர்கள்னு




## 7 டால்மியாபுரம் கணேசன்

நீங்க நெனைக்கணும். ம்...சரி...

நாம் பாட்டுக்கு என்னமோ பேசிண்டிருக்கேன். கிருஷ்ணமூர்த்தி மூலமா ஜனங்களுக்கு என்ன பண்ணப் போறேள், சொல்லுங்கோ!''

''நான் ஒரு சின்ன திட்டத்தோட வந்திருக்கேன். ஸ்வாமிஜி உத்தரவு கொடுத்தா செஞ்சுடலாம்.''

''என்னன்னு சொல்லுங்கோ.''

''நான் இப்ப காட்டிலாகா மந்திரியாயிருக்கேன். தமிழ்நாடு பார்டர்லே ஆந்திரா எல்லைக்குள் ஒரு இடத்துல மூணு பக்கம் மலை, நடுவிலே ஒரு பள்ளத்தாக்கு. சுமாரா 500 ஏக்கர் நிலம் இருக்கும். அரசாங்கச் சொத்து. அந்த இடத்தை கிருஷ்ணமூர்த்திகிட்டே குடுத்துட்டா, 'அவர் திட்டப்படி அங்கே எது வேணா பண்ணிக்கலாம். ஃபாக்டரி கட்டலாம், விவசாயம் பண்ணலாம்.''

''500 ஏக்கர் நிலத்தை வாங்க அவன் பணத்துக்கு எங்கே போவான்? மேலும் தொழிற்சாலைகள் கட்டி, பொருட்கள் உற்பத்தி பண்றது - இதுக்கெல்லாம் மனுஷா நிறைய இருக்கா. இவன் பண்ண வேண்டியதெல்லாம், ஜனங்களுக்கு சுபிக்ஷம், ஆரோக்யம், காலங்காலமாக நம்மளோட முன்னோர்கள் நமக்காக விட்டுட்டுப்போன தர்மங்களை ரக்ஷிக்கறது - இதெல்லாம் தான் - தர்மோ ரக்ஷதி ரக்ஷித:!''

''அவர் இந்த நிலத்தை வெலை குடுத்து வாங்க வேண்டாம் ஸ்வாமிஜி. 99 வருஷத்துக்கு உபாயமா வருஷ வாடகை செலுத்தற மாதிரி லீஸுக்கு எடுத்துக்கலாம். அதுக்கு நான் ஏற்பாடு பண்றேன். ஆனா பொது ஜன சேவைக்குன்னு உருவாக்கின ஒரு ட்ரஸ்ட்டுக்குத்தான் இந்த நிலத்தைக் கொடுக்க சாத்தியப்படும்.''

மந்திரி முடிக்கும்முன், அருகிலிருந்த நான், ''ஸ்ரீ சங்கரா ட்ரஸ்ட்'ன்னு உருவாக்கிடலாம்'' என்றேன்.

ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே, ''பலே, அதுக்குள்ள பேரே வச்சுட்டியா? முடிவு எடுக்கறதுக்கு முன்னாலே, நான் அந்த இடத்தைப் பார்க்கணுமே? ஒண்ணு பண்ணுங்கோ! இன்னிலேருந்து ரெண்டு நாள் கழிச்சு அங்கே வந்துடறேன். நான் நடந்து வரணும். அதுக்காகத்தான் அவகாசம் கேட்டேன். நீங்க ரெண்டு பேரும்

## அருள்வாக்கு



மெட்ராஸ்லே போய்த் தங்கிட்டு, இந்தப் பக்கத்திலேருந்து சேதி தெரிஞ்சதும் புறப்பட்டு வந்துடுங்கோ!

கிருஷ்ணமூர்த்தி, நாம பார்க்கப் போற இடம், அவா எங்கே தங்கப்போறா எல்லாத்தையும் தெரிஞ்சுண்டு தேவையான ஏற்பாடுகள் பண்ணிடு. அப்ப நீங்க புறப்படலாம்.''

# "கிருஷ்ணமூர்த்தி.நீயும் கிளம்பு. நீ செய்ய வேண்டியது நிறைய இருக்குடா!"

மந்திரிகள் இருவரும் வணங்கி, விடை பெற்றனர்.

மடத்தின் மேனேஜர் ஸ்வாமிகளின் யாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்.

தமிழக எல்லை முடிந்து, ஆந்திர ஸ்வாமிகள் வரப்போகும் செய்தி பரவி, அருகில் உள்ள கிராம மக்கள் பெருமளவுக்குக் கூடி விட்டனர்.

''ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர'' எனும் மந்திரகோஷம் வானைப் பிளந்தது. மாலை நான்கு மணிக்கு, பயணத்தால்

---

**அ**றமும் அறிவு நூலால் வருவதே; அறிவு நூலின் பயனும் அறத்துக்கு உதவ வேண்டுவதே. ஆகையால் இவற்றைப் பிரித்துக்கூடச் சொல்லக்கூடாது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு

என்று திருக்குறளில் சொல்லியிருக்கிறது.

எந்த விஷயமாகட்டும், அதை யார்தான் எடுத்துச் சொல்லட்டும், அதன் சரியான தாத்பர்யம் என்னவென்று பார்த்து ஏற்றுக் கொள்வதே புத்திசாலித்தனம் என்று அர்த்தம். இப்படிச் சொன்னதால் முதலிலேயே எந்த ஒரு வித்யையும் தப்பு என்று ஒதுக்கி வைத்து விடாமல் அதிலும் ஏதாவது உசந்த கருத்து இருக்குமா என்று ஆலோசிக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. அதேபோல, 'போயும் போயும் இவர்களிடமா கற்றுக் கொள்வது? இவர்கள் சொல்லியா கேட்டுக் கொள்வது?' என்றெல்லாம் நினைக்காமல், 'சொல்வது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும்; சொல்வதில் தாத்பர்யம் இருந்தால் எடுத்துக் கொள்வோம்' என்று நினைக்க வேண்டுமென்றும் ஏற்படுகிறது. இந்த இரண்டு பண்புகளையும் தர்ம சாஸ்திரங்களில் வெகுவாக ஆதரித்து வற்புறுத்தியிருக்கிறது.

'விஷயமிருக்கிறதா என்று பார்க்கிறேன்' என்று பொய் சமாதானம் சொல்லிக் கொண்டு, கன்னாபின்னா சமாசாரங்களைக்கூட ஒருத்தன் படிக்கலாம். அதாவது 'எப்பொருளை'யும் படிக்கலாம். ஆனால், உசத்தி தாழ்த்தி பார்க்காமல், 'யாரார் வாய்க் கேட்பது' லேசில் முடியாது.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி**
**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்**

---

எல்லை தொடங்கிய சற்று தூரத்தில் விரிந்து கிடந்தது அந்தப் பகுதி!

மந்திரிகள் இருவரும் நான்கு மணி நேரத்துக்கு முன்னதாகவே அந்த இடத்துக்கு வந்துவிட்டார்கள். ஓரளவுக்குச் செப்பனிட்டு, சிறிய பந்தலும் ஸ்வாமிகள் அமர்வதற்கான ஒரு மேடையும் அமைத்துக் காத்திருந்தனர்.

உண்டான களைப்போ, தளர்ச்சியோ தென்படாத புன்முறுவலும், அருள்நோக்கும் விளங்க பெரியவா எழுந்தருளினார்.

என்ன பொருத்தம்?!

அது, சங்கரருக்குப் பொருத்தமான பிரதோஷ காலம்!!

**(தொடரும்)**

**பி**ரஜா ராஜ்யம் கட்சியின் முதலாம் ஆண்டு விழாவை, கட்சியின் ஜூப்ளி ஹில்ஸ் அலுவலகத்தில் மிக எளிமையாகக் கொண்டாடினார் நடிகர் சிரஞ்சீவி. தொண்டர்கள் மத்தியில் பேசும்போது, ''ஆட்சியைப் பிடிப்போம் என எதிர்பார்த்த நமக்கு, தேர்தல் முடிவுகள் ஏமாற்றத்தை அளித்து விட்டன. எனினும் பதினேழு சதவிகித வாக்குகள் பெற்றிருக்கிறோம்; அது சாமானிய சாதனையல்ல. கட்சியில் உள்ள குறைபாடுகளைக் களைந்து, பலப்படுத்துவோம்'' என்று உற்சாகமூட்டியிருக்கிறார். ***(நாம தோற்றதற்கு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்தான் காரணம்னு சாமர்த்தியமா பழி போட வேண்டியதுதானே சிரஞ்சீவி காரு?)***

**ஆ**ந்திர அரசு, 2004ஆம் வருடம் தண்டனை பெற்று சிறையிலிருந்த 600 கைதிகளை விடுதலை செய்தது பெரிய சர்ச்சையைக் கிளப்பியது. இரண்டாவது தவணையாக இன்னும் 950 பேரை விடுதலை செய்ய இப்போது முடிவெடுத்துள்ளது. இதில் 28 பெண்களும், 65 வயதுக்கு மேலானவர்கள் 35 பேரும் அடக்கம். அதற்கான மாநில அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை போலீஸ் ஸ்டேஷனுக்கு வர வேண்டும்; மறுபடியும் ஏதாவது குற்றம் செய்தால், விடுதலை ரத்தாகி விடும் போன்ற கண்டிஷன்களுடன்தான் விடுதலையாகிறார்கள். ***(அடடா! ஜெயில்ல இருந்தாலும் ஆந்திரா ஜெயில்ல இருக்கணும்ப்பா!)***

**நா**கார்ஜுனா மீண்டும் தமிழுக்கு வருகிறார். 'மொழி', 'அபியும் நானும்' படங்களை இயக்கிய ராதா மோகன்தான் இயக்குநர். தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் படமாகவிருக்கிறதாம். தவிர, நாகார்ஜுனாவின் மகன் நாக சைதன்யாவும் ஹீரோவாகி ஆந்திராவைக் கலக்கிக் கொண்டிருக்கிறார். ***(அப்பாவுக்கு ஆர்ம்ஸ்ட்ராங் பாட்டு; சைதன்யாவுக்கு சந்த்ரயான் பாட்டா..?)***



✱ ஏமாற்றிய முடிவுகள்




* விளையாட்டு மன்னன்...

**தி**ருப்பதி திருமலா தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் வருகிறது கோதண்டராமசாமி கோயில். அந்தக் கோயிலைச் சேர்ந்த வெங்கடரமண தீட்ச தருலு என்பவர், கோயிலுக்குச் சொந்தமான சுமார் ஒரு கிலோ நகைகளை தனியாரிடம் அடகு வைத்து, பத்து லட்சம் ரூபாய் வாங்கி இருப்பது திருப்பதி வட்டாரத்தையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது! போலீஸ் வழக்குப் பதிவு செய்து தீட்சிதரையும், அவருக்குக் கடன் கொடுத்த வட்டிக் கடைக்காரரையும் கைது செய்துள்ளது. *(லட்டுக்கே அல்வாவா...?)*

**ந**ல்ல சாப்பாடு, வசதியான படுக்கை, பொழுது போக்க டீ.வி., என்று ஜெயிலுக்குள் தம் சௌகரியங்களைப் பெருக்கிக்கொண்ட சத்யம் கம்ப்யூட்டர்ஸ் ராமலிங்க ராஜு, ஜெயில் வளாகத்தில் மாலை நேரங்களில் தம் சகாக்களுடன் பேட்மின்டன் ஆடுகிறாராம். *(வெளியில பூந்து விளையாடிட்டுதானே ராஜு உள்ளே போனீங்க! உள்ளேயும் விளையாட்டா?)*

– பரத்ராம்

# நாகார்ஜுனா ரிட்டர்ன்ஸ்!



* ... இன்று சந்த்ரயான்.



* நேற்று ஆர்ம்ஸ்ட்ராங்...

# ஸ்டார்ட்... கேமரா... ஆனந்த்!

ஐஸ்வர்யா ராய்க்கும் எனக்கும் 'அவுர் பியார் ஒகையா'தான் முதல் இந்திப்படம். மும்பை ஹோட்டலில் தயாரிப்பாளர் சொசைல் மக்லாயைச் சந்தித்தபோது, ''காதல் தேசம் படத்தின் என்னுடைய கேமரா பார்த்துவிட்டு, உங்கள் படத்தில் பணியாற்ற அழைக்கிறீர்கள். அதில் எனக்குச் சந்தோஷம்தான். ஆனால், அந்தப் படத்தின் ஒளிப்பதிவு சிறப்பாகப் பேசப்படுவதற்குக் காரணமே ஒவ்வொரு காட்சியையும் அதற்கு ஏற்ற சரியான லைட்டிங்கில் எடுத்ததுதான். 'காதல் தேசம்' படத்தின் படப்பிடிப்பு 100 நாட்கள் நடந்தாலும், 40 நாட்கள் அதிகாலையிலேயே ஷூட்டிங்கை ஆரம்பித்து விட்டோம்.

# அனிவர்ஸரிக்கு வந்த



இப்படியெல்லாம் கஷ்டப்பட்டதற்கு படத்தில் நல்ல ரிசல்ட் கிடைத்தது. இது இந்திப் பட உலகில் சாத்தியமில்லையே! ஹிந்திப் பட ஹீரோக்கள் காலையில் பதினொரு மணிக்குத்தான் ஷூட்டிங்குக்கு வருவார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று சற்று வெளிப்படையாகவே பேசினேன்.

என் தயக்கத்துக்கான காரணத்தைப் புரிந்துகொண்டு, அவர் அங்கிருந்தே ஹீரோ பாபி தியோலுக்கு ஃபோன் செய்து, உடனே ஹோட்டலுக்கு வரவழைத்தார். பாபியிடம் என்னை அறிமுகப்படுத்தினார். பி.சி.ஸ்ரீராம் பற்றி ரொம்ப உயர்வாகச் சொல்லிவிட்டு, ''அவருடைய சீடரான உங்களுடன் பணியாற்ற நான் ஆர்வமாக இருக்கிறேன்! பொதுவாகவே, தென்னிந்திய டெக்னீஷியன்களுடன் பணியாற்ற எனக்கு விருப்பம் அதிகம்'' என்றார் பாபி.

''இந்தப் படத்தின் ஸ்கிரிப்டை




நான் படிச்சேன்! ரொம்ப சாஃப்டான ரொமான்டிக் லவ் ஸ்டோரி. முப்பது, நாற்பது நாட்கள் அதிகாலை நேரத்தில் ஷூட் பண்ண வேண்டி இருக்கும். உங்களால அட்ஜஸ்ட் செய்து கொண்டு சரியான நேரத்துக்கு வர முடியுமா?'' என்று கேட்டேன்.

சில நிமிடங்கள் அமைதியாக இருந்துவிட்டு, அவர் சொன்ன பதில் எனக்கு அதிர்ச்சியளித்தது. ''கவலைப்படாதீங்க கே.வி! அதிகாலை நாலு மணிக்கு ஷூட்டிங் என்றாலும் நான் கரெக்டாக நேரத்துக்கு செட்டில் இருப்பேன். உங்களுக்காக என் தூக்க ஷெட்யூலை கொஞ்சம் அட்ஜஸ்ட் செய்துகொண்டால் போச்சு! தினம் நான் தூங்கப் போக நள்ளிரவு ஆகிவிடும். அதனால, அதிகாலையில என்னால எழுந்திருக்க முடியாது. உங்களுக்காக நான் ராத்திரி இன்னும் ரெண்டு, மூணு மணி நேரம் எக்ஸ்டிராவா தூங்காமல் இருந்துவிட்டு, நேரே உங்க ஷூட்டிங்குக்கு வந்திடறேன். காலை பதினொரு மணி பக்கமா பிரேக் குடுத்தீங்கன்னா, அப்போ தூங்கிக்கறேன்'' என்றார்.

# ஐஸ்வர்யா ராய்!

பாபி தியோலின் வித்தியாசமான அட்ஜஸ்ட்மென்ட்டும், ஸின்சியாரிடியும் என் தயக்கத்தைப் போக்கின. முதல் படப்பிடிப்பு ஷெட்யூல் கோவாவில், பத்து நாட்களுக்குத் திட்டமிடப்பட்டிருந்தது. காலை ஆறு மணிக்கு ஹீரோ பாபி தியோல், ஹீரோயின் ஐஸ்வர்யா ராய் உட்பட மொத்த யூனிட்டும் ஆஜர். ஆனால், படப்பிடிப்பைத் திட்டமிட்டபடி ஆறு மணிக்கு ஆரம்பிக்க முடியவில்லை. காரணம் படத்தின் டைரக்டர் வரவில்லை.

நாங்கள் அனைவரும் டைரக்டருக்காகக் காத்துக் கொண்டே இருந்தாலும், கோவா பீச் சூரியன் யாருக்கும் காத்துக் கொண்டிருக்காமல் விறுவிறுவென்று மேலே ஏறிக் கொண்டே இருந்தது. ஒரு வழியாக எட்டரை மணிக்கு டைரக்டர் வந்து சேர்ந்தார். உடம்பு சரியில்லாததால் தாமதமாகிவிட்டது என்று காரணம் சொன்னார். காலை நேரப் படப்பிடிப்பைத் தவறவிட்டது பற்றி அதிகமாக அலட்டிக்கொள்ளாமல், ஒரு சில காட்சிகளை எடுத்து முடித்தார்.

மறுநாள் எடுக்க வேண்டிய காட்சிகள் பற்றி என்னிடம் அன்று மாலை பேசுவார்; அடுத்தநாள் தடங்கல் ஏதுவுமின்றி ஆறு மணிக்கே படப்பிடிப்பு துவங்கிவிடும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், என்னைவிட சுமார் இருபத்தைந்து வயது மூத்த அந்த இயக்குநரின் சினிமா பற்றிய சிந்தனையே, என்னுடையதிலிருந்து முற்றிலுமாக மாறுபட்டிருந்தது. கேமரா மேன் என்பவர் டைரக்டரின் சௌகரியப்படி அவர் முடிவு செய்து வைத்திருக்கும் காட்சிகளை அவர் சொல்லும் லென்ஸ் மற்றும்



கே.வி.ஆனந்த்

கேமரா மூவ்மென்ட்டில் எடுத்துக் கொடுக்கும் கேமரா ஆபரேட்டர் என்பது அவரது கருத்து. என்னால் அப்படிப்பட்ட சூழ்நிலையை ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

அந்த இயக்குநரைக் குறை சொல்லவும் விரும்பவில்லை. அவரது பாணி அது. அவரும் வெற்றிப் படங்கள் கொடுத்திருக்கிறார். தனிப்பட்ட முறையில் பார்த்தாலும், என்னிடம் மிக நட்புடன் அவர் பழகினார். ஆனால், அவரது இயக்கத்தில், ஒரு கேமராமேனாகப் பணியாற்றுவது எனக்கு சரிப்பட்டு வரவில்லை.

தயாரிப்பாளரிடம், ''உங்



''உங்க ஷெட்யூலுக்கு ஏத்த மாதிரி நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்!''

களைச் சந்தித்துப் பேச வேண்டும்'' என்றேன். நான் தங்கி இருக்கும் ஹோட்டல் சாப்பாடு சரியில்லை; கேமராவுக்கு ஸ்பெஷல் லென்ஸ் தேவை என்கிற ரீதியில் பேசப் போகிறேன் என எதிர்பார்த்தவரிடம், ''இந்தப் படத்தில் இனி தொடர்ந்து பணியாற்றுவது சாத்தியமில்லை'' என்று பொறுமையாக இயக்குநருக்கும், எனக்கும் இடையிலான இடைவெளி பற்றி, நாகரிகமான முறையில் எடுத்துச் சொல்லிவிட்டு அந்த ஷெட்யூலுடன் குட் பை சொல்லிவிட்டேன். சென்னை வந்த பிறகு என் கருத்தை ஒரு கடிதமாக எழுதி டைரக்டருக்கு அனுப்பி வைத்தேன்.


ஐஸ்வர்யா ராய் என்றவுடன் இன்னொரு சுவாரஸ்யமான சம்பவம் நினைவுக்கு வரும். என் நெருங்கிய நண்பர்கள், ''நீ ரொம்ப பெரிய ஆளு! உன் திருமண அனிவர்ஸரிக்கு, உன் மனைவி வரலை; ஆனா, ஐஸ்வர்யா ராய் வந்திருந்தாங்களே!'' என்று கிண்டல் செய்வார்கள். கோவாவில் 'அவுர் பியார் ஒகையா' முதல் ஷெட்யூல் ஷூட்டிங் நடக்கும்போதுதான், என் முதல் வருட திருமண அனிவர்ஸரி வந்தது. படப்பிடிப்புக்கு இடையில் என்னால் சென்னை வர முடியவில்லை; என் மனைவியாலும் கோவாவுக்கு வர முடியவில்லை. விஷயம் அறிந்த இயக்குநர், ஷூட்டிங்கின்போதே ஒரு பெரிய கேக் வரவழைத்தார். டைரக்டர், பாபி தியோல், ஐஸ் அனைவரும் சூழ, கேக் வெட்டி என் திருமண அனிவர்ஸரியைக் கொண்டாடினேன்!

இதுவரை உலக அழகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களிலேயே ஐஸ் தான் டாப் அழகி. அவரது முகம் அழகின் இலக்கணம். நடு முகத்தில் செங்குத்தாக ஒரு கோடு போட்டுப் பிரித்தால் வலது பக்கமும், இடது பக்கமும் ஒன்றுக்கொன்று பிரதிபலிப்பாக - ஒரு சிமெட்ரிக்கான முக லட்சணம் அவருக்கு. இப்படி முக அழகு அமைவது வெகு அபூர்வம். ஐஸ்வர்யா ராயை தவறான லென்ஸ் போட்டு, தவறான கோணத்தில் படம் எடுத்தாலும், அழகாகவே தோன்றுவார்.

அவர் நடித்த முதல் படத்தில் முழுமையாக வொர்க் பண்ண முடியாவிட்டாலும் சில ஆண்டுகள் கழித்து, 'ஜோஷ்', 'காக்கி' என இரு படங்களிலும் அவரைப் படம் பிடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

**(ஆக்ஷன் தொடரும்)**

எழுத்து வடிவம்: **எஸ்.சந்திரமௌலி**


அன்று
இன்று

'சந்தோஷ் சுப்ரமணியம்' வெளி வந்த பதினைந்து மாத இடை வெளியில் 'தில்லாலங்கடி' என்ற திரைப்பட அறிவிப்போடு களத்துக்கு வந்திருக்கிறார் இயக்குநர் எம்.ராஜா. ஹீரோ...? சாட்சாத் அதே ஜெயம் ரவிதான். ரவிக்கு திருமணத்துக்குப் பிறகு முதல் படம். தயாரிப்பது ராஜா, ரவியின் தந்தை எடிட்டர் மோகன். குடும்பமாய்க் குதூகலத்தோடு தயாரித் துக் கொண்டிருக்கின்றனர். அதே குதூகலத்தோடு நம்மிடம் பேசுகிறார் இயக்குநர் ராஜா...

**அதென்னங்க தில்லாலங் கடி...?**

''ஒரு காரணமும் இருக் காது. ஆனா, ஒருத்தரைப் பார்த்தாலே நமக்குள்ள ஒரு எனர்ஜி வரும். வேறு சிலர் கிட்ட பேசுனாலே ரீ சார்ஜ் ஆனதுபோல ஒரு ஃபீலிங் பிறிட்டுக் கிளம்பும். இவங்க எல்லாத்தையும் விட வேறு சிலர் இருப்பாங்க, அவங்ககிட்டேர்ந்து 'ஹாய்'ன்னு சின்னதா ஒரு எஸ்.எம்.எஸ் வந்தா போதும்; நம்ம எனர்ஜி லெவல் தாறுமாறா எகிறும். அப்படிப்பட்ட ஒருத் தர்தான் என்னோட ஹீரோ. அவன் பண்ணுற அழ கான அதிரடியும், கவிதையான கலாட்டாவும்தான் படம். மற்றபடி 'தில்லாலங்கடி'ன்னு படத்துக்குப் பேர் வெச்சது ச்சும்மா ஒரு 'பெப்'புக்காக.''

**ஜெயம் ரவி கதாபாத்திரம்?**

''ஆசைப்பட்டது கிடைக்கலைன்னா... கிடைச் சதுமேல ஆசைப்படுன்னு அரதப்பழசான வழக்கு ஒண்ணு இருக்கு. இது என்னோட ஹீரோவுக்குப் பிடிக்காது. தன்னோட ஆசைக்காக எந்த லெவலுக்கும் போகத் தயங்காதவன். வாழ்க்கையோட ஒவ்வொரு திருப் பத்துலயும் த்ரில்லிங்கான, ஒரு கிக் கான அனுபவத்துக்கு ஏங்கறவன். ஏறக்குறைய ஒரு காட்டாறு மாதிரி. எங்கேயும் ஊடுருவிப் பரவு வான்! அப்படி அவன்



# “எனர்ஜி

பரவுற திசையெங்கும் அவனோட கட்டுப்பாட்டுக்கு வந்துடும். படம் முழுக்க எனர்ஜி... எனர்ஜி முழுக்க ஜெயம் ரவி பாத்திரம்!''

**எந்த வகையில் வித்தியாசம்?**

'என்னோட மத்த படங்கள்ல ஒரு ஸாஃப்ட்னஸ் இருக்கும். கதையோடு சேர்ந்து காட்சி நகரும். காட்சிக்காகக் கதை வளையாது. ஆனால், முதன் முறையா நான் எடுக்கற காரசாரமான படம் இதுதான். முன்னாடி படங்கள்ல ஹீரோவுக்குத் துதி பாடி இருக்க மாட்டேன். இந்தப் படத்துல பாடறேன். என் தம்பி ஹீரோங்கறதுக்காக கிடையாது. கேரக்டர் அப்படிப்பட்டது.''

**கதையை தேர்வு செய்யறதுக்கு முன்னாடி உங்க எதிர்பார்ப்பு என்ன?**

''ஒன்றோடொன்று முரண்படுற விஷயத்தை ஒரு முடிச்சுல கொண்டு நிறுத்தணும். அதுதான் எனது கதைகள்ல நான் கடைப்பிடிக்கற விஷயம். அப்பத்தான் நாம திரைக்கதையில் விளையாடறதுக்கு வித்தியாசமான களங்கள் கிடைக்கும். கதை, நதிப் போக்கா நகர்றதைவிட ஒரு அருவி போல விழுந்து, நதி போல நகர்ந்து... கடல் போல மனசுக்குள்ள அலை பரப்பணும்... அப்படி ஒரு கதை அமைஞ்சுட்டாலே, அடுத்த நிமிஷமே நான் கேமராவும் கையுமா களத்துல இறங்கிடுவேன்.''

# எஸ்.எம்.எஸ்!''

## - இயக்குநர் எம்.ராஜா

**திரைக்கதையில புதுமை இருக்கா?**

''ஹீரோவோட மனநிலையில் கதை பயணிக்கற மாதிரி ஸ்கிரிப்ட் ரெடி பண்ணியிருக்கோம். ஹீரோ கோபப்படும்போது கதையும் கேமராவும் காட்டமா இருக்கும். ரொமான்ஸ் மூடுல இருந்தார்னா காட்சியில் கவிதை பிறக்கும். பாருங்க எனக்குக்கூட எதுகை மோனை பேச வருது. எனக்குள்ள கதை செஞ்ச மாற்றம் இது!''



* எம்.ராஜா

**முதன்முறையா யுவன்ஷங்கர் ராஜாவோட இசைக் கூட்டணி?**

''இன்னைக்கு தமிழ்நாட்டோட காற்று மொத்தமும் யுவனோட ஆர்மோனியத்துக்குள்ள புகுந்து வர அத்தனை ஆசையா இருக்கு. சின்ன வயசுலேயே பெரிய உயரத்தைத் தொட்டது அவரோட இசை சாதனை. தில்லாலங்கடி - என்னையும் யுவனையும் பொறுத்த வரை தித்திப்பான அனுபவம். மியூஸிக்கலா மிகப் பெரிய ஹிட்டுக்காக யுவன்ஷங்கர் ராஜா உழைத்துக் கொண்டிருக்கிறார். ராஜா கையை வெச்சா எதுவும் ராங்கா போகாது'' என்று மென் சிரிப்பை உதிர்க்கிறார் இயக்குநர் ராஜா.

**- மகிமைராஜன்**




# பாசன நீரா... பாய்சன் நீரா..?

"கருங்கடல் கேள்விப்பட்டிருக்கிறோம். எவரிடமும் கருத்துக் கேட்கா மலே நொய்யல் ஆற்றுக்கு, கறுப்பு ஆறு என்றே பெயர் சூட்டி விடலாம்!" என்று நொய்யல் ஆறு பற்றி நொந்து போய்ப் பேசுகிறார் முத்தூர் வசந்தம் மணி.

நொய்யல் ஆறு. ஒரு காலத்தில் பெயருக்கேற்ற மாதிரியே தவழ்ந்து வந்துள்ளது. அதன் தண்ணீரும், ஆற்று மணலும் அத்தனை மென்மையெனக் கூறுகின்றனர். ஆனால் இன்று?

**கோ**வை மாவட்டத்தின் வெள்ளியங்கிரி மலையிலிருந்து உற்பத்தியாகி ஓடி வருகிறது நொய்யல் ஆறு. ஆலந்துறை, தொண்டாமுத்தூர், கோவை, சூலூர், திருப்பூர், ஒரத்துப்பாளையம், மருதுறை, முத்தூர், அத்திப்பாளையம் வழியாக நொய்யல் என்னுமிடத்தில் காவிரியில் கலக்கிறது. ஆறு கடந்து வரும் மொத்த தூரம் நூற்றியறுபது கி.மீ. வெள்ளியங்கிரி மலையிலிருந்து பன்னீராய் ஓடி வரும் தண்ணீரில், கோவை மாவட்டத்தின் தொண்ணூற்றேழு சாயப்பட்டறைகளின் சாயக் கழிவு நீர் சங்கமத்தினால் மாசு தொடங்கி விடுகிறது. திருப்பூர்ப் பகுதிகளின் சுமார் எண்ணூறு சாயப்பட்டறைகளின் சாயக்கழிவு நீர், வெள்ளம் போல நொய்யல் ஆற்றில் கலந்து அதன் பாசன விவசாயிகளைக் கடந்த பதினான்கு வருடங்களாக பதறி அழ வைத்து வருகிறது.

"**எ**னக்கு நொய்யல் ஆற்றையொட்டி அஞ்சு ஏக்கர் நிலம் இருக்கு. ஒரு காலத்துல மூணு போகம் சாகுபடி. நெல், எள், கரும்பு, நிலக்கடலை, சோளம்னு



✱ வசந்தம் மணி



✱ கந்தசாமி



✱ காளியப்பன்



✱ முருகேசன்

நஞ்செயும் புஞ்செயும் மாறி மாறி அமோகமா விளைஞ்சது. ஒரத்துப்பாளையம் அணை கட்டி முடிஞ்சு 1992ல் பாசனத்துக்குனு தண்ணி திறந்து விட்டாங்க. தொடர்ந்து நாலு வருஷம் நல்ல விளைச்சல். 1996லிருந்து கொஞ்சம் கொஞ்சமா விளை நிலங்களோட மண் தரம் கெட்டுப் போய் இப்ப எந்தப் பயிரைப் போட்டாலும், மகசூல் எடுக்க முடியல'' என்று கவலைப்படுகிறார் வேலாயுதம்பாளையம் விவசாயி முருகேசன்.

''**நா**ன் எட்டு ஏக்கர் நிலம் வெச்சிருக்கிற விவசாயிங்க. ஆத்துல ஓடி வர்ற தண்ணி நாய் கூட குடிக்காது. அவ்வளவு கடுமை. அப்ப... பாவம் பயிருங்க என்ன பண்ணும்? எந்த விதை போட்டாலும் முளைப்பு கட்டாது. பத்து இருபது ஆட்டுக்குட்டியைப் புடிச்சேன். நாலைஞ்சு மாடுகண்ணுகளை வாங்கினேன். பச்சை கண்ட இடத்துல் மேயவுட்டு காலம் போக்கிட்டு வர்றேன்''என்கிறார் நத்தன் கடையூர் காளியப்பன்.

''**ஒ**ரத்துப்பாளையம் அணையிலிருந்து ஆறு ஓடி வர்ற எந்த எடத்துலயும் ஆத்துத் தண்ணி கன்னங்கரேல்னுதான் ஓடி வரும். பாசன ஆத்துத் தண்ணி, இப்படி கறுப்பு கலர்ல வேற எங்கேயுமே பார்க்க முடியாது. ஒரு ஜீவ நதியோட பாசனத் தண்ணீர், எதுக்குமே பயன்படாத 'பாய்சன் நீர்' ஆகிப் போச்சு. இதனால எழுபதாயிரம் ஏக்கர் நெலத்துல மண் வளம் சுத்தமா அழிஞ்சு போச்சு. இதுக் கெல்லாம் மூல காரணம், சாயப்பட்டறை களின் சாயக் கழிவு நீர்தான். அதை நொய் யல் ஆற்றில் கலக்க விடக்கூடாதுன்னு 2003ல் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டோம். திருப்பூர் சாயப் பட்டறைகளுக்கு உத்தரவிட்டது உயர் நீதிமன்றம். சாயப்பட்டறைகள் சில பூட்டி சீல் வைக்கப்பட்டன. என்ன நடவடிக்கைகள் தொடர்ந்த போதிலும், நொய் யல் ஆற்றில் சாயக்கழிவு நீர் கலப்பது தொடர்ந்துகொண்டேதான் இருக்கிறது. ஐந்நூறு டிடிஎஸ் உப்புத் தன்மைக்கு மேற்பட்ட தண்ணீரை இந்திய நதிகளில் விடக்கூடாது என சமீபத்தில் உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. நொய்யல் ஆற்றில் கலந்து விடப்படும் சாயக்கழிவு நீர் ஆறாயிரத்தி லிருந்து எட்டாயிரம் வரை டிடிஎஸ் உப்புத் தன்மை கொண்டதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஒரு குவளை சாயக்கழிவு நீர் கூட நொய்யல் ஆற்றில் கலக்க அனுமதிக்கக் கூடாது. அப்போது தான் இந்தப் 'பாய்சன்' நீர், பாசன நீராக மாறி விளை நிலங்களுக்குப் பயன்படும்!'' என்கிறார் நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயிகள் பாதுகாப்புச் சபைத் தலைவர் அத்திப்பாளையம் கந்தசாமி.

*செய்திச் சித்திரம்:*

**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

# ஒரு நாளைக்கு எத்தனை பொய்?

● எம். மிக்கேல்ராஜ்,
சாத்தூர்

**மகிழ்ச்சி, ஆனந்தம் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

ஒன்றால் வருவது மகிழ்ச்சி; ஒன்றுமே இல்லாமல் மலர்வது ஆனந்தம். 'இதற்காகவா மகிழ்ந்தோம்... அடச்சீ...!' என எண்ண வைப்பது மகிழ்ச்சி; ஆதி அந்தம் அற்றது ஆனந்தம்!

● பா.அசோக், விருதுநகர்

**'கெட்ட நேரத்திலும் ஒரு நல்ல நேரம்' என்பது எது?**

கண்கெட்ட நேரத்தில் சூரிய கிரகணம்.

● மு.மதிவாணன், அரூர்

**ஒரு நாளைக்கு எத்தனை முறை பொய் சொல்வீர்கள்?**

ஒரே ஒரு முறைதான்; பின், அதைக் காப்பாற்ற பல முறை!

● ரமா, சென்னை

**உள்ளத்துக்கு சர்வரோக வலி நிவாரணி எது?**

உடலுக்கு சாரிடான். உள்ளத்துக்கு Sorryதான்!

● அ.ராஜா ரஹ்மான்,கம்பம்

**இரட்டைக் குதிரை சவாரி செய்பவர்கள்?**

Horse power உள்ள மனிதர்கள்!

● ப.ராமகிருஷ்ணன்,
மேலகிருஷ்ணன்புதூர்

**இன்றைய தேதியில் கலப்படமில்லாத பொருள்?**

நம் பார்வையில் படாத பரம்பொருள்!

● ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி



**கேள்விக்குறி மட்டும் ஏன் வளைந்து நெளிந்து உள்ளது?**

நேரான பதிலை எதிர்பார்த்து!

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

**கோழிக்கு மட்டும் பொழுது விடிவது தெரிந்து விடுகிறது. ஆறறிவு படைத்த மனிதன் மட்டும் அலாரம் டைம்பீஸை நம்பியிருக்கிறானே?**

பொழுது விடியும்போது கூவும் கோழி, பிரியாணியாக தன்பொழுது முடியும் போதும் கூவும். அலாரம் சத்தத்துக்கு எழுந்திருக்கும் மனிதன், அறியாமையில் சாவு மணி சத்தத்துக்கு எழாமல், தூக்கத்தில் ஏமாந்து இறந்து விடுகிறான். எனக்கென்னவோ இந்த ஆறாவது அறிவு போறாத அறிவு என்றே தோன்றுகிறது!

● வே. ஈஸ்வரன், இராஜபாளையம்

**எப்பவாவது பழைய காதலி நினைப்பு வருவதுண்டா?**

எப்பவாவது நினைப்பு வந்தால் அது காதலி அல்ல. 'புத்தி பேதலி'!

● ராஜி ராதா, மன்னை

**ஆசை தோசை அப்பளம் வடை... விளக்கம் ப்ளீஸ்...?**

'என்னை' என்ற எண்ணெயில் ஆசையை தோசையாக வார்க்கிறோம்; பிறகு அழியாதபடி அப்பளமாய்ப் பொறிக்கிறோம்; நிறைவேறாவிட்டால் வடையாய்ச் சுடுகிறோம். காக்காய் கொத்திக் கொண்டு போக, நரி பாட்டுப் பாடச் சொல்ல, நம் கதை முடிகிறது!

• **விக்கிரமாதித்தன், ஜேடர்பாளையம்**

***சுறுசுறுப்புக்குச் சிறந்த மருந்து எது?***

நகைச்சுவை 'தமாஸம்' சாப்பிட, நமது 'தாமஸம்' போயே போச்! It's gone... பிரி போயிந்தி!

• **எஸ்.ராம்மோஹன், வடபழனி**

***மனிதனுக்கு இரண்டு நாக்கு இருந்தால்?***

சாதாரண வார்த்தைகள் கூட 'Tongue - twisters' ஆகிவிடும்!




• **கு.கணேசன், மறைமலை நகர்**

***கோயிலில் தெய்வம் பேச ஆரம்பித்து விட்டால்?***

க்யூ கும்பலைச் சமாளிக்க அவரே 'ஜருகண்டி' சொல்லுவார். இதைக் கேட்ட 'பய' பக்தி உள்ளவர்கள், அன்றிலிருந்து கோயிலுக்கு ஒரு கும்பிடு போட்டு விடுவார்கள்!

• **ல.ராஜம், விருதுநகர்**

***ஆதி சப்தம்...?***

அந்த(ம்) மௌனம்...!

• **பா.து.பிரகாஷ், தஞ்சாவூர்**

***காதல் கத்திரிக்காய் என்றால்... கள்ளக் காதல்...?***

சோற்றில் மறைக்க முடியாத முழு பூசணிக்காய்...!



# மயக்கமில்லாத நீதிதேவன்

✱ வி.ஆர்.கிருஷ்ணய்யர்

ஒரு பாகவதர் குடும்பத்தில் மாமியாருக்கும் மருமகளுக்கும் எப்போதும் சண்டை. ஒரு நாள் பாகவதர் வீட்டுக்கு வருகிறபோதே மனைவியும் தாயும் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ள ஆரம்பித்தார்கள். தடுத்துப் பார்த்துப் பலனளிக்காததால் பாகவதர் தம் முழுப்பலத்தைப் பயன்படுத்தினார். தாயின் மீது கைப்பட்ட அதிர்ச்சியோ அல்லது உண்மையிலேயே பாகவதரின் தாக்குதல் அவ்வளவு பலமாக இருந்ததோ தாயாரின் உயிர் உடனடியாகப் பிரிந்துவிட்டது. 'கொலை' என்கிற வார்த்தையைக்கூடச் சொல்ல நடுங்குகிற பாகவதர் சட்டத்தின் முன்பு கொலையாளி! சிறையில் காலம் கழிக்க நேர்ந்தது. தற்போது தன் மனைவியும் பிள்ளைகளும் நடுத்தெருவில் நிர்க்கதியாக நிற்கிறார்கள், சல்லிக்காசுகூடச் சம்பாதிக்க வழியற்ற தன் குடும்பம் எப்படிப் பிழைக்க முடியும் என்று தமது சோகக் கதையைக் கண்ணீரும் கதறலுமாய்ச் சொன்னார் பாகவதர். அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர் சிறைச் சாலை களைப் பார்வையிட வந்த சிறைத் துறையின் மாநில அமைச்சர்!

குற்றம் நிகழ்ந்த சூழ்நிலை ஒருபுறம் இருக்க, குற்றத்துக்கு ஆளானவர் சிறையில் அடைபட, அதற்காக அவரது குடும்பமே சீரழிவது எப்படி நியாயமாகும் என்று நினைத்தார் அமைச்சர். கைதியாக இருந்தாலும் பரவாயில்லை என்று வானொலி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அவருக்கு வழங்குமாறு ஏற்பாடு செய்து, அதில் வரும் வருவாயைக் குடும்பத்துக்கு அனுப்பி வைக்க உதவினார். அந்த அமைச் சர் வேறு யாருமல்ல, நீதித்தாயின் தன்னிகரற்ற புதல்வன் வி.ஆர். கிருஷ்ணய்யர்.

கிருஷ்ணய்யரின் வாழ்க்கையை ஒரு சரடாக வைத்து சமகாலத்துச் சமூக, அரசியல், உண்மைச் சம்பவங்கள், அதிகார பீடங்களின் அந்தரங்க அடையாளங்கள் என்று ஆராய்ச்சிக்குரிய கவனத்துடன் ஆகப்பெரும் உழைப்பைச் செலுத்தி இந்த நூலை எழுதி இருக்கிறார் அ.மகபூப் பாட்சா.

பிராமண வகுப்பைச் சேர்ந்த, வழக்கறிஞர் தொழிலில் கொடி கட்டிப்

**"நீதிபதி வருகிறபோது செங்கோல் ஏந்தி பராக் சொல்வது பிரிட்டிஷ் அடிமைத்தனம்." -கிருஷ்ணய்யர்**

பறந்த ராமய்யர் என்பவருக்கு மகனாகப் பிறந்ததால் கிருஷ்ணய்யருக்கு மிகப் பெரிய பின்புலம் அமைந்தாலும், இவர் எப்போதுமே அடிமட்டத்தில் இருக்கிற ஒடுக்கப்பட்டவர்கள், நிராகரிக்கப்பட்டவர்கள் மீதுதான் கரிசனம் கொண்டிருந்தார். அதனால்தான் குலக்கல்வி முறையைக் கொண்டு வந்தமைக்காக ராஜாஜியின் கருத்தியலை எதிர்க்க முடிந்தது; கிருஷ்ணய்யரை காங்கிரஸில் சேருமாறு கிருஷ்ணமேனன் மூலம் ராஜாஜி முயற்சி செய்தபோது, 'காங்கிரஸில் நான் சேர்ந்தால் அது என்னை ஆதரித்த மக்களுக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நான் செய்யும் துரோகம். அந்தத் துரோகத்தை நான் என்றைக்கும் செய்யமாட்டேன்'' என்று தன் நிலையில் தாழாமல் அவரால் வாழ முடிந்தது; ரயில்வே தொழிலாளர்களது இட ஒதுக்கீட்டுப் பிரச்னையில் கிருஷ்ணய்யர் கொடுத்த தீர்ப்பில், ''தகுதியற்றவர்களுக்கா பதவி உயர்வு என்ற கேள்வி கேட்பவர்களுக்கும், இதனால்தான் விபத்துகள் ரயில்வேயில் பெருகியுள்ளன என்று புரளி எழுப்பியுள்ளவர்களின் வாதத்துக்கும், இந்த இடஒதுக்கீட்டை ரத்து செய்துவிட்டால் ரயில்வே இலாகா விபத்தில்லா வாரம் கொண்டாடும் என்பதற்கும் என்ன உத்தரவாதம்?'' என்று எழுத முடிந்தது.

உயர்நீதிமன்றத்துக்கு நீதிபதி வருகை தருகிறபோது செங்கோல் ஏந்தி பராக் சொல்கிற முறையை 'பிரிட்டிஷ் அடிமைத் தனம்' என்று பகடி செய்கிறார் கிருஷ்ணய்யர்.

இலங்கைத் தமிழர்களைக் காக்க விரைந்து செயல்படவும் மனிதாபிமான அடிப்படையில் தமிழ் மக்களை மரணத்திலிருந்தும் மற்றும் கொடுந்துயரங்களிலிருந்தும் விரைந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு 1984 ஆகஸ்ட் 10ஆம் தேதி, அன்றைய பாரதப் பிரதமர் இந்திராகாந்திக்கு இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவராகக் கடிதம் எழுதியிருக்கிறார்.

இந்தப் புத்தகம் வி.ஆர்.கிருஷ்ணய்யரின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல; அந்தக் காலத்திய - கிருஷ்ணய்யரைச் சுற்றிலும் நிகழ்ந்த சமூகம், அரசியல், நீதி, நிர்வாகம் என்று அனைத்துத் துறைகளின் அடி நீரோட்டங்களையெல்லாம் புரிந்து கொள்ள முடிகிறது.




நூல் விமர்சனம்

**நூல்: நீதிவானில் ஒரு செந்தாரகை**
**நீதி நாயகம் வி.ஆர்.கிருஷ்ணய்யர்**
**ஆசிரியர் : அ.மகபூப் பாட்சா,**
**வெளியீடு : சோக்கோ அறக்கட்டளை,**
**நீதிபதி பகவதி பவன், 143, ஏரிக்கரை சாலை, கே.கே.நகர், மதுரை - 625 020**
**விலை: ரூ.200/-**

**நா.வே.அருள்**

# சிதறினாலும்

## ரீடர்ஸ் பேஜ்

உலகப் புகழ் பெற்ற ஓவியரான பிகாசோ, ஒருமுறை தம் நண்பரோடு பேசிக் கொண்டே ஓவியம் வரைந்துகொண்டிருந்தார். அப்போது கை தவறி அருகில் இருந்த வண்ணக் கலவைகள் நண்பரின் வெள்ளைச் சட்டையில் சிதறின. அவர் பெரிய அரசியல் பிரமுகர். இருப்பினும் கோபப் படாமல் சட்டையைக் கழற்றி பிகாசோவிடம் கொடுத்து, "இதில் உங்கள் கையெழுத்தைப் போட்டுக் கொடுங்கள்" என்றார்.



* பிகாசோ



* சிதறாத நவீன ஓவியம்...


பிகாசோ எதுவும் புரியாமல், கோபப்படாமல் கையெழுத்துக் கேட்கிறாயே" என்றார். "உங்கள் கையெழுத்து இருந்தால், இந்தச் சட்டை பிகாசோ வரைந்த நவீன ஓவியம் என்று கூறி என் வீட்டு வரவேற்பறையில் வைத்து விடுவேனே" என்றாராம் நண்பர்.

- க.ச.மணியன், பெரணமல்லூர்

சாக்ரட்டீஸ், தினந்தோறும் கடைக்குப் போவார். ஆனால், எதுவுமே வாங்கமாட்டார். சாமான்களை மட்டும் பார்த்துவிட்டுத் திரும்புகிற அவரிடம் நண்பர்கள் கேட்டார்கள்.

"என்னய்யா இது. எதுவுமே வாங்குவதில்லை. ஆனால் தினமும் கடைக்கு மட்டும் வந்து எல்லாவற்றையும் பார்த்து விட்டுப் போகிறீர்களே!"

* சந்தோஷத் தத்துவம் சொன்னவரின் கடைசி கணங்கள்...



"எவையெல்லாம் இல்லாமல் சந்தோஷமாக இருக்க முடியும் என்பதைத் தெரிந்துகொள்ளத் தான் இவற்றைத் தினமும் பார்த்துக் கொண்டு போகிறேன்" என்றாராம்.

- ஹேமமாலினி, சென்னை - 101

**50-ம் பக்க விடை:**

எலெக்ட்ரிகல் என்ஜினீயர்ஸ் இல்லேன்னா, ஹைய்யா... ஆறு மணியோட உலகமே ஷட் டவுன்தான்... ஓவர் டைம், ஹோம்வொர்க் எதுவுமில்லை... ஜாலிதான்!

## இப்படித்தான் இருக்கும்!



நன்றி www.educatorscorner.com

## சத்திரம்தான்!

**கா**ங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தியின் பேச்சுக்களை சட்டசபையில் கேட்பது தனியான இன்பம். அவர் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது, வைஸ்ராய் நிர்வாகச் சபை உறுப்பினராக இருந்த ஒரு சர் பிரமுகர் பேச்சு தயாரித்துக் கொண்டுவந்து, சட்ட சபையில் படித்துக்கொண்டிருந்தார். பிரமாதமான ஆங்கிலத்தில் அவர் தடபுடலாகப் பேசிக் கொண்டிருந்தபோது சத்தியமூர்த்தி அடிக்கடி



குறுக்கிட்டு, 'இது சாமுவேல் ஜான்ஸன் கூறியது', 'இது எட்மண்ட்பர்க் கூறியது', 'இது டிஸ்ரேலி கூறியது' என்று சொல்லிக்கொண்டே வந்தார். பிரமுகருக்கு ஒரே எரிச்சல். கோபத்துடன் சத்தியமூர்த்தியை பார்த்து, 'நீ ஒரு முட்டாள்' என்று கத்தினார். சத்தியமூர்த்தி சற்றும் கோபமடையாமல், 'இது மட்டும் உமது சொந்தக் கருத்து' என்றாராம்.

– அ.ராஜா ரஹ்மான், கம்பம்

**ஒ**ருமுறை திருச்சிக்கு வந்திருந்த அப்போதைய முதலமைச்சர் காமராஜரைச் சந்திக்க, மாலையுடன் ஒரு பள்ளிக்கூட ஆசிரியரும் வந்திருந்தார். அவரைக் கண்ட காமராஜர் கோபமாக, 'படிக்காதவங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுங்கன்னு சொன்னா படிக்காதவனுக்கு மாலை போட வந்திருக்கீங்களே' என்று கேட்டாராம்.

– அ.ராஜா ரஹ்மான், கம்பம்





# குறள் பரப்பும்

எந்தச் சாதி, சமயத்தையும் சாராமல் மன்னர்களுக்கு ஜால்ரா அடிக்காமல், மக்களுக்குப் பொதுமறையாகத் திருக்குறளைத் தந்திருக்கிறார் திருவள்ளுவர். அதனால்தான் திருக்குறள் முப்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் மட்டுமே நாற்பது மொழிபெயர்ப்புகள். அப்படிப்பட்ட பெருமைக்குரிய திருக்குறளை, புதிய தலைமுறைக்கு, குறிப்பாக மாணவ, மாணவிகளுக்குக் கொண்டு சேர்க்கும் பணியினைப் பல்லாண்டுகளாகச் செய்து வருகிறது ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனம். தமிழகமெங்கும் பள்ளி, கல்லூரிகளில் திருக்குறள் ஒப்புவித்தல், பேச்சுப் போட்டி என்று நடத்தி வருகிறது. இந்தச் சூழலில் திரைப்படம் சார்ந்த வணிக அம்சங்களைப் புறக்கணித்துவிட்டு தமிழுக்கும் அதன் தொன்மைக்கும் சிறப்பு சேர்க்கும் வகையில் நிகழ்ச்சிகளை அளித்துக்கொண்டிருக்கும் மக்கள் தொலைக்காட்சி, ஸ்ரீராமின் முயற்சியில் தனது பங்களிப்பையும் இணைத்துக் கொண்டிருக்கிறது. இரு நிறுவனங்களின் கூட்டணியில் உருவாகி மக்கள் தொலைக்காட்சியில் சனிக்கிழமைதோறும் வந்துகொண்டிருப்பதுதான் 'குறள் பேசும் குரல்.'



* நிகழ்ச்சியில் ஒரு போட்டியாளர்...

''இந்த நிகழ்ச்சியைப் போரடிக்காமல் கொடுப்பது மிகப் பெரிய சேலஞ்'' என்கிறார் இயக்குநர் நாகராஜன். ''ஒரு தலைப்பில் பேசுவது; படம் பார்த்து அதன் பொருளுக்கேற்ற குறளைச் சொல்வது; குறளை முன்பின் மாற்றிப் போட்டுச் சரியாகச் சொல்லச் சொல்வது; ஒருவர் நடிப்பைப் பார்த்து அதற்கேற்ற குறளைச் சொல்வது; சத்தமாக முதல் வரியைச் சொல்லி, இரண்டாவது வரியை வாயசைப்போடு நிறுத்தி, அதைச் சொல்லச் சொல்வது என்று புதிய கோணங்களில் போட்டிகளை உருவாக்கியிருக்கிறோம்'' என்கிறார் நாகராஜன்.

# கூட்டணி!

தமிழகமெங்கும் எட்டு மையங்களில் போட்டிகளை நடத்தியிருக்கிறார்கள். இடைநிலைப் பிரிவு, உயர்நிலைப் பிரிவு, மேல்நிலைப் பிரிவு, கல்லூரி நிலை என்று நான்கு பிரிவுகளில் மொத்தம் - 1746 மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு அசத்தியிருக்கிறார்கள். இதில் மையத்துக்கு இருவர் வீதம் பதினாறு போட்டியாளர்களைத் தேர்வுசெய்து சென்னையில் இறுதிச்சுற்று நடந்து, முதல் மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இறுதிச் சுற்றில் கலந்துகொண்டவர்களின் பேச்சாற்றலை மேலும் வளர்க்க ஔவை நடராஜன் பல டிப்ஸ்களை வழங்கியிருக்கிறார்கள்.

''எங்களை மிக ஆச்சர்யப்படுத்திய விஷயம், கிராமப்புற மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டதுதான். திருக்குறள் மீதான அவர்கள் ஆர்வம் மற்றும் அறிவு எங்களைப் பிரமிக்க வைத்தது. மேலும் திருக்குறளை காலத்துக்கு ஏற்றபடி பொருத்திப் பார்த்து, புதுப்புது அர்த்தங்களைச் சொன்னது ஆச்சர்யமோ ஆச்சர்யம். ஸ்ரீராமின் இந்தத் தமிழ்ப் பணியில், நாங்களும் இணைந்துகொண்டது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது'' என்கிறார் மக்கள் தொலைக் காட்சியின் உந்துசக்தியான செளம்யா அன்புமணி.

- ப்ரீதி



• செளம்யா அன்புமணி

• 'குறள் பேசும் குரல்' இறுதிச் சுற்றில்...



''ஸ்ரீ மாதா டிரஸ்ட், சரியாகப் பத்தாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தினத்தில், நீங்கள் வந்திருக்கிறீர்கள்.. இந்த இடம் இதுவரை ஒரு லட்சத்து நாற்பத்தோராயிரம் புற்று நோயாளிகளுக்கு மிகச் சிறந்த புகலிடமாகச் செயல்பட்டு வந்திருக்கிறது; வருகிறது. உலகிலேயே மிகக் கொடிய நோய் ஒன்று இருக்குமானால் அது புற்று நோய் தான். அதுவும் ஏழைகளுக்கு அந்த நோய் வந்துவிட்டால் அவர்கள் படும்பாடு இருக்கிறதே... அது ரொம்பவும் கொடுமை. சென்னை அடையாறில் உள்ள கான்சர் இன்ஸ்டிட்யூட்டுக்குச் சிகிச்சை எடுத்துக்கொள்ள வரும் எத்தனையோ ஏழை எளிய மக்களுக்கு, தங்குவதற்கான இலவச இடத்தையும் அவர்கள் உண்ண உணவையும் அளித்து வருகிறோம். நல்ல உள்ளங்கள் கொண்டவர்கள் தாங்களாகவே மனமுவந்து கொடுக்கும் நன்கொடையை வைத்துத்தான் ஸ்ரீ மாதா டிரஸ்ட் இந்த மாபெரும் பணியைச் செய்து வருகிறது. நாம் நல்லபடியாகக் குணமாகிச் சென்று விடுவோம் என்ற நம்பிக்கையோடு இங்கே தங்கிச் செல்லும் நோயாளிகளின் ஒவ்வொருவர் வடிவிலும், நான் இறைவனைக் காண்கிறேன்.

இன்னும் ஒரே ஆண்டில், மரணத்தின் விளிம்பில் தவித்துக் கொண்டிருக்கும் முதியவர்களுக்கு ஓர் அமைப்பை நடத்தி அவர்கள் தங்களது கடைசி காலத்தை நிம்மதியாகக் கழிக்க ஒரு வழி அமைத்து தர வேண்டும் என்பதுதான் எனது ஆசை. அந்த இறைவன் அதையும் செய்ய வழி கோலுவான்'' என்கிறார் ஸ்ரீ மாதா டிரஸ்ட்டின் நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர் வி.கிருஷ்ணமூர்த்தி.

காலை 4.30 மணிக்குச் சரியாக டீ, காஃபி தயாரிக்க ஆரம்பித்து அடுத்து 34 கிலோ காய்கறிகளை வெட்டி, 35 கிலோ சாதம் வடித்து, 1,600 இட்லிகள் தயாரித்து, இரவு 20 கிலோ கலந்த சாதம் சமைத்து... என ஸ்ரீ மாதா டிரஸ்ட்டின் சமையலறை எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது.



* அம்மாவுடன் கார்த்திக்

# வலியைத்



புற்றுநோய் சிகிச்சைக்கென ஊர் விட்டு ஊர் வந்து இந்தக் காப்பகத்தில் தங்கியிருக்கும் சில நோயாளிகளைச் சந்தித்துப் பேசினோம்...

**10 வயது சிறுமி அஞ்சலி:** 'என் சொந்த ஊர் ஆந்திரா. வயத்துல டிமர்னு கட்டி ஏற்பட்டதால் அடையார் கேன்ஸர் இன்ஸ்டியூட்ல மார்ச் மாசம் எனக்கு ஆபரேஷன் பண்ணினாங்க. முதல்ல வந்தபோது எனக்குத் தமிழே தெரியாது. ஆனா

இப்ப நல்லா கத்துக்கிட்டேன். இங்க என்னையும் என் ஆயாவையும் நல்லா கவனிச்சுக்கறாங்க.. நல்ல சாப்பாடு, பாசமா பழகற ஆளுங்க இதெல்லாமே இங்க எனக்கு ரொம்பப் பிடிச்சருக்கு. இந்தச் சிறுமி வயிற்றில் ஏற்பட்ட புற்று நோய்க்கென சிகிச்சை எடுத்துக் கொள்ள வந்தவர்.





* அஞ்சலி

# துரத்தும் புன்னகை!

**நவீன் :** நாமக்கல் மாவட்டம் ஒட்டங்கோயில் எனக்குச் சொந்த ஊர். கழுத்துல கான்சர் வந்திடுச்சு. முதல்ல இது சாதாரண கட்டின்னு நினைக்க விட்டுட்டோம். ஈரோடு ஆஸ்பத்திரில பயாப்ஸி செஞ்சு பார்த்துட்டு புற்று நோய்ன்னு சொல்லிட்டாங்க. எங்க அம்மா, அப்பா ரெண்டு பேருமே கைத்தறி வேலை செய்யறவங்க. மாசம் ஐயாயிரம் செலவழிச்சு எனக்கு வைத்தியம் பார்க்க அவங்களால முடியாதுன்னுதான் இங்க வந்துட்டோம்'' என்கிறான். அவனது தாயார் மோஹனா தொடர்ந்து, ''என்னோட சின்ன பையனை அவங்கப்பாகிட்ட விட்டுட்டு நானும் நவீனுமா மூணு மாசமா இங்க தங்கி இவனுக்காக சிகிச்சை எடுத்துக்கிட்டு இருக்கோம்... ஸ்ரீ மாதா டிரஸ்ட்ல ரொம்ப அருமையா எங்களைக் கவனிச்சிக்கிறாங்க... வேளா வேளைக்கு டீ, காஃபி, டிஃபன் கொடுக்கறாங்க.. என் புள்ள நிச்சயம் நல்லபடியா குணமாயிடுவாங்கற நம்பிக்கை இங்க எனக்கு வந்திருக்கு'' என்கிறார்.

காவல்பட்டி கிராமத்திலிருந்து அம்மாவுடன் வந்திருக்கிறார் கார்த்திக். ''தினம் காட்டுல போய் கூலி வேலை செய்யற எங்களால எங்க போய் இலவசமா தங்கி புற்றுநோய்க்குச் சிகிச்சை எடுத்துக்க முடியும்? ஏதோ புண்ய ஆத்மா, இப்படி எங்களை மாதிரி ஏழை பாழைங்களுக்கெல்லாம் அற்புதமான சேவையைச் செஞ்சுக்கிட்டு வர்றார். அவர் நல்லா வாழணும்'' என நா தழுதழுக்கப் பேசுகிறார்...

மனவலிமையோடு புன்னகையால் தங்கள் வலியைத் துரத்தி, புற்றுநோயிலிருந்து மீண்டு வரும் பல லட்சக் கணக்கான ஏழை நோயாளிகளின் வாழ்வில் நல்மனம் படைத்தோர் செய்யும் உதவிகளோடு தீபம் ஏற்றுகிறது ஸ்ரீ மாதா டிரஸ்ட்.

**செய்திச் சித்திரம் :**
**நளினி சம்பத்குமார்**

நீங்கள் அணியும் ட்ரெஸ் கலரின் வழியே உங்கள் மூடை, எண்ணங்களை ஈஸியாக வெளிப்படுத்தலாம். ஒவ்வொரு கலருக்கும் ஒரு மீனிங். ஒரு எனர்ஜி! இந்த வாரம் அலசப் போவது பச்சை நிறத்தை...

க்ரீன் ஒரு ரிலாக்ஸிங் கலர். பச்சை என்றாலே இயற்கைதானே கண் முன்னே விரிகிறது. மலை, காடு, மரங்கள், இலைகள், புல்வெளிகள்... என ஒரு பச்சை உலகம். இதில் மனத்தைப் பறிகொடுக்காதவரும் உண்டா?

பச்சை நிறம் வளமை, செழிப்பு, அமைதி, இயற்கை, செல்வம் என பல குணாதிசயங்கள் கொண்டது. இந்த நிறத்தை அணிந்தாலும், பிறர் போட்டுப் பார்த்தாலும் பலன் ஒன்றுதான். மனத்தைச் சுத்தப்படுத்தும். இணக்கமான சூழலை ஏற்படுத்தும். ஃப்ரெஷ்னஸ் கொடுக்கும்.

திருமணப் பட்டில் பச்சை நிற காஞ்சிப் பட்டு கண்டிப்பாக உண்டு. 'கரும் பச்சையில் மெரூன்பார்டர் ஊஞ்சலுக்கு' என உய்யலாலா... பாடிக்கொண்டே பல பெண்கள் தீர்மானமாகப் பச்சை நிறபட்டு வாங்குகிறார்கள். (பாட்டிகளுக்குப் படு குஷி. 'என்னை மாதிரியே இருக்கா என் பேத்தி' என செம த்ரில்!)

பச்சை நிறத்தில்தான் எத்தனை ஷேட்ஸ்! லைட் க்ரீன், எமரால்ட் க்ரீன், டார்க் க்ரீன், லைம் க்ரீன், பாட்டில் க்ரீன், ஆலிவ் க்ரீன், ஸீ க்ரீன், மிலிட்டரி க்ரீன் என லிஸ்ட் போய்க்கொண்டேயிருக்கும்.

பெண்கள் புடைவைக் கடைக்குப் போய் புடைவை எடுப்பதே ஓர் அழகு. ஷேட்ஸ் மற்றும் பார்டர் கலர் சொல்லி வாங்குவாங்க பாருங்க... அது ஒரு வைபவம்! மலையாகப் புடைவைக் குவியல்... ஆனாலும், எதிர்பார்த்து ப்ளான் போட்ட கலர் சிக்காது. 'ராமர் பச்சை கலர் எடுங்க', 'அழகு மாங்கா கலர் (நௌ வாட்ஸ் திஸ் மேன்) இருக்கா?', 'கற்பகம் பச்சையில கரப்பான் பூச்சி பார்டர் அல்லது பச்சை கலர்லே ருத்ராட்ச பார்டர்', 'புதினா கலர்ல கறுப்பு பார்டர்', 'க்ராஸ் க்ரீன் வித் மேங்கோ' (அதாங்க புல்லு நிறத்துடன் மாம்பழம் கேக்கறாங்க அக்கா)... இப்படி பல கோரிக்கைகள் பறக்கும். எடுத்துப் போடுபவர் அசரவே மாட்டார். மாறாக ஊக்குவிப்பார். ''சூப்பரா நெல்லிக்காய் கலர்ல நாகப்பழ பார்டர் இருக்கு'' என்ற ரேஞ்சுக்குக் கூவி (கணவன்மார்களின் வயிற்றெரிச்சலைத் தாராளமாகக் கொட்டிக்கொண்டு) 'சக்ஸஸ்' என்று கேஷ் கவுண்டரைப் பார்ப்பார்.

புடைவை, சல்வார் கமீஸ் என எதுவாக இருந்தாலும் பச்சை நிறத்தில் போட்டால் அட்ராக்ஷன் தனி! இதனுடன் காம்பினேஷனாக மற்ற கலர்களும் கலந்துபோட்டால் ஓகோ!

பச்சையுடன் மஞ்சள், பர்ப்பிள், ஆரஞ்சு, பெய்ஜ், ப்ரௌன் நிறங்கள் எடுக்கும். 'க்ரீன் வித் ப்ளூ' சூப்பர் காம்பினேஷன். தற்போதைய இளம் பெண்களின் சாய்ஸ் ஆப்பிள் க்ரீன், அக்வாமரைன், மிண்ட் போன்ற க்ரீன் ஷேட்ஸ்! பொதுவாகப் பச்சையுடன் எந்த நிறத்தை வேண்டுமானாலும் மேட்ச் செய்யலாம்.

உடை என்றல்ல; உணவிலும் பச்சை நிறத்துக்குத் தனி மதிப்பு. பச்சைபசேலென இருக்கும் கீரை வகைகள், அவரை, புடலை, பாகற்காய், வெள்ளரி... என பச்சைக்

# பச்சை... பச்சை...!




காய்கறிகள் ஹெல்த்துக்கு நல்லது. காய்களின் வண்ணம் கெடாமல் அதே பச்சை நிறத்துடன் சமைத்து இறக்குவது ஒரு பெண்ணுக்கு சாலஞ்ச்! காலேஜ் கேர்ள்ஸ் அண்ட் பாய்ஸ், பீட்ஸா, பர்கர், கோல்ட் காஃபி... என சாப்பிட்டு உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்காமல் பச்சைக் காய்கறிகளைச் சாப்பிடுங்க ப்ளீஸ்.

க்ரீன் டீ ஓர் ஆரோக்கிய பானம். எடை குறைக்க நினைப்பவர்கள் குடிக்கலாம்.

பல நாடுகளில் க்ரீன் என்பது நம்பிக்கை நிறம். வசந்த காலம் வரும் என்ற நம்பிக்கையை பச்சை தெரிவிக்கிறது. காதல் கடவுள் வீனஸின் கலர் க்ரீன். ஸோ இந்த ஒரு காரணத்தினாலேயே யூத் க்ரவ்டின் ஏகோபித்த வோட்டு க்ரீனுக்கு!

ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால் 'க்ரீன் போட்டால் எவர் க்ரீன்'தான்!

- லதா சேகர்

# கமல் -அலையாகப் பரவும் நம்பிக்கை!

எழுத்தாளர் சுஜாதா மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் மாபெரும் கூட்டம் அது.

முழுக்கை கருப்புச் சட்டை, நீல ஜீன்ஸ், முகத்தைக் கிட்டத்தட்ட முழுக்க மறைத்த நல்ல கருப்பு தேன்கூடு தாடி. அதையெல்லாம் மீறி, பளிச்சென்று தீட்சண்யமாக ஒளிரும் விழிகள். அடக்கமான, அழுத்தமான குரல். என் அருகே இருந்த கிரேஸி மோகன் கிசுகிசுவென்று அறிமுகப்படுத்த, அவர் என் கையைப் பற்றிக் குலுக்குகிறார். 'நான் கமலஹாசன்'.

நான் தாடியைக் கவனிப்பதை அறிந்தவர் போல், ''இது மர்மயோகிக்காக'' என்கிறார்.

நண்பர் டைரக்டர் வசந்த் உள்ளே வந்து கமலைப் பேச அழைக்கிறார். ''மர்மயோகியில் நீங்களும் பங்கு பெறணும்'' ஒரு வினாடி அந்தக் கண்கள் என்னை நோக்கிச் சிரிக்கின்றன.

அந்த ஞாயிறு பகல் அவர் அலுவலகத்தில் ஹோம் தியேட்டர் பகுதிக்கு என்னை அழைத்துப் போகிறார். லேப் டாப் கம்ப்யூட்டரில் ஒரு ஃபைலைத் திறக்கிறார்.

'மர்மயோகி முழு ஸ்கிரிப்ட். வெர்ஷன் மூணு'.

அவசரமாகப் படிக்க முற்படுகிறேன். மதுரை, பாண்டியன், கழுமரம் என்று அங்கங்கே கண்ணில் தட்டுப்படும் வார்த்தைகள் மனத்தை இழுத்துப் பிடிக்கின்றன. ''சரித்திரப் படம்'' அவர் சொல்கிறார். ''பிற்காலச் சோழர்களுக்கு முன்பா, பின்பா?''- நான் ராஜராஜ சோழனை மனத்தில் வைத்துக்கொண்டு கேட்கிறேன். ஆயிரம் வருடம் முற்பட்ட காலமும், கதாபாத்திரங்களும் கமல் குரலில் மெல்ல எழுந்து அறை முழுக்கப் பரவ இடமே நிறைந்து நிற்கிற பிரமை.



ஆற்றொழுக்கான ஆங்கில நடையிலும் நல்ல தமிழிலும் அவர் சொல்லிப்போக நான் வினாடிக்கு வினாடி வெவ்வேறு உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் அவர் விழிகளையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். 'History is the journal of victors till questioned'. போகிற போக்கில் உதிர்க்கிற அந்த வாக்கியத்தின் அழுத்தத்தில் அமிழும் முன்னால் இன்னொரு துண்டுப் படத்தை ஓட விடுகிறார். பரீட்சார்த்த முறையில் எடுத்த காட்சி அது. படகுத் துறை. நகரும் படகு.

''சந்தனம் ஏத்திப் போகணுமா? கூலி அதிகமாகுமே''. படகுக்காரன் சொல்கிறான்.

''கூலி பாரசீக வார்த்தை இல்லையோ?'' எனக்கு நியாயமாகப்

பட்ட சந்தேகத்தைக் முந்திரிக்கொட்டை யாகக் கிளப்புகிறேன்.

'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்று சட்டென்று குறள் சொல்கிறார். அந்தக் கண்கள் இன்னொரு முறை சிரிக்கின்றன. 'குறள்லேயே கூலி இருக்கே'.

அடுத்த சில மாதங்கள் மர்மயோகி திரைக் கதையைச் செப்பனிட்டு அங்கங்கே திருத்தி, மாற்றி எழுதி அவர் பத்தாவது டிராப்ட் வரை வந்து விட்டார்.

மர்மயோகி கொஞ்சம் பொறுத்து வரட்டும் என்று முடிவாகிறது. அதற்குள் இன்னும் இரண்டு திரைக்கதை முழு ஸ்கிரிப்ட் எழுதியிருக்கிறார் கமல். அவர் வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கூடச் செல்ல மூச்சு முட்டு கிறது. ஆனாலும் முயற்சி செய்கிறேன்.

ஒரு சாயங்கால நேரத்தில் மொபைல் ஒலிக்கிறது. அவர்தான்.


'எ வெண்ட்ஸ்டே இந்திப் படம் பார்த் துட்டீங்களா?'

அவரோடு அமர்ந்து பார்க்க சந்தர்ப்பம் கிடைக்கிறது. நசிருதீன் ஷா, அனுபம் கெர்... ஆகிய அற்புதமான கலைஞர்களின் அழுத்த மான நடிப்பில் உருவான ஆர்ப்பாட்டம் இல்லாத படம். இதை எதற்கு என்னைப் பார்க்கச் சொல்கிறார்?


'இந்தப் படத்தை தமிழ்லே எடுக்கறோம். நீங்கதான் வசன கர்த்தா'.

வாயில் வார்த்தை வராமல் தடுமாறு கிறேன். அவர் கண்கள் சிரிக்கின்றனவோ?

'இது குறுகிய காலத் தயாரிப்பு. ரெண்டு மாசத் துலே முழுப் படமும் முடிச்சாகணும்'.



என்னிடமும் டைரக்டர் சக்ரியிடமும் அவர் சொல்ல அது எப்படி முடியும் என் கிறதுபோல் நாங்கள் ஒரு வரை ஒருவர் பார்த்துக் கொள்கிறோம். ''முடிச்சுட லாம். திட்டமிட்டு செயல் பட்டா ஒரு கஷ்டமும் இல்லே. ஐ வில் டேக் கேர்.'' சட்டென்று ஒரு நம்பிக்கை அலையாகப் பரவுகிறது.



**இரா. முருகன்**

அடுத்த மூன்று வாரத்தில் மும்முரமாக 'வெண்ட்ஸ்டே'யின் தமிழ் ஸ்கிரிப்ட் உரு வாகிறது. தினமும் நீண்ட உரையாடல்கள். காட்சி அமைப்பு, கதாபாத்திரங்கள் பற்றிய சர்ச்சைகள். கமல் என்ற பன்முகத் தோற்றம் கொண்ட மாபெரும் கலைஞனின் ஆளுமை மெய் மறக்க வைக்கிறது.

'வசனம் எழுதறதை விட மௌனத்தை எழுதறதுதான் கஷ்டம்'.

கமல் நடந்து கொண்டே என் எழுத்துக்கு ஜீவன் அளிக்கிறது போல் உரக்கப் படித்தபடி சில திருத்தங்களுக்கான ஆலோசனை தெரி விக்கிறார். 'பாதி வார்த்தை, பாதி வாக்கியம் சொன்னாலும் பரவாயில்லை. அதுக்குப் பின் னாலே ஓர் அர்த்தமுள்ள மௌனம் பொருத்த மாக இழைந்து வந்தா நீங்க சொல்ல வேண்டி யதை முழு வீரியத்தோடு சொல்லிவிட்ட மாதிரிதான்'. அந்தக் கண்கள் எத்தனையாவது முறையாகவோ சிரிக்கின்றன.

'திரைக்கதை சவாலான இலக்கிய வடி வம். வசனம் எழுதறது அதிலே ஒரு சிறிய பகுதி மட்டும்தான். தமிழ் எழுத்தாளர்கள்லே திரைக்கதை வடிவத்தைச் சரியாகப் புரிந்து கொண்டவர்கள்'. சொல்லி நிறுத்துகிறார். அர்த்தமுள்ள மௌனம். நீங்க முயற்சி செய்யலாமே என்பது போல் புருவம் உயர்த்தி என்னைப் பார்க் கிறார்.

''கிட்டத்தட்ட படப் பிடிப்பு முழுக்க ஹைதரா பாத்தில் வச்சுக்கலாம்னு இருக்கேன். வந்துடுங்க.'' அன்புக் கட்டளை. ''ஆஃபீஸ்' இருக்கே?'' வாரக் கடைசியிலே வர

லாமே? வாரக் கடைசியில் மனமும் உடலும் பயணத்துக்குத் தயாராக இருக்கின்றன.

ஹைதராபாத் ராமோஜி ராவ் ஃபிலிம் சிட்டி உணவு விடுதி. அவசரஅவசரமாக டைரக்டர் சக்ரியோடு சாப்பிட்டுக் கொண்டிருந்த தோட்டாதரணி, அலம்பிய கை காயும் முன்னால் சக்ரியோடும் ஒளிப்பதிவாளர் மனோஜ் சோனியோடும் ஷூட்டிங் ப்ளோருக்கு ஓடுகிறார்.

''போலீஸ் கமிஷனர் ஆபீஸ் பார்த்திருக்கீங்களா?'' அந்த அவசரத்திலும் என்னைப் பார்த்து விசாரிக்கிறார் தோட்டா.

நான் எழுதிய காட்சி நினைவு வருகிறது. எழுத்தில் வடித்தது எழுந்து நிற்பதைக் காண உடனே வரச் சொல்லிவிட்டு தோட்டா துப்பாக்கியிலிருந்து விடுபட்ட மாதிரி பறக்கிறார்.

'ஹலோ'... குரல் கேட்டு நிமிர்கிறேன். மிடுக்கான காக்கிச் சட்டையில் 'ஐ.ஜி.ராகவன் மாரார்' என்று பெயர் அறிவிக்கும் பேட்ஜில் மோகன்லால். என் கரத்தைக் குலுக்கி வரவேற்கிறார். நான் பெயர் வைத்துப் படைத்த பாத்திரம் இப்படி ஆறடி உயர ஆஜானுபாகுவாக அவதாரம் எடுத்து எனக்கு முன்னால் நிற்கும் அனுபவம் முற்றிலுமே புதியது. சினிமாவே தனி அனுபவம்தான்.

மோகன்லாலோடு பேசிக்கொண்டிருக்கும்போது வெளியே இருந்து மொபைலில் குறுஞ்செய்தி. கமல் வந்து விட்டார் என்கிறது எஸ்.எம்.எஸ்.

கமலைச் சந்திக்க அவருடைய ஊர்திக்குச் செல்கிறேன். அதற்குள் அவரே இறங்கி ஓடி வருகிறார்.

அவர் முகத்தில் கோபம். கண்கள் சிவந்து ரௌத்ரமே உருவெடுத்தது போல் என் முன் வந்து நிற்கிறார். 'நான் என்ன தப்பு செய்தேன் கமல் ஸார்? கேட்க வாயெடுக்கும் முன் அவர் கணீரென்ற குரலில் பேச ஆரம்பித்து விடுகிறார். குற்றம் சாட்டும் குரல். அவர் விரல் நீண்டு என்னைச் சுட்டுகிறது.

''ஏன் நான் ஆத்திரப்படக் கூடாதா?''

அவர் என் மேல் கோபப்படவில்லை. ஒரு முக்கிய காட்சியில் உரையாடல் எப்படி இருக்கலாம் என்று யோசித்தவர் சட்டென்று மனத்தில் பொறி தோன்ற எழுந்து ஓடி வந்திருக்கிறார்.

ராமோஜி ராவ் பிலிம் சிட்டியில் இருந்து பஞ்ஜாரா ஹில் பகுதிக்குப் படப்பிடிப்பு தளம் மாறுகிறது. கீழே இருந்து மொட்டை மாடிக்குப் போக 280 படிகள்.



**“ஏன் நான் ஆத்திரப்படக் கூடாதா?”**

கமல் தடகள விளையாட்டு வீரர் போல் நடுவிலே ஒரு இடத்திலும் மூச்சு வாங்காமல் இயல்பாகப் படி ஏறி பதினாலாம் மாடியில் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். மூச்சு வாங்க கையில் லாப்டேப் கம்ப்யூட்டரோடு நான் மேலே போகிறேன். உரையாடலைப் படித்து விவாதித்து முடிவு செய்கிறோம். கமல் சுபாவமாக நடந்து ஓரமாகப் போய் எட்டிப் பார்க்க ஷூட்டிங் ஆரம்பம். காட்சி முடிந்து அறைக்குத் திரும்பியவர் என்ன யோசித்தாரோ. மறுநாள் காலை பதினாலு மாடி ஏறி வந்ததும் வராதுமாக, 'நேத்து எடுத்த கடைசி ஷாட்டை திரும்ப எடுத்துடலாம்'. தொடர்ந்து வசனம் வரும் அந்தக் காட்சியின் இறுதிப் பகுதியில் பேச ஆரம்பித்து சட்டென்று நிறுத்துகிறார். பேச்சு மொழி இல்லாமல் பாடி லேங்க்வேஜில் ஏதோ செய்கிறார். படத்தில் பதினைந்து செகண்ட் மட்டும் வரும் அந்தக் காட்சி. ஷூட்டிங்கில் ஈடுபட்டிருக்கும் முழு யூனிட்டுமே எழுந்து கைதட்டுகிறது. எந்தச் சலனமும் இல்லாமல் கமல் படி இறங்கிக் கொண்டிருக்கிறார்.

சாயங்காலச் சூரியனின் இதமான அந்தி; பக்கத்து பள்ளிவாசலில் தொழுகைக் குரல்; அப்புறம் முழு அமைதி. மனசுக்குள் வியாபித்துக் கொண்டிருந்தன. இவற்றை திரைக்கு எழுதுவது எப்படி? தெரியும். கமல் சொல்லிக் கொடுத்திருக்கிறார். ●

எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்

**? லஞ்ச ஒழிப்பு நடவடிக் கையாக, பத்திரப் பதிவுக் கட்டணத்தை வங்கிக் காசோலை மூலம் செலுத்த வேண்டும் என தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது பற்றி...?**



* தாங்கும் பொம்மை!

! ஹி...ஹி...ஹி... வங்கிக் காசோலை மூலம் கட்டணத்தைச் செலுத்தினா பத்திரப் பதிவுக்கு லஞ்சம் வாங்குவது ஒழிஞ் சுடுமா? எந்தப் புத்திசாலி போட்ட உத்தரவோ! கொக்கு தலையில வெண் ணெய் வைச்சுப் பிடிக்கிற கதைதான்!

● தே.பட்டு, கோவை ❑

**? மாந்திரீக சக்தி கிடைக்க ஆறு குழந்தைகளைக் கொன்றதாகச் சொல் கிறாரே சேலம் ஆத்தூரைச் சேர்ந்த பெரு மாயி? இதுபோன்ற கொடுமை களுக்குக் காரணம் என்ன...?**


! சுதந்திரம் பெற்று அறுபதாண்டுகளுக்கு மேல் ஆகியும், சரியான, தரமான கல்வி அறிவு மக்களுக்குப் புகட்டப்படாததுதான் இது போன்ற கொடுமை களுக்கு அடிப்படைக் காரணம். மத நம்பிக்கைக்கும் மூடநம்பிக்கைக்கும் இடையே யான வேறுபாட்டை உணர்த் தும் நல்ல கல்வி அறிவு தேவை. இறையுணர்வுடன் கூடிய கல்வி, மனிதாபிமானத் தையும் நன்னடத்தையையும் வளர்க்கும். அதைப் புறக்கணித் தால் அசுர சக்திகள்தான் அவ்விடத்தில் புகும்.

● எம்.செல்லையா, சாத்தூர்

**? ம.தி.மு.க.வில் உள்ள பல மூத்த நிர்வாகிகள் எந்த ஒரு பதவி சுகத்தையும் அனுபவித்ததில்லை என்று வைகோ கூறியுள்ளது பற்றி...?**

! அடிப்படைச் சிந்தனையே தவறா யிருக்கிறதே! பதவி எப்படி 'சுகம்' ஆகும்? ஜனநாயகத்தில் அது பொறுப்பு அல்லவா? பொறுப்பற்றவர்களுக்குத்தான் பதவி சுகமாகும்.

# இந்தியா சர்வாதிகார நாடு என்கிறாரே சீமான்?



* தெரியாத மூன்று!

நீங்கள் கேட்டவை - தராசு

● **சரா.ஏ.முரளி,**
**கள்ளக்குறிச்சி**

*? ஸ்டாலினும் அவர் மனைவியும் உடல் உறுப்புகளை, தங்கள் வாழ்க்கைக்குப் பிறகு பயன்படுமாறு தானம் செய்வதாக அறிவித்துள்ளனரே?*

! வரவேற்கத்தக்க முன்னுதாரணம்!

● **ஆர்.அஜிதா, கம்பம்** ★

*? மதுரை அரசு மருத்துவ மனையில், ஆகஸ்ட் 24ல் இருபது பேர் கொண்ட டாக்டர் குழு, மூன்று மணி நேரத்தில் பதினான்கு பேருக்குப் புற்றுநோய் ஆபரேஷன் செய்து சாதனை படைத்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

! சாதனைக்காக அரங்கேறிய சாகசமா என்று ஆராய ஒரு குழு விரைந்துள்ளது. அந்தக் குழு வழங்கும் தீர்ப்பு, இச்சம்பவம் மருத்துவத்துறை காட்டும் மனிதாபிமானமா அல்லது கோணல் புத்தியா என்பதை உணர்த்தும்.

● **கே.ஆர்.பத்மா,**
**சென்னை- 42.**

*? சமச்சீர் கல்வி முறை, அடுத்த கல்வியாண்டு முதல் அமுல்படுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது பற்றி?*

! சமச்சீர் கல்வி முறை, கல்வியின் தரத்தை உயர்த்தி, சமச்சீர் செய்வதாக இருக்க வேண்டும். குறைத்து, சமச்சீர் செய்வதாயின் எதிர்ப்பு எழும்.



● பதவிக் குழப்பம்



● சம்மன் விளையாட்டு!



● பாதிக் கணக்கு!



● 'சோதனை' முயற்சி!

ஏற்கெனவே எதிர்ப்பு ஆரம்பமாகி, நீதிமன்றம் வரை போய் விட்டது.

● **அவ்வை கே.சஞ்சீவி பாரதி, கலிங்கியம்**

*? ''காங்கிரஸ் இல்லாமல் தி.மு.க. ஆட்சி நடத்த முடியாது'' என்கிறாரே ஞான சேகரன்?*

! அது தமிழ்நாட்டில்; தி.மு.க. இல்லாமல் காங்கிரஸ் ஆட்சி நடத்த முடியாது - டெல்லியில்! கணக்குச் சரியாப் போச்சில்லே!

● **பி.பத்மாவதி,**
**அரங்கநாதபுரம்**

*? ஆன்மிக இதழ்களில் கோயில்களைப் பற்றிப் போட்டே பக்கங்களை நிரப்புகிறார்களேயொழிய, நல்ல ஆன்மிக விஷயங்களை அதிகம் வெளியிடுவதில்லையே?*

! சமயம் என்பது ஆரம்பப் பாடம். ஆன்மிக உயர்வு என்பது இறுதி நிலை. உங்கள் தேவைக்கு ஏற்ப பத்திரிகை அல்லது புத்தகங்களைப் படிக்கலாமே!

● **மலை அரசன், வேலூர்.**

*? ''இனி தமிழகத்தில் நாங்கள் இல்லாமல் எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வர முடியாது'' என்கிறாரே திருமா?*

! ஆமாம்; ஆமாம்; கோபுரத்தைப் பொம்மைதான் தாங்குகிறது!

● **எஸ்.டி.எஸ். கோவிந்த ராஜன், கோவை-9**

*? தேசபக்திக்காக திலகர்*

***நடத்திய பிள்ளையார் ஊர்வலங்கள், இன்று வேடிக்கை, மதவெறி, ஆடம்பரம், ஆர்ப்பரிப்பு என ஆகிவிட்டதில் வருத்தமில்லையா?***

! வருத்தம்தான். ஆனால், இந்த வருஷம் அசம்பாவிதம் ஏதும் ஏற்படாததில் சந்தோஷமும்கூட.


● **பா.அசோக், விருதுநகர்**

***? ஆண்-பெண் இருபாலரும் மருத்துவப் பரிசோதனை சான்றிதழ் பெற்ற பிறகே திருமணம் செய்துகொள்ளும் வகையில் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நடிகை மனோரமா சொல்கிறாரே?***

! திருமணத்துக்கு முதல் தேவை மன



**✱ தானத்தில்...**



**✱ ...சிறந்தது!**

ஒற்றுமை. மனங்கள் ஒன்றுபட்டால் உடல் சோதனை மட்டுமல்ல; வாழ்க்கையில் ஏற்படக்கூடிய வேறு பல சோதனைகளையும் வெல்லும் உறுதி பிறந்து வரும். எனவே, மனோரமாவின் கோரிக்கையும் தன்னிச்சையான நடவடிக்கையாக இருக்க வேண்டுமேயன்றி சட்டபூர்வமானதாக அல்ல.

● **பி.ஜெயபிரகாஷ், சர்கார்பதி**

***? 'இந்தியா போன்ற கருத்துச் சுதந்திரமற்ற சர்வாதிகார நாடு உலகில் வேறு உண்டா?' என்று சீமான் கேட்கிறாரே?***

! சீமானுக்கு மூன்று விஷயங்கள் தெரியவில்லை! 1. சர்வாதிகார நாடுகள் பற்றித் தெரியவில்லை. 2. இத்தகைய ஒரு கேள்வியை அவர் சர்வாதிகார நாட்டில் எழுப்பவே முடியாது என்பது தெரியவில்லை. 3. எந்த ஜனநாயகத்திலும் உரிமைகளைப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்; துஷ்பிரயோகம் செய்தால் சட்டம் கண்டிப்பாகச் செயல்படும் என்பது தெரியவேயில்லை.

● **மு.மதிவாணன், அரூர்**

***? ஸ்விஸ் வங்கிகளில் கறுப்புப் பணத்தை வைத்துள்ள இந்தியர்களின் பட்டியலைத் தர முடியாது என்று சுவிஸ் வங்கிகளின் கூட்டமைப்பு கூறியுள்ளதே?***

! ஸ்விஸ் நாட்டுச் சட்டப்படி அந்த வங்கிகள் பாதுகாப்பு தருகின்றன. அதை நாம் குறைகூற முடியாது. நம் நாட்டுச் சட்டப்படி வரி ஏய்க்கிற, லஞ்ச வருவாயை ஒளிக்கிற அரசியல்வாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்காதது பெரும் தவறு. அதுதான் தொழில் - வர்த்தகத் துறையினருக்கும் தப்பு செய்யும் துணிவைக் கொடுக்கிறது.

● **எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்**

***? பனையூர் இரட்டைக் கொலை வழக்கில், தம்மிடமுள்ள ஆதாரங்களை விஜயகாந்த் முன்வந்து காவல்துறையிடம் தரவேண்டும் என்று கூறி, காவல்துறை சம்மன் அனுப்பியுள்ளதே?***

! அரசியல்ரீதியான சம்மன்ஸுக்கும் புலனாய்வு ரீதியான சம்மன்ஸுக்கும் வித்தியாசம் உண்டு. அது இருதரப்பினருக்கும் தெரியும்; கவலைப்படாதீங்க!

**❑ ரூ. 150 பரிசு பெறுபவர்: தே.பட்டு, கோவை**

**✱ ரூ 75 பரிசு பெறுபவர்: ஆர்.அஜிதா, கம்பம்**

**எபிசோட் 1:** பீகார் மாநிலத் தலை நகரான பாட்னாவின் புறநகர்ப் பகுதி. கடந்த ஜூன் மாதம் அங்கே ஒரு வீட்டுக்குள்ளே இருந்து பயந்து பயந்து வெளியில் தலைகாட்டிய, சுமார் எட்டு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன், சட்டென்று தெருவில் இறங்கி ஓட ஆரம்பித்தான். அவனைத் தொடர்ந்து வீட்டுக்குள்ளே இருந்து வெளியில் வந்த ஒரு முரட்டு ஆசாமி, அந்தச் சிறுவனைத் துரத்திப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து வீட்டுக்குள் அடைத்தான்.

**எபிசோட் 2:** இதைப் பார்த்த அக்கம் பக்கத்தார், உடனடியாக போலீஸுக்குத் தகவல் கொடுக்க, காவல் துறையினர் விரைந்து வந்து, அந்த வீட்டைச் சோதனையிட்டு சிறுவனை மீட்டனர். முரட்டு ஆசாமியும் கைது ஆனார்.

**எபிசோட் 3:** காவல் துறையினரால் மீட்கப்பட்ட அந்தச் சிறுவனின் பெயர் சாய் என்று மட்டுமே புரிந்தது. வேறு ஒரு விவரமும் கிடைக்கவில்லை. காரணம் பையனுக்குத் தமிழ் மட்டுமே தெரியும். பாட்னா போலீஸுக்குப் பையன் பேசும் மொழி தமிழ் என்று தெரிந்ததும், பாட்னா போலீஸ் சூப்பிரண்டன்டென்டுக்கு ஃபோன் செய்தார்கள். மறுமுனையில், 'மே மலர் விழி போல் ரஹி ஹூம்' என ஒலித்தது பையன் செய்த அதிர்ஷ்டம். அடுத்த அரை மணி நேரத்தில் பாட்னாவில் ஐ.பி.எஸ். அதிகாரியாகப் பணியாற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மலர்விழி ஸ்பாட்டில் ஆஜர் ஆனார்.

**எபிசோட் 4:** மலர்விழி, சிறுவனிடம் தமிழில் பேசி, விவரங்கள் அறிய முயன்றார். பையனின் ஊர் சென்னை. தி. நகரில் பெற்றோர்கள் வசிக்கிறார்கள். ஒரு சினிமா தியேட்டருக்கு அருகில் இருக்கும் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான் என்பது போன்ற ஒரு சில தகவல்களுக்கு மேல் அந்தச் சிறுவனுக்குச் சொல்லத் தெரியவில்லை. அவ்வளவு ஏன்? 'சென்னையிலிருந்து யாரோ என்னை அழைத்து வந்தார்கள்' என்று சொல்கிறானே தவிர யார், எதற்காக, எப்படி அழைத்துக்

* சாய்



# கதையல்ல;

கொண்டு வந்தார்கள் என்று சொல்லத் தெரியவில்லை. மலர்விழி சென்னை தி.நகர் காவல் நிலையத்துக்கு உடனடியாகத் தகவல் அனுப்பி வைத்தும், தி.நகர் போலீஸால் சிறுவனின் பெற்றோரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

**எபிசோட் 5:** சிறுவன் சாய், ஒரு வார காலம் மலர்விழியின் வீட்டிலேயே தங்கி இருந்தான். இதற்குள், சாய் பற்றிய செய்தி, பத்திரிகைகளிலும், டி.வி. சேனல்களிலும் வெளியானது. பீகார்

போலீஸ், சிறுவனை 'அப்னா கர்' என்ற பாட்னா அரசு சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்தது. இந்தி தெரியாததால், மற்றவர்கள் யாருடனும் பேச முடியவில்லை; பள்ளிக்கூடம் போக முடியவில்லை; அப்னா கர் இல்லத்தில் மனம் நொந்து நாட்களைக் கடத்தினான் சாய்.

**எபிசோட் 6:** மீடியா மூலம் தகவல் அறிந்த சேவாலயா தொண்டு நிறுவனத்தின் முரளிதரன், பாட்னா போலீஸாரிடம் 'அந்தச் சிறுவனைப் பராமரிக்கும் பொறுப்பை 'சேவாலயா' ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளது' என்று தெரிவித்ததுடன், 'சாய் சென்னையில் இருந்தால் அவனுடைய பெற்றோரைத் தேடிக் கண்டு பிடிப்பதும் சுலபமாக இருக்கும்; அது முடியாமல் போனாலும், பையன் தனக்குப் பரிச்சயமான தமிழ் நாட்டிலேயே படிப்பைத் தொடருவது நல்லது' என்றும் தெரிவித்தார்.



# நிஜமாலுமே நிஜம்!

**எபிசோட் 7:** தொடர்ந்து பாட்னா மற்றும் திருவள்ளூரில் உள்ள குழந்தைகள் நல வாரியங்களுடன் தொடர்பு கொண்டு உரிய அனுமதியுடன், சிறுவனை தமிழ்நாட்டுக்கு அழைத்துக்கொண்டு வரும் நடவடிக்கையில் இறங்கினார் முரளிதரன். போலீஸ் மற்றும் பாட்னா குழந்தைகள் நல வாரியத்தின் அழைப்பின் பேரில் பாட்னாவுக்குச் சென்றார். சட்டபூர்வமான நடவடிக்கைகளை முடித்துவிட்டு, பையனை அழைத்துக் கொண்டு கடந்த மாதம் 28ஆம் தேதி சென்னைக்கு வந்தார் முரளிதரன். இப்போது சாய், சேவாலயாவின் அரவணைப்பில் தன் பெற்றோர்களைச் சந்திக்க ஆர்வமாக இருக்கிறான்.

**– கௌதம் ராம்**

* முரளிதரனுடன் சாய்...

தமது மகன் சுந்தர், வேறு சாதிப் பெண்ணை பதிவுத் திருமணம் செய்து கொண்டான் என்ற செய்தியை சங்கரராமன் கேட்டபோது மனம் புயல் அடங்காத கடலாய்க் கொந்தளித்தது. தாயில்லாத தனது ஒரே மகன் மீது பாசத்தை ஊட்டி வளர்ந்த காலங்களில் அவனது விருப்பங்களுக்கு எந்தத் தடைகளும் போட்டதில்லை. அவன் வளர்ந்து கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த தருணத்தில் வேறு சாதிப்பெண்ணோடு நெருங்கி பழகுகிறான் என்ற செய்தி கேட்டபோது வீட்டையே ரணகளமாக்கினார்.

காதல் பற்றிய புரிதல் அப்பாவுக்கு ஏன் குறைந்துபோனது என்று வாக்குவாதத்தில் இறங்கித் தோற்றுப்போன சுந்தர், பதிவுத் திருமணம் செய்துகொண்டு மனைவியோடு மும்பைக்கு ரயிலேறினான்.

போகட்டும். தனக்கொன்றும் வயது அதிகமாகி முடங்கிக் கிடக்கும் நிலை இல்லை. தனியாகக் காலத்தைத் தள்ளுவது இப்போதைக்குப் பெரிய சுமை இல்லை என்று புலம்ப ஆரம்பித்தார்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு சுந்தரிடமிருந்து கடிதம் வந்தது. தன்னை மன்னித்து தனது மனைவி பிருந்தாவை மருமகளாக ஏற்றுக்கொள்ளும்படி எழுதியிருந்தான்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் சங்கரராமனுக்குக் கோபம் தலைக்கேறியிருந்தது. கடிதத்தைச் சுக்குநூறாகக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்தார். சற்றும் குறையாமலிருந்தது அவரது பிடிவாதக்குணம்.

சுந்தர், தந்தையைச் சமாதானப்படுத்த தொடர்ந்து கடிதம் எழுதியும் எந்தப் பதிலும் வராமல் போகவே, பின்பு கடிதம் எழுதுவதையே நிறுத்தியிருந்தான்.

தந்தைக்கும் மகனுக்குமான உறவு துண்டிக்கப்பட்டு, மகனைப் பற்றிய சிந்தனைகளற்று வாழ்க்கை எப்போதும்போல் நகர்ந்துகொண்டிருந்தது! பத்து வருடங்கள் தாண்டியதுகூடத் தெரியாமல்.

அன்று பென்ஷன் பணம் எடுக்க வங்கிக்குச் சென்ற சங்கரராமன், வழக்கம்போல் பணத்தை எடுத்துவிட்டு திரும்புகையில், வங்கியில் வேலை பார்க்கும் வரதப்பன் ஓடி வந்து அவர் கரம் பற்றினான்.

''ஸார் நல்லா இருக்கீங்களா? நான் வரதப்பன். உங்க மகன் சுந்தரோட ஃப்ரெண்ட். இதுக்கு முன்னால மும்பைலதான் வேலை பார்த்துக்கிட்டு இருந்தேன். உங்க மகன் சுந்தரை மும்பைல அடிக்கடிப் பார்ப்பேன். அவன் குழந்தைக்கு...!'' அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சங்கரராமனுக்குச் சட்டென்று கோபம் வந்தேறியது.

''அவனப் பற்றி என்கிட்ட எதுக்குச் சொல்ற? அவன் எனக்கு மகனும் இல்ல, நான் அவனுக்கு அப்பனும் இல்ல!'' சொல்லிவிட்டு வேகமாய் வங்கியை விட்டு வெளியேறினார் சங்கரராமன்.

வழி நெடுகிலும் மகனைப் பற்றிய செய்தி அவரைக் குடைந்துகொண்டிருந்தது. இரவு படுக்கையில் விழுந்தபோதிலும் மகனைப் பற்றிய நினைவுகள் விலக

# பரிகாரம்

மறுத்துத் தூக்கத்தைத் தடைபோட்டன.

கண்களில் இலேசாய்க் கண்ணீர் உருண்டோடி அவர் காதுகளை நனைத்திருந்தது. சுந்தருக்கு என்ன குழந்தை பிறந்திருக்கும் ஆண் குழந்தையா அல்லது பெண் குழந்தையா? ஒரு குழந்தையா இல்லை அதற்



ஐரேனிபுரம் பால்ராசய்யா

கும் மேலுமா? அவனது மனைவி கறுப்பா இல்லை சிவப்பா, அவனுக்குப் பொருத்தமானவளா என்றெல்லாம் அடுக்கடுக்கான கேள்விகள் அவரைச் சூழ்ந்துகொண்டு தூக்கத்தை வழி மறித்தன. அன்றிரவு தூக்கம் வராமலேயே பொழுது விடிந்திருந்தது.

**கா**லை பத்து மணி வாக்கில் வரதப்பனைப் பார்க்க வங்கிக்குச் சென்றார் சங்கராமன். அவரது வருகையைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக்கொண்டு தனது வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தான் வரதப்பன்.

நேற்று வீராப்பாய்ப் பேசிவிட்டு இன்று

அவனிடம் எந்த முகத்தை வைத்துக் கொண்டு தன் மகனைப் பற்றியும் அவனது குழந்தையைப் பற்றியும் விசாரிப்பது என்ற கவலை வேறு அவரை அலைக்கழித்தது.

கவுண்டரில் பணத்தை எண்ணிக் கொண்டிருந்த வரதப்பனின் அருகே வந்து நின்று அவனையே உற்று பார்த்துக் கொண்டிருந்தார் சங்கரராமன்.

''பணம் எடுக்கணுமா ஸார்? வரதப்பனே வலிய கேட்டபோது, சற்று ஆசுவாசமாக இருந்தது.

''என் மகன் விலாசம் கிடைக்குமா?'' ஏதோ செய்யக்கூடாத தவறை செய்துவிட்டதுபோல் தாழ்ந்த குரலில் கேட்டார் சங்கரராமன். வரதப்பன் சுந்தரின் விலாசமும் அவனது அலைபேசி எண்ணையும் ஒரு துண்டுச் சீட்டில் எழுதி தந்தான்.

''ரொம்ப நன்றிப்பா! என்றபடியே வீட்டுக்கு நடந்தார். தனது மகனிடம் தொலைபேசியில் பேசுவதைவிடச் சொல்லாமல் கொள்ளாமல் நேரில் சென்று ஒருமுறை பார்த்துவிட்டு வருவது நல்லதென்று தோன்ற, மறுநாள் காலை மும்பைக்கு ரயிலேறினார் சங்கரராமன்.

**இதுமாதிரி என் அப்பாகிட்ட பழகுவானான்னு தெரியாது. அதனால அவருக்கு அந்த சந்தோஷம் கிடைக்காமலேயே போயிடும்!**

மும்பையில் தனது மகனின் முகவரியைக் கண்டுபிடித்து அவனது வீட்டுக் கதவைத் தட்டினார். கதவைத் திறந்த சுந்தருக்கு வெளியில் தனது அப்பா நிற்பதைப் பார்த்துத் திகைத்துப் போய், ''அப்பா'' என்றழைத்தவாறு அவரைக் கட்டி அணைத்தான். அவர் கையிலிருந்த சூட்கேசை வாங்கிவிட்டு கரம் பற்றி வீட்டுக்குள் அழைத்து வந்தான். தன்னை வெறுத்திருந்த அப்பாவுக்கு எப்படித் திடீர் பாசம் வந்தது என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டே வீட்டுக்குள் நடந்தான்.

''பிருந்தா, அப்பா வந்திருக்காரு!'' என்று உரக்கச் சத்தமிட்டான். சமையலறையிலிருந்து வெளிப்பட்ட பிருந்தா ஓடிவந்து அவர் காலில் விழுந்தாள்.

''உங்க சம்மதம் இல்லாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டோம். எங்களை மன்னிச்சிடுங்க மாமா!''

''நல்லாயிரு'' என்றபடியே தனது பேரக் குழந்தையைத் தேட ஆரம்பித்தார்.

''உங்களுக்கு எத்தனை குழந்தைங்க?''

''ஒரே பையன்தானப்பா, பேரு ஈஸ்வர். ஒன்பது வயசு ஆகுது.''

சங்கரராமன் குளித்து முடித்து உடை மாற்றிவிட்டு வந்தபோது, சுந்தரின் மகன் ஈஸ்வர் அவனது அம்மாவை விட்டு விலகாமல் அவள் போகுமிடமெல்லாம் பின்னால் போய்க்கொண்டிருந்தான். பேரனைக் கண்ட சந்தோஷத்தில் அவன் கைகளைப் பிடித்தார் சங்கரராமன். ஈஸ்வர் அவரது கைகளை உதறிவிட்டு அவன் அம்மாவின் பின்னால் முகத்தை மறைத்தான்.

''டேய், உன் தாத்தாடா!'' என்றான் சுந்தர்.

''தாத்தான்னா?''

''என்னோட அப்பா!''

''உங்க அப்பாவுக்கு முடி வெள்ளையா இருக்கு. உங்களுக்கு முடி கறுப்பா இருக்கு ஏன்?''

''எனக்கு வயசாகுறப்போ என் அப்பா மாதிரியே வெள்ளையாயிடும்!''

''எனக்கெப்போ முடி வெள்ளையாகும்!'' தனது பேரனின் கேள்விகளைக் கேட்டதும் சங்கரராமனுக்கு முகம் சுருங்கியது.

''சுந்தர், பேரனுக்கு ஏதாவது பிரச்னையா?'' ஒருவிதப் பதற்றத்தோடு கேட்டார் சங்கரராமன்.

''அவனுக்கு இப்போ வயசு ஒன்பது ஆனா ரெண்டு வயசு பையனோட புத்திதான் அவன்கிட்ட இருக்கு. ஒரு மாசத்துக்கு முன்னால வரைக்கும் நார்மலாத்தான் இருந்தான். ஸ்கூல்ல ஏ கிரேடு மார்க் வாங்கி நல்லா படிக்கிறவன், தமிழ், ஆங்கிலம், இந்தின்னு மூணு மொழியிலயும் நல்லா பேசுவான். திடீர்னு ஒரு முறை மயக்கம் போட்டுக் கீழே விழுந்துட்டான். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனோம். இவனுக்கு டிஸ்கசோசியேட் அம்னீஷியாங்கற நோய் வந்திருக்கிறதனால பழசெல்லாம் மறந்துபோய் ரெண்டு வயசு குழந்தையோட ஞாபகம்தான் இப்போ அவன்கிட்ட இருக்கு. படிப்படியா இழந்துபோன ஞாபகம் திரும்பிவர ஒரு வருஷம் ஆகுமாம். சென்னைல ஒரு டாக்டர் இருக்காராம். அவர்கிட்ட சிகிச்சை எடுத்தா ஒரு மாசத்துல பழைய ஞாபகங்கள் வந்துடும்னு சொல்றார். அடுத்தவாரம் அவரைப் போய்ப் பார்க்கலாம்னு இருக்கோம்!'' சுந்தர், சொல்லி முடித்தபோது சங்கரராமன் சற்று தடுமாறிப் போனார்.

பேரனைப் பரிவுடன் பார்த்தவர், அவனை அருகே அழைத்து மடியில் அமர வைத்துப் பேச ஆரம்பித்தார். அவனும் அவருடன் ஒட்டிக்கொண்டான்.



''உன் ஆட்டோ என்ன விலை தம்பி?''

''ஏன் கேட்கறீங்க?''

''நடந்து போய்க்கிட்டு இருந்தவன்கிட்டே நீ தானேப்பா ஆட்டோ வேணுமான்னு கேட்டே..?''

- ராஜபாளையம் எஸ்.சக்தி

**ஒ**ரு வாரம் ஓடிப்போனதே தெரியவில்லை. பேரனோடு இருந்ததில் நன்றாகப் பொழுது போய்க்கொண்டிருந்தது சங்கரராமனுக்கு.

''என்னங்க ஈஸ்வரைக் கூட்டிகிட்டு சென்னைக்குப் போய் டாக்டர் பார்க்கணும்னு சொன்னீங்களே எப்போ புறப்படுறீங்க?'' அவனது மனைவி அமைதியாய்க் கேட்டாள்.

''என் அப்பாவும் நம்ம பையனும் எவ்வளவு சந்தோஷமா பழகுறாங்க பாத்தியா? ஊருல அப்பாவுக்கு எதிரா நாம் ரெண்டு பேரும் இருமணம் பண்ணிக்கிட்டு இங்க வந்துட்டோம். இதுவே அப்பாவோட சம்மதத்தோட நடந்திருந்தா, நம்ம குழந்தையை என் அப்பா தூக்கிக் கொஞ்சி விளையாடிச் சந்தோஷப்பட்டிருப்பார். அந்தப் பாக்யத்தை அவருக்கு நாம குடுக்கல. அதை இப்போ அனுபவிக்கிறார். இந்த நேரத்துல அவனுக்குச் சிகிச்சை கொடுத்துப் பழையபடி ஈஸ்வர் மாறிட்டான்னா, இதுமாதிரி என் அப்பாகிட்ட பழகுவானான்னு தெரியாது. என் அப்பாவுக்கு அந்தச் சந்தோஷம் கிடைக்காமலேயே போயிடும்!''

ஊரில் ஒற்றைத் தனிமரமாய் விட்டுவிட்டு வந்த அவளது மாமனாரை ஒருகணம் நினைத்துக்கொண்டாள். அவருக்குச் சந்தோஷம் கிடைப்பதாக இருந்தால் அது நீடிக்கட்டும் என்று நினைத்துக்கொண்டு தாத்தாவும் பேரனும் கொஞ்சி விளையாடும் அழகை ரசித்தபடி நின்றாள் மனம் நிறைந்தவளாய்!

○



"வாழ்க்கையில துன்பம் வரும் போதெல்லாம் எதிர்நீச்சல் போடணுங்க."

"எனக்கு நீச்சல் தெரியாதுங்க."

- வீட்டுக்கட்டி மு.பெரியசாமி

# எனக்குத் தெரியாது!

"நேத்து திருட வந்தவன் உங்க வீட்டு பீரோவை தூக்கிட்டுப் போயிட்டானா?"

"ஆமாம்... பணமே இல்லாத உனக்கு எதுக்கு ரெண்டு பீரோன்னுதான்...!"

- டி.சேகர்





"நான் போருக்குக் கிளம்புகிறேன். நீ கவலைப்படக்கூடாது மகாராணி...!"

"உங்கள் பெயரில் பதினாறு இன்ஷூரன்ஸ் பாலிஸிகள் இருக்கும்போது எனக்கு என்ன மன்னா கவலை...?"

- கே.தண்டபாணி

"உன் பெண்டாட்டியைப் பொறுத்த வரை, புடைவைக் கடையும், நீயும் ஒண்ணா, எந்த விஷயத்தில?"

"புரட்டி எடுக்கற விஷயத்தில தான்!"

- வெ. சீதாராமன்




**அஞ்சலி**

# நிறைவேறாத ஆசை!

"ராஜாஜியின் பேச்சு - எழுத்து ஆகிய வற்றை நான்கு பகுதிகளாகத் தொகுத்து புத்தகங்கள் வெளியிட்டார், சமீபத்தில் மறைந்த ஏ.கே.வேங்கட சுப்ரமணியன். ஆனால், அவர் எதிர்பார்த்தபடி புத்தகங்கள் விற்பனை ஆகவில்லை. இந்நிலையில் தாம் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் இந்தப் புத்தகத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, 'அது எல்லோர் கையிலும் இருக்க வேண்டும் என்பதே என் ஆசை' என்று சொல்லி வந்தார். மாணவ - மாணவிகளுக்கும் பரிசாக அந்தப் புத்தகத்தைக் கொடுத்து வந்தார். புத்தகத்தின் விற்பனை உயர்ந்தது. ஆனால், அச்சடித்த புத்தகங்களெல்லாம் விற்றுத் தீர்வதற்கு முன்னரே அவர் இறந்துவிட்டார். இது அவரது நிறைவேறாத ஆசையாகவே போய்விட்டது" - இந்த விஷயத்தை நமக்குச் சொன்னார் நந்தினி வாய்ஸ் பொதுநல அமைப்பின் இயக்குநர் வெங்கட்ராமன்.

"ஏ.கே.வி. ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தபோது எந்தவிதக் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் நேர்மையாகப் பணியாற்றியவர். அவரது திறமையைப் பார்த்து, ஓய்வு பெற்ற பின்னரும் முதல்வர் கருணாநிதி தமது சிறப்பு ஆலோசகராக அவரை நியமித்துக்கொண்டார். உந்துனர் அறக்கட்டளையின் மூலம் திரும்பத் திரும்ப அவர் வலியுறுத்தியது நான்கு விஷயங்கள் குறித்துதான். அதில் மிக முக்கியமானது, குழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வி கொடுப்பதில், அரசு இன்னமும் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான். இந்தத் தொடக்கக் கல்விக்காக அரசின் உள்ளாட்சிகள், வரியுடன் ஒரு குறிப்பிட்ட தொகையை வசூல் செய்கின்றன. ஆனால் அந்தத் தொகை தொடக்கக் கல்விக்குப் பயன்படாமல் வேறு பணிகளுக்குத் திருப்பி விடப்படுகிறது என்பது அவரது வருத்தம். அடுத்து ரேஷனில் பொருட்கள் சரியான அளவில் மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டினார். தமிழகம், மற்றும் டெல்லியில் உணவு மற்றும் நுகர்வோர் துறைச் செயலாளராக இருந்தபோது, ரேஷன் கடையில் இருக்கும் பொருள் விநியோகப் பதிவேட்டை அந்தப் பகுதியிலுள்ள யார் வேண்டுமானாலும் பார்த்துச் சோதனை செய்யலாம் என்ற நடைமுறையைக் கொண்டு வந்தார். மூன்றாவதாக, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் சிறப்புகளை மக்கள் புரிந்து கொண்டு பயன்படுத்தவேண்டுமென விழிப்புணர்வு ஊட்டி வந்தார். கடைசியாக, தேர்தல்களில் தில்லுமுல்லு நடப்பதைத் தவிர்க்க, மக்கள் ஒவ்வொருவரும் வோட்டுச் சாவடிக்கு வர வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். வோட்டுச் சீட்டைப் பயன்படுத்தும் உள்ளாட்சித் தேர்தல்களில் அக்கிரமங்கள் நடைபெறுவதை, நேரடியாகப் பார்த்ததால் அதிலும் வோட்டுப் பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்தவேண்டுமென இறுதிவரை போராடினார். தமிழ்நாடு, ஒரு நல்ல பொது நல ஊழியரை இழந்துவிட்டது" என்கிறார் நந்தினி வாய்ஸ் வெங்கட்ராமன்.



* ஏ.கே.வேங்கட சுப்ரமணியன்

**- கௌசி**

# சினி சிப்ஸ்

உற்சாகத்தின் சிகரங்களில் உலா வந்து கொண்டிருக்கிறார் இயக்குநர் சுசி கணேசன். காரணம் கந்தசாமியின் வெற்றிதான். ஒரே வாரத்தில் 37 கோடி ரூபாய் வசூலித்துக் கொடுத்திருக்கிறதாம். இது ரஜினி நடித்த 'சிவாஜி' படத்தின் ஒரு வார வருவாயைவிட அதிகமாம்!

***(கல்லா பெட்டி பத்திரம். கந்தசாமி காலி பண்ணிடப் போறார்!)***

வேட்டைக்காரன் படத்தில் வேட்டைக்காரியாக (அதாங்க விஜய்க்கு ஜோடியாக) நடிக்கும் அனுஷ்காவின் சம்பளம் பெரிய ஒன்றரையாம். புரியலையா...? ஒன்றரை கோடியாம். 'இந்தக் கையில் சம்பளத்தை வையுங்க. அந்தக் கையில நடிப்பைத் தர்றேன்' என்பதுதான் பட்சியின் பஞ்ச் டயலாக்காம்!

***(பஞ்ச் டயலாக் நல்லாதான் இருக்கு. பங்க்சர் ஆகாம இருந்தா சரி!)***

★ ''ஆக்ஷன் கதையில் நடித்தாலும், கதைக்கு ஏற்ப நடித்தாலும் நான் எப்போதும் இயக்குநர்களின் நடிகன். அவர் என்னை எப்படி வேண்டுமானாலும் வளைக்கலாம்'' என்கிறார் சீயான் விக்ரம்.

***(உண்மைதான். வாயுள்ள பிள்ளை பொழைச்சுக்கும்!)***

★ ''படத்தின் இசை வெளியீட்டு விழா, ட்ரெய்லர் வெளியீட்டு விழாக்களை இனி நடிகைகள் யாரும் புறக்கணிக்கக் கூடாது. அப்படிப் புறக்கணித்தால் கடுமையான நடவடிக்கை பாயும்'' என்று கனல் கக்கி இருக்கிறார் தயாரிப்பாளர் அன்பாலயா பிரபாகரன்.

***('அன்பாலயா' அன்பா சொல்லலாமே...!)***



★ தி.மு.க.விலிருக்கும் மத்திய அமைச்சர் நடிகர் நெப்போலியனுக்கு, நடிகர் சங்கத் தலைவர் கம் அகில இந்திய சமத்துவக் கட்சித் தலைவர் சரத்குமார் தலைமையில் பாராட்டு விழா நடக்கவிருக்கிறதாம்!

***(நம்பவே முடியலை... நல்லது நடந்தா சரி...!)***

★ நடிகர் கருணாஸ், 'காதலுக்கு மரணமில்லை' படத்தில் சம்பளமே பேசாமல் நடிக்க ஒப்புக் கொண்டாராம். காரணம் கேட்டால், ''எனக்கு கே.டி. குஞ்சுமோன் ஸார் மீது நம்பிக்கை இருக்கு'' என்கிறார்.

***(ரொம்ப நல்லவங்களா இருக்கீங்களேப்பா...!)***

**நியூஸ் பாய்**



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.



## உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
## தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக மேனிப் பராமரிப்பில் சிந்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. சிந்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே சிந்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.




மேனிப் பராமரிப்பு என்றென்றும்